மனுநீதிக் காதல்

பதிப்பு

சி. இளங்கோ

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.

ஜூலை – 2005

மனுநீதிக் காதல்

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப் பெற்ற ஆய்வேடு

பதிப்பு

சி. இளங்கோ

நெறியாளர்

வீ. அரசு

பேராசிரியர் - தலைவர்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

ஜூலை - 2005

பதிப்புரை

ஆரம்பகாலங்களில் எழுதுதல், கற்பித்தல், வாசித்தல் முதலானவை எல்லாம் சுவடியைச் சார்ந்தே நிகழ்த்தப்பட்டன. பழந்தமிழர்கள் சுவடியில் எழுதுவதோடு மட்டுமல்லாமல் கற்களில் எழுதுவது, செப்புத் தகட்டில் எழுதுவது, சுடுமண் பானைகளில் எழுதுவது என பல்வேறு வகையான எழுதும் முறைமைகளை அறிந்திருந்தனர்.

சுவடிகளில் இலக்கியம், இலக்கணம், சித்த மருத்துவம், கூத்து என பல விஷயங்கள் எழுதப்பட்டன. ஆரம்பகாலங்களில் எழுதப்பட்ட இச்சுவடிகள் சரியாக படியெடுத்து பாதுகாக்கப்படாமையால் இன்று நமக்கு முழுமையாக கிடைப்பது அரிதாகிவிட்டது.

ஐரோப்பியர் வருகையால் பெறப்பட்ட அச்சு இயந்திரம் பல சுவடிகளை அச்சில் பெற வழிவகுத்தது. சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்து பதிப்பிக்கும் பணியில் தமிழ் அறிஞர்கள் ஈடுபட்டனர். சி. வை. தா, உ. வே. சா, ஆறுமுகநாவலர், எஸ். வையாபுரிப் பிள்ளை மற்றும் மறைமலையடிகள் போன்றோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சுவடிகளைப் பதிப்பிக்கும் பணி இன்றும் முழுமையாக முடிந்தபாடில்லை. சித்த மருத்துவச் சுவடிகள் பெரும்பாலும் இன்று பதிப்பிக்கப்படாமலேயே உள்ளன. பல சுவடிகள்

முழுமையாக கிடைக்காமலும் சிதிலமடைந்து கிடைப்பதும் இப்பதிப்புப் பணியைத் தாமதப்படுத்துகிறது. எனினும் சுவடிகளை பாதுகாத்து வைக்கும் முயற்சிகளை அரசும் தனிப்பட்ட நிறுவனங்களும் மேற்கொண்டுள்ளன. தஞ்சையில் சரசுவதிமகால் நூலகம் , சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடியியல் நூலகம், மதுரை ஆதினம் முதலான நிறுவனங்கள் சுவடிகளைப் பதிப்பித்து பாதுகாத்து வருகின்றன. மர்ரே நிறுவனமும் தொடக்க காலங்களில் சுவடிகளைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டது.

'மனுநீதிக் காதல்' என்னும் தலைப்பில் பதிப்பிக்கப்படும் இச்சுவடி யானது 'சென்னை அரசிரினர் கீழ்த்திசை சுவடியியல் நூலகத்தில்' இருந்து பெறப்பட்டது. ஓலைச்சுவடியாகவும் கையெழுத்துப் பிரதியாகவும் உள்ள இச்சுவடி (R. 5723),(R. 5026) சிதிலமடைந்தே காணப்பட்டது. கையெழுத்துப் பிரதியை ஆதாரமாகக் கொண்டே இப்பதிப்புப் பணி செய்யப்பட்டுள்ளது. கையெழுத்துப் பிரதி ஆர். ராமனுஜம், ஜி. சந்திர மௌளலீஸ்வரன் என்பவர்களால் 1955ல் எழுதி சரிபார்க்கப்பட்டது. இப்பதிப்பில் கையெழுத்துப் பிரதியில் உள்ள சில சொற்பிழைகளை முடிந்த வரை சரி செய்து பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சுவடி ஆசிரியர் பற்றியக் குறிப்பு

'மனுநீதிக் காதல்' என்ற இச்சுவடியின் ஆசிரியர் பற்றியக் குறிப்பு இச்சுவடிப்பாடலில் இடம் பெற்றுள்ளது. 'ஆக்கியோன் பெயர்' என்ற பகுதியில் அக்குறிப்பு உள்ளது.

> "கையுற்ற நெல்லிக்கனி போலறிய வென்று
>
> தெய்வச்சிலை யானுரைத்த தெள்ளமிர்த மாமிதுவே
>
> உற்றதொரு காவேரி யொன்றாய்ப் பெருகிவரச்"

என்ற பாடல் வழிகொண்டு நோக்கும் பொழுது ஆசிரியர் பெயர் 'தெய்வச்சிலையார்' என்பதை அறியமுடிகிறது. மேலும் ஆசிரியர் பற்றிய முழுவிவரமும் காலம் பற்றிய செய்தியும் அறிய முடியவில்லை.

இச்சுவடியைப் படியெடுத்தவர் பற்றியக் குறிப்பு சுவடியின் இறுதியில் அமைந்துள்ளது.

> "மிதுலப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராசர்
> குமாரன் குழந்தை வரைதல்."

இக்குறிப்பின் வழி 'அழகிய சிற்றம்பலக் கவிராசர்' என்பார் படியெடுத் தவர் என்பதை அறியமுடிகிறது.

நூல் கூறும் செய்தி

'மனுநீதிக் காதல்' என்னும் இந்நூல் 113 பாடல்களைக் கொண்டுள்ளது. தனித்தனி இயல்களாகப் பிரிக்கப்படாமல் உட்தலைப்புகள் மட்டும் பாடலில் கொடுக்கப்பட்டுள்ளன. உட்தலைப்புகள் அனைத்தும் பாடலின் தன்மைக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது. (பார்க்க பி.இ.)

– இந்நூலில் உள்ள கருத்துக்கள் 'மனு நீதி' என்ற மூல நூலையே அடியொட்டி அமைந்துள்ளது. பெரும்பாலான இடங் களில் மனு நீதியில் உள்ள வரிகளை இந்நூல் ஆசிரியர் அப்படியே கையாண்டுள்ளார். அதோடு மட்டுமல்லாமல் திருக்குறள் கருத்துக்களையும் பல இடங்களில் அப்படியே சுட்டிக்காட்டியுள்ளார். 'மனு நூலார் கூறினாரே, உரைத்தான் வள்ளுவனே' என்ற தொடர்களை ஆசிரியர் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

– இயல் பகுப்பு முறைகளிலும் இந்நூல் திருக்குறள் முதலான அறநூல்களின் முறையையே பின்பற்றுகிறது. ஆனால் எவ்வித வரிசைமுறையும் இயல் பகுப்பில் இல்லை.

– நன்மை, தீமை என்ற முரண்பாட்டுத் தன்மையில் சில தலைப்புகளின் வழி நீதிகளை ஆசிரியர் கூறுகிறார்.

(உ.ம்)

சேரிடம் –செல்லாவிடம், உதவி–உதவாமை,சரீர சுகம் –நோயணுகல் லட்சுமி இருப்பிடம் – மூதேவியிருப்பிடம், பகை – பகை வெறுப்பு.

–திருக்குறள் அடிகள்ள அப்படியே ஆசிரியர் எடுத் தாள்கிறார். (உ.ம்)

1. காலமது வறிந்துகாக்கை வெல்லுங் கூகைதனைக்
   காலமது தப்பினாற் காக்கைதனைக் கூகை வெல்லும்
2. பொருளில்லாதார்க் கிந்தப் பூமியிலே கீர்த்தியில்லை
   அருளில்லா தார்க்கு அவ்வுலகத் தேதுமில்லை
3. தீயினாற் சுட்ட புண்தீருஞ்சில மருந்தில்
   வாயினாற் சுட்ட வடுவொன்று மாறாதே.

– பழமொழிகள், ஆத்திச்சூடியில் உள்ள அடிகள் முதலானவை இச்சுவடியில் எடுத்தாளப்படுகிறது.

1. பால்முறியக் காய்ந்தாலும், பண்பு சுவைமங்காது!
2. இரவும் பகலாகும் பகலு மிரவாகும்.
   எட்டிபழுத்து மென்னாண்டு தழைத்து மென்ன
3. அரிதரிது மானிடர் களாகப் பிறப்பதுதான்
   உரிய தொருகண் குருடுஊமை செவிடும்பேடும்
4. கொடிதுகொடி தென்பதுதான் குவலயத்திலே வறுமை
   இடருமதிற் கொடிது இளமைதனிலே வறுமை

– இந்நூலில் வடமொழிக் கலப்பு மிகுதியாக உள்ளது. இந்நூல் சாதிமறுப்பை எதிர்க்கிறது.

“சாதிமுறை தவறுஞ் சண்டாளா் ...”

– இந்நூல் பெண் அடிமைத்தனத்தைப் பல இடங்களில் நியாயப்படுத்துகிறது. மேலும் மனிதப் பண்புகளை சாதியப் பண்புகளாக அமைத்து அவற்றுக்கான நீதிகளைக் கூறுகிறது. பெண்களை சாதிய ரீதியாக இந்நூல் ஆசிரியர் வகை செய்துள்ளார். பத்துவகைப் பெண்கள் பற்றியும் அதில் ஒவ்வொரு பெண்களின் உடல் அமைப்பு, அவர்களின் இயல்பு போன்றவற்றை வரிசைப் படுத்தி கூறுகிறார்.

பெட்டைக் குதிரைச் சாதி

“உயர்ந்து குளிர்ந்தவுச்சியுட் குழிந்தசான்ற கணங்கள்
உயர்ந்து பருத்த கொங்கையுதடு பருத்திருக்கும்,
112(அ) சாலப் பருத்தமயிர், தந்தமோ நீண்டிருக்கும்,
தாலவிடை பருத்துத் தாழிபோலே வயிறும்,
அடக்கமொன்று மில்லாமையல் குல்பணைத் திருக்கும்”

என்ற இந்நூல் அடிகள் சான்றாக அமைகின்றன.

மேலும் பொதுவான நீதிகள் சிலவற்றை இந்நூல் கூறுகிறது. சங்கம் மருவிய இலக்கியங்களில் உள்ள நீதி நூல்களின் கருத்துக்களை பல இடங்களில் அப்படியே இந்நூல் பேசுகிறது. அந்நூல்களில் உள்ள இயல் தலைப்புகளைப்போல் இதில் உட்தலைப்புகள் அமைந்துள்ளன. (பார்க்க பி.இ) நீதி என்பது எந்த சாதிக்கும் எந்த சமயத்தவர்க்கும் பொதுவானதாகவே இருக்கவேண்டும். அதுவே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் படும். திருக்குறளும் அவ்வாறே நீதியை உரைத்தமை யால்தான் இன்றுவரை நிலைபெற்றுள்ளது. ஆனால் இந்நூல் ஆசிரியர் இந்நூலை நீதிநூலாகச் செய்யாமல் சாதிவாரியாகப் பிரித்து அதற்கு முன்னோடி நூலாக உள்ள மனுநீதியைத் துணை

கொண்டு நீதிகூற முற்பட்டுள்ளார். இதன்வழி இவ்வாசிரியரின் நோக்கம் நன்கு புலப்படுகிறது.

முடிவாக

சென்னைப் பல்கலைக்கழகத்தால் தமிழ் இலக்கியத் துறையில் நடத்தப்படும் சுவடியியல் பட்டயப் பயிற்சி வகுப்பில் இச்சுவடியை பதிப்பிக்க அனுமதி அளித்து ஆலோசனை வழங்கி நெறிப்படுத்திய **முனைவர் வீ. அரசு** அவர்களுக்கு முதன் மையாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சுவடியியல் வகுப்பில் கற்பித்த ஆசிரியர்களான **முனைவர் வீ. அரசு அவர்களுக்கும் முனைவர் ய. மணிகண்டன், புலவர் பா. வெ. நாகராசன், முனைவர் ஜெயக்குமார், முனைவர் சூ. நிர்மலாதேவி, பேராசிரியர் சீனிவாசன் ஆகியோருக்கு** நன்றி.

சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடியியல் நூலகத் திலிருந்து 'மனு நீதிக் காதல்' என்னும் இச்சுவடியை பதிப்பிக்க வழங்கிய நூலக காப்பாட்சியர் முனைவர் **சவுந்திர பாண்டியன்** அவர்களுக்கு நன்றி. மேலும் எனக்கு பெரிதும் உதவியாய் இருந்த நண்பர் மு. தேவராஜ் அவர்களுக்கும் மற்றும் சக நண்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

o

சுருக்க விளக்கம்

ப. எண்	–	பக்க எண்
வ. எண்	–	வரிசை எண்
பி. இ.	–	பின் இணைப்பு
பக்.	–	பக்கம்
பா.எண்	–	பாடல் எண்
உ.ம்	–	உதாரணம்

மனுநீதிக் காதல்

காப்புகள்

விநாயகர் துதி வெண்பா

யானை முகவானையுமை யாளனார் பாலகனே
ஞான முதலானகுரு நாதனே-மானிலத்தில்
ஆதிமனு நூலிலுரை யாததனை யானுமொரு
காதலெனு வோத வருள் கான்.
புத்திவரு மெய்ஞ்ஞானப் போதமுறும் புண்ணியமுஞ்
சத்தியமா மேன்மைமிகத் தங்குமே-நித்தம் நித்தம்
சாதனைய தாய்ப்புவியில் சாமிநாதன் சொல்மனு
நீதி நூல் பார்த்தால் நிதம்.

சரஸ்வதி துதி

1(அ). (பூமே)வுலோக(ம்) (பு)கழுமனு நீதிநூல்
பாமேவு செஞ்சொற் பயனறிந்து யான்பாட
மூல கணேசன் முளறிபதம் போற்றி
வாலை சரஸ்வதிஎன் வாக்கிலிருந் தருள்வீர்.

அவையடக்கம்

வேதமுறை சொன்ன திந்த மேதினியிலுள்ளமனு
நீதிமுறை தன்னை நிகழ்த்தினார் முன்னோர்கள்
வள்ளுவனாரவ்வை முதல் வழுத்து மனுநீதி
தெள்ளுதமிழ்க் கடலில் சிற்றகப்பை முகந்தாப்போல்
மாலை சதகமனு நீதி சாரமென்று
ஞாலமதிற் கவிஞர் நவின்றார்பல நூலால்.

1(ஆ). பண்ணும் பலநூலில் பாடும் பொருளதனை
எண்ணியெந்தன் சிந்தைக் கிசைந்தே யறிந்தமட்டும்
ஞாலமதிலுதிரும் நவமணி யெலாம் பொறுத்தி
மாலையாய் கோர்த்த வகையாக வின்னூலை
காதலுடனியா னுமொரு காதலெனப் பாடிவைத்தேன்.

ஆக்கியோன் பெயர்

மாதவத்தோர் முத்தமிழின் வல்லோர் மனமகிழ
மாவளஞ்சேர் செம்பிவள நாடன் மிக்கான்
பூவைசியனென்னும் புகழ்படைத்த நங்கை குலன்
ஆதிவையை சங்குமுக மாறைந் தானராம
நாதவேள் பாலன் நளின கவிரஞ் சிதவான்.

2(அ). சீலமிகும் முர்தச் செந்தமிழின் பாவினஞ்சொல்
மாலோ னருள்சிறந்த மாபார தப்பிரசங்கன்
கையுற்ற நெல்லிக்கனி போலறிய வென்று
தெய்வச்சிலை யானுரைத்த தெள்ளமிர்த மாமிதுவே
உற்றதொரு காவேரி யொன்றாய்ப் பெருகிவரச்
சிற்றூரல் நீருமதிற் சேர்ந்தங்கே யோடுதல்போல்
சந்திரனோ டம்பரத்திற் றாரகைகள் வாழ்வதுபோல்
செந்தமிழோர் முன்னே சிறியேனுரைத்த தமிழ்
புன்சொற்கு(ற்றதனை) தலையுங்கள் பிள்ளைமொழி போல
மகிழ்ந்து
என்சொல்லி தனைநீங்களி மின்பமெனக் கொண்டருள்வீர்.

நூற்பயன்

2(ஆ). சத்திய சத்தியமுஞ் சாதிமுறை மார்க்கங்கள்
உற்றதொரு தர்மங்களு தவியுதவாமை
தன் மனைவிமைந்தரோடு தகமையுடன் வாழ்வதுவும்
பின மனைவி வேசையர்கள் பேதத்துள்ளார்வதுவும்

மான மீனம் வாழ்வு மகிழ்சியுடன் வஞ்சகங்கள்
தானுமுயர் கீர்த்திப் பிறதாபம் பரிமளித்தல்
துற் பிறவிதுற் சனர்கள் சோர முடனாக்கினைகள்
நற் பிறவியா யுளவிரத்தி நற்பதங்க ணல்லறிவு
கற்பனைகளொப்பனைகள் கயவர் குணவிலக்கம்
எப்போதுந் தாளாண்மை யென்று நடவாமே.

3(அ). காலத்தின் கற்பனைகள் கடவுளால் நிரநயங்கள்
ஞாலமதில் நன்றியுடன் நற்றுணை வர்பத்திமுத்தி
சீதேவி மூதேவி சேரிடங்கள் தானுமனு
நீதிமுறை வறுமை நிச்சயமாய்ச் சேரிடங்கள்
சேராவிடம் லோபிசின்னத்தின் பாங்குகளும்
பேரான மாதா பிதாவவர்களாவதுவும்.
இருந்து மிறந்தோர்கள் இறந்து பிறவாதார்
மருந்துதவும் பண்டிதத்தின் மார்க்கமனத்தூக்கம்
சுத்தம் சுத்தங்கள் தோகையரி லட்சணங்கள்
மெத்தப் பெரிதரிது மெலியதானங் கொடிது

3(ஆ). மிஞ்சுங் கொடுமையினால் மின்னார் களாசையினால்
வஞ்சகத்தினா லிறந்தோர் மாறாத பேறுபெற்றோர்
இத்தகைமையாவது டனின்ன மின்னம் பலவாய்
சுத்தமுடன் முன்னூலோர் சொன்னபடி யேயுரைத்தேன்
நன்னயஞ் சேரின்னூலை ஞாலமெலாந் தான்றியச்
சொன்ன தொருபாடற் றோகையு மோராயிரமாம்.

வேதிய ரொழுக்கம்

பாடினேனின் னூலைப் பயனறிந்த வுத்தமர்க்கு
ஈடுண்டோ நல்லறிவுக் கின்னமொரு நூலுளதோ
ஆரணங்க ளோதுவதும் யாகாதி செய்வதுவும்.
மீறுகாயத் திரியால் வினையெல்லாந் தீர்ப்பதுவும்

4(அ). கல்லும்(பிரு) திவி மிக்கான மறந்தப் புறம்
எல்லாச் சிலையும ருளெய்தும் படிமுடித்தல்
நன்னயமாரி பெய்து நாடு செழிப்பதுவும்
மன்னர் செங்கோலு மறையோர் மகிமையன்றோ.

அரசர் ஒழுக்கம்

5. தேசத்தி யற்கை தெரிந்து மனுநீதி
வாசற் பிரதானி வாய்மை குறிப்பறிதல்
தன்னுயிர் போல் மன்னுயிரைத்தற் காத்தல் சத்தியமாம்
மன்னுங் குடிகளிலே மாறாவ பிமானம்
வங்கிஷத் திலுள்ளோர் மகிமை குறையாமல்
தங்கள் குலத்தைத் தராதரமாய் காப்பதுவும்
காலமிடமறிதல் மிக்கானதர்ம சிந்தனைகள்
தாலமிசை கீர்த்தி பரதாபம் பரிமளித்தல்

4(ஆ). தேவதா பத்தியுடன் சிட்டர் பரிபாலனமும்
மேலவாரந் துஷ்ட்டர்களை விரைந்தடக்கு மாக்கினையும்
மாசனங்கள் மீதிலபிமான மதுபண் னான்கும்
ராச நீதத்தினல் மென்றுரைத் திடுமாம்.

வர்த்தக ரொழுக்கம்

தானறிந்த வாணிப முந்தப்பா நிறைவசன
மானவரார் தாயத்துக்க திகஞ்சில வழியார்
கணக்கில ணுவும்விடார் காரியத்திலே செய்யும்
இணக்கமுடன் செய்வாரிசை வார்க்கிசை யார்கள்.
பொய்யுரையும் பேசார் போற்றியப் பொருள்சேர்ப்பார்
வையகத்தில் மிக்கான் வணிகர் குலமார்க்கமிதாம்
மறையோர்க்கு மங்களமு மன்னவர்க்கு வல்லபமும்
குறையாத வர்த்தகர்கள் கொள்வினையும் விற்பனையும்.

வேளாளரொழுக்கம்

5(அ). ஆகம வேதங்கள் தேவாலயம் விளங்குவதும்
மேகம்வர் ஷிப்பதும்வேந் தர்கள்செங் கோன்முறையும்
பாரிலே தர்ம பரிபாலனங்கள் மேலுமுயர்
சூரர் வலுவுந் தொழிலாளர் சீவனமும்
தாளாத கீர்த்தியுடன்றாரணியில் வாழ்வெல்லாம்
வேளாளர் தங்களது மேழிப் பெருமையன்றோ.

தருமநீதி

அறத்திற் பெரிதுமில்லை யதனை யணுவளவும்
மறப்பதுவே கேடன்றி மற்றுமுயர் கேடுளதோ.
தர்மமா தர்மமிரண்டுஞ் சதகோடி நாட்செலினும்
அம்மாத் திரமுமனுப வித்துத்தீரு மன்றோ
எண்ணும் பலபொருளு மிகத்திற்கும் வாராது
புண்ணிய பாவங்கள் ரண்டும் போவதில்லையுன்னைவிட்டு
பொன்னாடை யாபரணம் பூதான் மீயந்தாலும்
அன்னதானத் துக்கதிக முறுதான் முண்டோ.

5(ஆ). தன்னாற் சுயமாயோர் தர்மந்துடங்குவதில்
முன்னோர் செய்தர்மத்தை முக்கியஞ்செய லுத்தமமாம்
பாவபுண்ணிய மிரண்டும் பல்லாக்கின் கீழ்மேலும்
போவது செய்த புண்ணியமும் பாவமுமாம்
கோணா தணுவளவுங் குறையாத வாழ்வதற்கு
ஆணிவே ரென்பதுவும் மறமென்று சொல்லுவதாம்.
எண்ணரிய வாழ்வு மெய்தும் பெருந்தவமும்
புண்ணிய மொன்றில்லா தோபுனல் நிறைந்தகாடாகும்.
ஏதாகிலுந் தர்மமே வருந்தான செய்யவென்றால்
ஏதாகிலுமனத் துக்கிசைந் தபடியே கொடுத்து
வாக்குச் சரீரம் தனாற்ச காயங்கள்

ஏற்கவே செய்வோர்க் கிகபரம் வந்தெய்திடுமே.
எத்தர்ம மாலதற்கு மிடையூறு செய்பவர்கள்
புத்திரரு மத்திபமாயப் போவார் நரகமதில்.

6(அ). மன்னருட நீதமதனிற் பதின் மூன்றும்
முன்னமே சொன்ன மின்னமுண்டு பதிமூன்றுரைப்பார்
சேனை குடியுஞ் சிநேகமு மந்திரியும்
ஆனபல வேளாண்மை யதனுடனே யிவ்வாறு
மிச்சமறிவீகை மேலுந் தயிரியமும்
உற்சாக மென்பதுட னேயிவை நான்கும்
தூங்காண் மைகல்வி துணிவுடனேயிம் மூன்றும்
நீங்காமல் வேணும் நிலமாளர சருக்கும்
யானை குதிரைபடை யானுடனேயே யாலயங்கள்
ஆன நல்லதர்ம மதனினைவு மந்தணர்க்கும்
ஏழைக் கிரங்கியேப் பிழைகளும் பொறுத்தல்
மீளவே தீரவிசாரித்து தெண்டனையும்
தக்கமரி யாதை தயவுங் குடியினிலே
இக்குணங் களெல்லா மிருக்கு மந்தராசாவை

6(ஆ). ராசசிங்க மென்பரிவர் நாட்டிற் பசிபிணியும்
மாசிலையாம் வறுமைவாரா தென்றே யுரைத்தார்
தான்செய் யுந்தர்மந் தனக்காக முன்னோர்க்
ஆனபேர் தர்மத்தை யபகரித்துக் கொண்டாக்கால்
துன்னடக்கை யென்றுமகா தோஷம்வந்து சூழுமென்றும்
நின்மலமா மென்று நிகழ்த்தினார் முன்னூலில்
ஆலரசு வேம்பிது மூன்றானதிலே யொவ்வொன்று
மேலும்விளா நெல்லி வில்வமதில் மும்மூன்றும்
அன்பாகத் தேங்கு மரமைந்தைந்து மாப்புளியில்
ஒன்பதுட னொன்றுமீ தொன்பதையும் வைத்தவர்க்கு
தரணியிலே எந்நாளுந் தக்கபுகழ் விளங்கும்

நரகமிவர்க் கில்லையென்று நவின்றார் மனுநூலில்

7(அ). அன்னை தந்தைசுற்றங் களாதியிலே நம்பினவர்
முன்னுதவி செய்தவர்கள் மிடிமையுற்று வந்தவர்கள்
தக்க பெரியோர்கள் சரணமென்ற டைந்தவர்கள்
மிக்க வெளியோர்கள் மேனாளிற் சேவகரை.
கைநழுகச் செய்யாமற் காப்பாற்று முத்தமர்க்கு
வையகத்தில் வாழ்வெய்தும் வம்மிசமும் விரதியுண்டாம்
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தற்காத்த வுத்தமற்கு
என்னெனபாவம் போமிக பரம்வந் தெய்திடுமே.
மாமறையோரே முதலாய் மற்றுள்ளோர் தங்களுக்கும்
சேமமுட னெய்தேய்ப் பவர்கள்தங் களுக்கும்
மறையோர்க்குத் தொண்டுசெய் வோர்மாதாவை தெய்வமென்போர்
கறவைதனைக் கண்டவுடன் கையாற் சொரிபவர்க்கும்

7(ஆ). எண்ணாமற கோடி எக்கியங்கள் செய்தவெகு
புண்ணியம் வந்தெய்து மென்றுபுகன்றார் மனுநூலில்
துன்மார்க்கர் தங்குடியைச் சுத்தமாகக் கெடுத்து
நன்மார்க்க முள்ளசில நற்குடியை காத்திடலாம்
அறக்குடி பத்தானாலுமவர் கடனைக் கெடுத்து
சிறப்புற்ற பட்டணத்தைச் சீர்திருத்திக் காத்திடலாம்
வீடான பட்டணத்தை மிகவுமங்கே கெடுத்து
நாடானதைக் காக்க லாகுமதிற் பாவமில்லை.
என்றுமுன்னாள் மாயவனுமே யரவானைப் பலியாய்
கொன்றிடப் பாண்டவர்க்குக் கூறியதிவ் வாறாகும்
தீரமொன்றிலட் சந்திரிக் கொளுத்தி னாலுமந்த
தீபங்குறையாத செய்கை போலே நாளும்
தலமீதிலே யொத்தான் தாமஞ் செய்பவர்க்கு.
மலர்மாதா லுண்டாகும் வாழ்வதுவுங் குன்றாது

8(அ) நன்மையே தர்ம மதினாலே வாழ்வு
துன்மை வருவதில்லை தூயமனை குன்றாது.
துன்மை தர்மத்தாற்றுலங்கும் பெருவாழ்வு
நன்மை தரமாட்டாது நல்விருத்தியாகாது.
தர்மம்பொருள் கிடைத்த தற்காலஞ் செய்யநன்று
வறுமை வந்தால் தர்மமது செய்யக் கூடாதே
கர்மபழங்கள் பூவிலைகள் கதித்த மரங்களிலே
வாயுவு சென்றால் நற்கனிகள் மட்டுமுதிராமல்
தக்க பழங்காய் பூதளிர் முதலாயுதிரும்
பக்குவம் போற்கெற்ப முதற்பயந்த மனுக்களிலே
சாலக்கிழவர் மட்டுஞ் சாவதன்றி மற்றெவரும்
ஞாலமிசைச் சாவதில்லை யாக்குமென்றெண்ண வொண்ணா
என்ன வயதானாலு மியல்புவரும் வேளை
நன்னயஞ் சேர்தர்மஞ் செய்தாலது வேயுத்தமமாம்.

8(ஆ) பண்டுசெய்த புண்ணியமும் பாவமென்றுஞ் சொல்லும்விதம்
ரெண்டு மனுபவிப் பாரெக் காலமானாலும்
நமக்குள்ளதை சமைத்தை நாமுண்டு வந்தபிறர்.
தமக்குங் கொடுக்கின்ற தர்மமே முக்கியமாம்.
வாசற் கதவடைத்து வைத்துண்பார்க் குச்சொர்க்க
வாசற் கதவுமா றாதடைத் திருக்கும்.
உப்பில்லாக் கூழுமுள மகிழ்ந்துதான் கொடுத்தால்
ஒப்பிலாப் பாலமிர்த மொக்குமென்றார் முன்னோர்கள்.
பகை(யான) கொடுங்கோபி பாலமிர்த மீந்தாலும்
மிகவான நஞ்சு நஞ்சுக்கெட்டிக்காய்க் கொப்பிடலாம்.
ஓட்டைக் குடத்திலிட்ட வுதகம் போனாற்போல்
நாட்ட முடனே வாழ்வு நாளுக்கு நாள் குறையும்

9(அ) கூடிவருங் காலங்குறிப் பறிந்து தம்மாலே
கூடுமட்டுந் தர்மங் கொடுத்தாரே யாமாகிஃ

வாணாளேபோகும் வழியடைக்குங் கல்லென்று
கோணாத வாய்மைக் குறளிலே சொன்னாரே
ஆறிலொரு கடமை யரசர்க்கமைந்து பங்கு
சேரும் விருந்து சுற்றந் தெய்வம் பிதிர்த மக்காம்.
இல்லத்தில் வாழ்ந்தால் இவ்வாறு செய்யவென்று
வல்லமை சேர்வேத முறை வள்ளுவருஞ் சொன்னாரே.
பாவத்தால் பொன்றேடிப் பல தாமஞ் செய்தாலு
மேவுற்ற புண்ணியங்களெள்ளளவும் வாராதே
தர்மத்தாற்றேடித் தரா தரமுங்கண்டறிந்து
தன்மையுடன் வந்தோர் தமக்கு விருந்தளித்து

9(ஆ) இன்னவரும் விருந்துக் கெதிர் பார்த்திருக்கின்ற
நன்னய வான் வீடந்தலட்சுமியின் வீடாகும்.
பூமியிலே வித்தேதும் போட்ட தேயுண்டானால்
தாமே தானைஸ்வரியந் தன்னாலே கூடிவரும்
ஏற்போர்களாரேனு மெவ்வேளை வந்தாலும்
கூர்ப்பாக தன்னாலே கூடுமட்டு மீந்தாக்கால்.
இருந்தாலு மிறந்தாலு மெந்நாளுங் கீர்த்தியுண்டாம்
பிறந்தாலு மேலாம் புகழதிக வாழ்வு முண்டாம்
தர்மங்களாவது தான் தர்மவான் செய்வதல்லால்
கர்மிகளுக் கெய்தாதெக்கால முந்தான் செய்யானும்
எத்தர்மமானாலு மீகைக் கிணையில்லை
மற்றதெல்லாம் பின்னென்று மனுநீதியிலுரைத்தார்.

மாரிச் சிறப்பு

10(அ) மண்ணிலுறு தவங்கள் மாதான மற்றுளதும்
விண்ணின்று போனால் விழலாகும் மாரிமுதல்
மாரிவள மும்மானி லத்திற் புற்பூடுஞ்
சீர்பெருகுந் தவந்தே வாலயச் சிறப்பும்

மன்னர் முதலானவர்கள் வாழ்வுமவர் தாழ்வும்
மன்னுமுயர் வானமதில் மாரிவளமா மன்றோ

இல்லறம்

வெல்லறங்கள் செய்துகன வேள்வி முடித்தாலும்
இல்லறத்தின் வாழ்வுக்கிணை யாவதொன்று மில்லை.
மூர்த்தியென்ற மூவருக்கும் முன்னாளிறந் தவர்க்கும்
பார்த்திபர்க்குந் துறந்தார் பலமுயற்சி யாளருக்கும்
இயல்பினா லில்வாழ் வாரிவர்க் குத்துணையெனவும்
நயமாகு மென்று குறளானதிலே சொல்லினரே.

10(ஆ) மட்டில்லா வாழ்விருந் தென்மனை தனக்குமுக்கியமாம்
இட்டமுறு பெண்சாதி என்பவளே முன்னிலையாம்
சற்குணமுந் தெய்வபக்தி தர்மசிந்தை கற்புடைமை
இக்குண முள்ளாளே யிருக்குமந்த வீட்டினிலே
வற்றாது செல்வமவள் வாயால் மாரிபெய்யென்று
உத்திரஞ் சொன்னாலுலக மெல்லாமாரி பெய்யும்
தானுமனை யாளுமொரு தர்மமது செய்யநன்று
தானவர்தன் வேறுபட்ட தர்மமது தர்மமல்ல.

செல்வம் நிலையாமை

நினைத்த பொருள்நீங் கிநினையா பொருளெய்து
மனைத்து மிதுதானே யப்படியும் வந்துவிடும்
நிலையாக தோற்றுகின்ற நிலவதும் போயிருளாம்
கனஞ்சேரிருள் நிலவாய்க் காட்டுதற் கப்பாலும்

11(அ) இரவும் பகலாகும் பகலு மிரவாகும்.
பெரிதான மேடங்கே பேராறாயா கிவிடும்.
ஆறதுவு மேடாகும் மணல்நிலத் திலோடம்வரும்
வாரிசு வறியதில் மணலுமிகச் சூடாகும்.

தெய்வச் செயல்

வேண்டுநிதி யோரெளி யோருமா வார்கள்
மீண்டு மெளியோரு மேலோருமா வார்கள்
தகமை செறிவாழ்வுந் தாழ்வுஞ் சதமல்ல
சகடுபோற் சுற்றிவருந் தாழ்வதுவும் வாழ்வதுவும்
பேராசை யாலேபிர யாசைப் பட்டாலும்
வாராது வாராது வருவதும் போகாது
எங்கெங்கே போனாலு மியாவரிடஞ் சென்றாலும்
பங்கமுரைத் துபலரை மிகநொந் தாலும்

11(ஆ) அழுது தொழுதாலும் அனேகனான தெய்வத்தைப்
பழுதாயுரைத் தாலும்பய னேதுமெய் தாதே.
ஆழ்க்கட லில்முக் கிமுகந் தாலும்
நாழிவரும் நாழியிலே நானாழிநீர் வருமோ
பூர்க்குமாஞ் செடிகள் பூவாநாட் பூவாது
ஆர்க்கும் விதியையன்றி யாசையினால் வாராதே
ஆலிலப் புறாவிரண்டங் கிருக்கவோர் வேடன்
சீலமுட னேயதவற்கு சிலையிற்கணை தொடுக்க
பாயவந்த ராசாளிப் பட்சியது மேலுலவத்
தூயபுறாவின் மேற்றொடுத்த கணை விலகி

12(அ) ராசாளிப் பட்சியு டலானதிலே தைத்துவிழப்
பாசமுறு வேடன் பதத்திலே விஷந்தீண்ட
வேடனும் ராசாளியு மாய்வீழ்ந்து விடவேயொரு
சோடாயப் புறாவிரண்டுந் துன்பமற்று வாழ்ந்ததுவே.
இத்தகமையாய் முடியு மீசன் செயலாலதற்கு
அத்தாட்யா மென்ற ருளினார் முன்னூலோர்.
அண்டரமு துண்ண வரனுமேநஞ் சையுண்டான்
கொண்டல்வண் ணன்காடுறைந்த (சே)ாதைதனைப் பிரிந்தான்

வேதன் சிரமிழந்து மிப்பாற்சிறை யிருந்தான்
ஆதியிலே யிந்திரனுமங்க மேலாங் கண்ணானான்.
சக்கிரேச னான்வரிச் சந்திரனும் பெண்டிரும்
மிக்கதொரு நாடிழந்து விலைபட்டுத் துன்பமுற்றார்.

12(ஆ) மன்னுநள ராசன்மனை விதனைப் பிரிந்து
தன்னுடைய நாடிழந்து தன்வடிவு குன்றினனே.
ஐவரடவி யுற்றாரா கையா ரேனும்
வெய்யோன் விதிதனையே வெல்லயெவ ரால்முடியும்
பூபாரந் தீர்த்த புயல் வண்ணன் வேடன்கை
ஆபரணம் பட்டுழன்று வாதைக்குள் ளாகினனாம்
ஆனை பறவையுட னாடரவ மிம்முன்றும்
சேனை மனிதர்கை யிற்சிக்கி மெலிவதுவும்
நல்லக் கதிர்மதிகள் ராகுகேதாற்று யருறலும்
வல்லதாம் வரனுக்குவறு மைவந்து சூழ்வதும்
பாக்கிய முள்ளானுக் கோர்பாலக னில்லாததுவும்
போக்கற்ற வேழைக்குப் புத்திர ருண்டாவதுவும்

13(அ) நல்லோர்க்குப் பொல்லாத லண்டிப் பெண்டாவதுவும்
பொல்லார்க்கு நல்ல குணப்பெண் மனைவியாவதுவும்
ஓரொன்ப தொன்பதிது வூழிவிதிப் பயனாம்.
வீரர்க்கும் மேலவர்க்கு மின்பதுன்பஞ் சமனாம்
ஆகாச செயலுக்கு மயலார்பொருள் தனக்கும்
வாகாக வாசைமிக வைத்தால் வருவதில்லை
வாழ்வதுவுந் தாழ்வதுவு மன்றுவரு நின்றுவரும்
ஊழ்வினையின் வாறன்றியுத்தி புத்தியாலாமோ.
ஏலவே வந்து போமின்ப துன்பமது போல
ஞாலமிசைப் பின்னு மிவைரண்டு மனுபவிப்பார்
காலித் திரளிலொரு கன்றாவதை விடுத்தால்

பாலித்தே யீன்ற பசுவறிந்து சேருதல்போல

13(ஆ) ஓடியொளித் தாலு நமக்குற்ற பழவினை தான்
தேடிப் பிடிக்கு மென்று செப்பினார் முன்னோர்கள்
எக்காலஞ் சென்றலு மிறவாத பேரில்லை.
மிக்கவிதி வசத்தை வெல்பவர்க ளாருமில்லை.

சுக போசனம்

தாளாண்மை என்னுந் தகமைதனைச் சீர்தூக்கில்
வேளாண்மைக்கே யதிகமில்லை யென்று சொல்லினரே
வேந்தர் தமையடுத்தோர் வேளாண்மை செய்பவர்கள்
சார்ந்தவன் மலைகன் தன்னருகிற் சஞ்சரிப்போர்
மருவாருஞ் சந்தனமாம் வனத்திற் சமுத்திரத்தின்
அருகே யிருப்பவர்களாவின் பாலுண்ணவர்கள்
சகடுடைய சர்க்கீரை தன்னைப் பயிரிடுவோர்
மிகவுமிந்த வெண் மருக்குமேலான பஞ்சமில்லை.

நற்சகோதரர் துற்சகோதரர்

14(அ) தம்பியர் மேலன் புடையோன் தாமாகுராமன்
தம்பிமேல் சத்திராதி தசக்கீரிபன் வாலியுமாம்.
(ந)ற்றுணை யாந்தம்பியர்கள் லட்சுமணன் பரதன்
உற்ற தொருதர்மனுடன் பிறந்த நால்வர்களாம்
சுக்கீரி பனானவனுஞ் சுயோதனன் வீபிஷணனும்
தக்கபுகழ் பூவுலகில் தமையனுக்குச் சத்திராதி
பண்பாயுடன் பிறப்பகை யுறவிதாகு மென்று
முன்பாக நீதிநூல் முறையிலு ரைத்தனரே.

அரசிற் புகழ் பெற்றோர்

மனுவிஷ்வு வாகுடன் வாகான அம்பரிஷன்
கனதை பெருமாந்தாதா கார்த்திகார்ச்சுன்னன் பரதன்

விருத்த சிபியுடனே விருந்துச் சிவந்துவுடன்
மருந்துப் பகீரதனும் வாணன்முசு குந்தனுடன்
தீராப் புகழ்ய்யாதிதே வேந்திரனுடனே
பாரிற்ற சரதனும் பாண்டவர் களைவர்களும்

14(ஆ) சத்திய வரிச்சந்திரனுடன் தாதை திரிசங்கு
உற்றநளன் விதுரனோ கோபுரூ ரவனும்
அந்நாளிலே பிரகலாத னுடன் மாபெலியு
மன்னுஞ் சடாயு குகன்வாகாம் விபிஷணனும்.
ஆறைந்து பேரும திகபூசா பலராய்ப்
பாரிற்புகழ் நிறுத்திப் பரமபத முற்றவராம்.
ஏற்கைபெரு மிந்திரனு மெழில்விசு வாமித்திரமுனி
மார்க்கமுடன் மாணிக்க வாசகரு மாபெலியும்
வின்னமில்லா வள்ளுவரும் வேடனெனுங் கண்ணப்பன்
தன்னாலெழுவர் களுந்தான் வராய்ப் பேறுபெற்றார்.

நல்லறிவு

தீயினாற் சுட்ட புண்தீருஞ்சில மருந்தில்
வாயினாற் சுட்ட வடுவொன்று மாறாதே.

15(அ) ஏற்கையுடன்ற புகழோ டெய்தா சென்மமவன்
தீர்க்கமுடனே மறுசென்ம மெடுக்காமை நன்றாம்.
மண்ணி_ பிறப்ப தெல்லாமறிவது வேகாட்டுந்
தண்ணமுள வாய்ச்சொல் லால்சாதி யறிந்திடலாம்
சிறியோரிணக்கம் விட்டுத் தீங்கொன்றுஞ் செய்யாத
பெரியோர் தமையடுத்தாற் பேதமொன்றும் வராதே
துய்யகிரக நித்திய சோபனத்தினால் விளங்கும்
வையகத்து ராசாக்கள் மனுநீதியாற் சொலிப்பார்
நாரியர்கள் சற்குணத் தினாலே விளங்குவர்கள்
கூறும் விதாணனுங் கொடையால் விளங்குவனாம்

பாரிலெந் நாளும் பகல்விளங் குமாவிரவிற்
காரிருளையும் விளங்குங் காந்தியுறு மாமதியாம்.

15(ஆ) பதிவிளங்கும் பெண்ணாலே பார்விளங்குமே கமதால்
சதுராய்ப் பகைவிளங்குந் தங்கள் புயவலியால்
குடியே விளங்குவது கொற்றவர் களால்நீதி
நெடியதலம் விளங்கும் நெஞ்சிலுற்ற நல்லறிவால்
புகழாற் கொடை விளங்கும் போசனத் தாலுயிர் விளங்கும்
புகழறிய நன்னூலாற் புத்திமிகவே விளங்கும்
சொந்தமென்றுந் தோழமைகள் செய்ய வொண்ணா
சந்தேகமுற்ற தொருதை யலரைச் சேரவொண்ணா
சார்பில்லார்க் கில்லைநிலை தயவில்லார்கறமு மில்லை.
ஊரில்லார்க் கரசுமில்லை ஊணில்லார்க் குறுதியில்லை.
மாடில்லா தார்க்குமிந்த வையகத்தில் வாழ்வுமில்லை.
கூடுமுதலில் லார்க்குக் கொள்ளல்விற் றல்லாபமில்லை.

16(அ) துற்சனர்க்கு நேசமில்லை சுகமில்லார்க் காசையில்லை.
இச்சகத் தினன் மைதனக்கெப் போதழிவுமில்லை.
மனதின் குறிப்பை வதனத் தாலறிந்திடலாம்
அனைவோர் குண நடத்தை அதனால றிந்திடலாம்
சமர்முகத்திற் சூரன் வலுதன்னை யறிந்திடலாம்
சேரும் வல்பிணியை தாதாலறிந் திடலாம்
கல்விப் பிரசங்கத்திற் காணலாங் கவிஞர்திறம்
சொல் வண்மையாற் சாதிதோற்ற மறிந்திடலாம்
மானிலத்திற் பூடுகளை மழையாலறிந் திடலாம்.
தானுநல்லார் பொல்லாரை சந்ததியாற் கண்டிடலாம்.
கண்ணிரெண்டாம் யாவருக்குங் கற்றோர்க்கு மூன்று
கண்ணும்எண் ணுந்தியாகிகளுக் கேழுகண்ணா குமல்லோ.

16(ஆ) மனகுவிந்து ஞான மகிமை யறிந்தவர்க்கு
அனந்தங் கண்ணாகுமென்று யருளினார் முன்னோர்கள்

தர்மவான் றன்னிடத்திற் றங்காத்து பாவமுந்தான்
கர்மிதுன் மார்க்கனிடங்க னத்ததாம் நில்லாது
நெருப்புக்கு முன்குளிரு நில்லாது தான்மிகுந்த
கருத்தவிருள் பனியுங் கதிரோன் முன்னில்லாது
சத்தியத்தை நாளும் சத்தியமும் வெல்லாது
புத்திகெட்ட கோபம் பொறுமைதனை வெல்லாது
புண்ணியத்தை பாவமொரு போதுமே வெல்லாது
மண்ணில் விஷங்கருட மந்திரமுன் நில்லாது
சந்தனங் கஸ்தூரி தாம்பூல மாடைமுதல்
விந்தை செறியா பரணமிவற்றை யெவரீயந்தாலும்

17(அ) ஏற்போரொ ருகையா லேற்றாரே யாமாகில்
கூர்ப்பாய்க் கொடுப்பவர்க்குக் குறையாதவர் யீசுண்டாம்
செகமுழுமை யுந்தானே தேவர் தீனமாகும்
மகவான தெய்வமது மந்திரர் தீமைதாம்
மந்திரமாவது வேமா மறையோ ரர்தீனம்
சந்ததஞ்சேர் மாமறையோர் சகலருக்குந் தெய்வமென்பார்
பாலன்ன மானாலும் பண்பில்லாக் கூழெனிலும்
மேல்சுத்த மாய்க்கால மிதமறிந் துண்ணநன்று
நல்லோர்க் குற்ற துயரும் நன்மை சற்றுமில்லாத
பொல்லா தான்வாழ்வு மொருபோது நிற்கமாட்டாதே
பாம்புகடு நெருப்பிற் பழகிப் பிழைப்போர்கள்.
மேம்பாடுக் கொப்பாகு மென்றார் மனுநூலோர்.

17(ஆ) ஊமைக்கித் தோன்று வுபாயங்கள் சொல்லுவதும்
காமிக்கு ஞானக்கதை எடுத்துச் சாற்றுவதும்
துட்டனுக் கெத்தனையோ சொல்லிநன்மை செய்வதுவும்
முட்டாளுக் குற்ற நிசமுள்ளதைச் சொல்லுவதும்
இன்பக விகடனை யீயார்மேற் பாடுவதும்
அன்பில்லார் சோர ஸ்திரியர்கையால் மெலிவதுவும்

நலத்தைக் கொடுப்பதில்லை நன்றாகா திவ்வாறும்
மலைக்கல்லிலே யெறிந்த மண்பாண்ட மாகுமல்லோ.
ஐந்தான பாவத்தி லரனாலிரண்டு நலம்
ஐந்திலே மூன்றே யவ்வை சொன்னாளாகாதாம்

18(அ) தெய்வத் தாலாகா தெனினு முயற்சியிலே
மெய்வருத்த கூலிதரு மென்றனரே முன்னூலோர்
இத்தனை நாள் நம்வீட்டி லேற்றும் விளக்கென்றணுகி
முத்தமிட்டார் கன்னமுடை யெழும்பச் சுட்டுவிடும்.
உற்ற குலத்தெய்வம் நமக் கொன்றுசெய்யாதென்று
பொய்யாய்ச் சத்தியமும் பண்ணினாற்றான் விடவுமாட்டாது
தூங்குவது போலுந்தூங்கி விழிக் கின்ற
பாங்கதுவு மாமிந்தப் பாரிற் பிறப்பிறப்பு
கூட்டிதுள்ளே யிருந்து குருவிபறப்பது போல
தேட்டமுடம் பினிலே சீவனிருந்தேது செயல்

கொல்லாமை

18(ஆ) கொலையென்று நெஞ்சில் குறியாதான் வாணாள் மேல்
மலைவாயு யிருண்ணு மறலிவர மாட்டானே.
நல்லோர் பெரியோர்க்கு நாயகமே யாவரெனின்
கொல்லாமை யென்பதனைக் குறித்தறிந்த வுத்தமராம்
தானாதிபதி தூதன் தந்தைதாய் சற்குருவும்
மானார் மனையாட்டி மறையோர் புராணிகரை
சுத்தமுள வீரர்துலங் குகவி வாணர்
உற்றபோ தனர்களுயர் குலத்தோர் பாலகர்கள்
சால விகடப் பிரசங்கி பிணியாளர்
ஞாலமிசை வறுமையாளர் பதினெண் மறையும்

19(அ) எப்பிழைகள் செய்தாலு மிராசா முதலானவர்கள்
சாப்பனையுந் த்ண்டனை யுந்தான் செய்யலாகாதே

கொடுநரகடைவோர்

நீதியுள்ள ராசர்களை நீதிவழக்குரைப் போரை
ஆதிகுரு வானவரை அவருடைய சிஷ்யரையும்
சோதிடஞ்சொல் வேதியரைத் துன்பங்கள் தீர்த்தவரை
வோதரிய பண்டிதரிவ் வோரெழுவர் தங்களையும்
தீதான வஞ்சகங்கள் செய்தாரே யாமாகில்
தீதாய்க் கொடுநரகில் சேர்வார்கள் திண்ணமிதே
அன்னமளித்த வருக்கவக் கேடுசெய் தவர்கள்
மன்னர் தமையடக் கிவைத்த வமைச்சர்களும்
நன்றிமறந்த வரும்ரா சாக்களைச் சமரில்
ஒண்டியாய் விட்டேயொழித் தோடிப் போனவரும்

19(ஆ) மாதாபிதா குருவை வசையாய் நிந்தித்தவரும்
வேதாந்திமா தவத்தோர் மெய்நோக வைத்தவரும்
தெய்வ மிகழ்ந்த வருஞ்சின்ன முதலாகப்
பொய்சொல் வோரன்னியர் தம்பொருட்கா சைப்பட்டவரும்
பாரில் விசுவாச பாதகமே செய்தவரும்
நேருண்ட வீட்டுக் கிரண்டகங்கள் செய்தவரிப்
பன்னிருவர் தானும் பருதிமதி யுள்ளளவும்
நன்னய மில்லாத நரகிற் குடியிருப்பார்.
சோதிடங்கள் சொல்வோருந் தொடுவழக்குத் தீர்ப்போரும்
பேதமில்லாப் பண்டிதரும் பிராயச்சித்தம் விதிப்போர்
நீதியுரையா மலிரண்ட கமாய்சொல் வாரேல்
ஆதினமும் பாழாயாழ் நரக மெய்திடுவார்.

20(அ) பார்க்கு மலைகடலின் பாரமது பாரமல்ல
பார்க்குள் விசுவாச பாதகனா மென்பவனும்
கற்றது ரோகியுடன் காணு மிவரிருவர்
உற்ற சுமையே யென்று லகமாதஞ் சுவளாம்
தண்ணீரிலம் மணமாய்த் தான் போவோரதிற் புணர்ந்தோர்.

உண்ணீரிலே யுமிழ்ந்தோர் உருறுமலமும் நீர்விடுத்தோற்
அக்கினியி லேயுமிழ் தோராறு பேராமிவர்க்கு
மிக்கதொரு கொடிய வியாதிவரும் பின்னரகம்
அசுத்தமுட னேதான் ஆலையத்திற் செல்வோர்கள்
நிசமாகச் சன்னதியில் நேராய்க் குடியிருப்போர்
போற்றுகின்ற தேவதையின் பூசைக்கெனக் கொணர்ந்து
சாற்றாத புட்பந்தனை எடுத்துச் சூடினவர்
தீராப் பிணியடைந்து செகத்திலிருந்த மூவர்களும்
மாறாவறுமையுமாய் வன்னர கஞ்சேர் வார்கள்

20(ஆ) மேற்குலத்திற் கீட்குலத்து மின்னாருடன் புணர்ந்தோர்
ஆகுல முண்டா கியழிவர்குல விருத்தியற்று
கண்காதுக் கெய்தாதகடுஞ் சொல்லைச் சொன்னவர்கள்
மண்மேற் குலத்தோடு வன்னரகஞ் சேர்வார்கள்
கெடுமதியா லொருவருக்குக் கேடுநினைத் தவர்கள்
குடும்பமுமே நாசமாய்க் கொடுநரகம் சேர்வார்கள்
மன்னர் நிருபம துதனையே தள்ளிவிட்டோர்
அன்னை தந்தை சுற்றத்தவர்கள தனையடர்ப்போர்
எளியர்தனை யடர்ந்தோர்க் கிகல்புரியும் வஞ்சகர்கள்
பழியாளர் கேளர் பழிவினைஞ ரெண்மரையும்
மண்டலத்தில் மூன்று பிழைமட்டும் பொறுத்தப்பால்
தொண்டினைகள் செய்வதுவே தேசமன்னர் நீதியதாம்
உரியவிவகாரம் வந்தாலுற்றார் பகைஞ ரென்று
பரிதானை யெய்துசம் பந்தரிவரேழை யென்றும்

21(அ) நிறையாயுரைத் தவர்க்கு நீடுழி காலம்வரை
குறையாத வாழ்வுமவர் குலமிக விருத்தியுண்டாம்

துஷ்ட்ட நிக்கிரகம்

சாதிமுறை தவறுஞ் சண்டாளர் கற்புடைய
மாதை விரும்பு விசுவாசமில் லாப்பாதகர்கள்

கோள்கள் மிகுந்தவர்கள் கொலைஞரோடு மூர்க்கர்
நாளும் பகையாளர் நற்சனத் துரோகிகளை
ஏழைதமை யடுத்தோரி கல்விளையுஞ் சண்டைகளை
சூழும் பிணிகளோடு துஷ்ட்ட மிருகந்தீய
கொண்டடுமை தீராத கோபம் பதினாறு
மன்றடக்கு வதல்லால திகரித்தால் வெல்லரிதே
துற்சனரும் பொன்னுந் துரகத முந்தோற்கருவி
மிச்சமுறு நரம்பின் வெங்கலமா முக்கருவி

21(ஆ) மானமில்லா மூளிக்கு மானாரவர் களையும்
ஈனமில்லா கரும்பு எள்ளுடகனையீன ரேந்தும்
தெண்டித்தார்க் கெல்லோஞ் செயங்கொடுக்கு மென்றிவற்றை
பண்டு வடநூலிற் பகர்ந்தாரே முன்னோர்கள்
தந்தை தாயானாலுந்தன் குலமெல்லாம் விளக்கும்
மைந்தனே யானாலு மனையாட்டி யானாலும்
மந்திரியே யானாலு மரபுளோரா னாலும்
பந்தமுடன் மக்குபகை யாளியென் றறிந்தால்
அன்றே யகற்றிடிலும் ஆக்கினைகள் செய்திடினும்
கொன்றாலும் பாவங் குலையுமில்லை யென்றனரே
தோழமையில் வஞ்சகரை சொற்கேளா மைந்தர்களை
மீளாச் சமர்முகத்தில் விட்டோடுஞ் சேவகரை

22(அ) மன்னர்க்கு வஞ்சகஞ் செய்மந்திரி யோடிவ்வறுவர்
தன்னைக்கொடுந் தண்டனையுஞ் சதியுமிகச் செய்திடலாம்
பூமிக்கரசர் தெய்வம்புருஷனே பெண்கள் தெய்வம்
காமிக்குமாதர் தெய்வங் காசுபணம் லோபிதெய்வம்
தரித்திரனுக் குத்தானங் கொடுப்பார் தெய்வமிந்தத்
தாரணியில் துஷ்டருக்குச் சவுக்கடியே தெய்வமென்பார்
நீதியுடை யோருக்கு நேயரே தெய்வம்தாம்

ஆதிபரா பரமேயனை வர்க்குந் தெய்வம்தாம்
அன்னைதந்தை சுற்றத்தை யடர்ந்து முனிவொண்ணா
பின்னொன்று முன்னொன்று பேசித் திரியவொண்ணா
வஞ்சகரை நம்பவொண்ணா வாக்கிரண்டு பேசவொண்ணா
தஞ்சிப்பொறுமை யில்லாச் சண்டையினிற்
போகவொண்ணா

22(ஆ) வேணவித்தை கற்றாலும் மேதினியிலே விளங்க
ஆணவமாய்க் கொஞ்ச மாடம்பரம் வேணும்
நீருந்தி கண்மிக நீந்தி யறிந்தாலும்
ஓடந்தனை யகற்றி யுகத்திற் சொல்லவொண்ணா
ஞான மறிந்தாலு நாடொப் பனைகளது
வானது போலே நடந்துமகிமை பெறவேணும்
செம்பெற் குபேரனெனுஞ் சீவனத்திலே முயற்சி
பண்புடனே நாளும் பண்ணாதிருக்க வொண்ணா
வாசமுடனே வெகுவாய் வல்லமையுண்டா யிடினும்
ராசாக்கள் சேர்வை நலம் பெறவும் வேணுமல்லோ
உரித்தான புத்திமதியூகியே யானாலும்
பெரியோர்கள் சொற்கேட்டு பின்சென்றிருக்க நன்று

23(அ) பெற்றபிள்ளை தான் மூடப்பிள்ளையே யானாலும்
சற்றாகிலுங் கல்விதான் வரவுசெய்ய நன்றாம்
மெலிவாகியே யதிட்ட மில்லா திருந்தாலும்
சலியாமலே முயற்சி தன்னைவிட வொண்ணாதே
தீராத ரோகமத்தால் தேகமெலி வுற்றாலும்
வீராய் விழத்ததை விட்டு விடலாகாதே
தனியே பொருள்தேடித் தனித்துண்ணும் பாற்சோற்றி
அனையார் கினையோ டேயன்றுண்ட கூழதிகம்
ஏதோர் மருங்கு மில்லாரி டத்தினிலே
பேதைகளாய் சேவித்துப் பெரும்பொருள்கள் வாங்குவதில்

மான மரியாதையுடன் வையகத்தி நல்லோராய்
தானுள்ளபேர் கொடுக்குந் தாம்பூல மேய்திகம்.

23(ஆ) வீணிற் பலவித்தை மெத்த விரும்புதலி
ஆணியாம் வித்தை துகறைக்கற்றா லொன்றுநலம்
சின்னமுயல் மான்கள் சிற்சில தைவெல்லுவதி
லுன்னும்புலி குட்டியொன்றை வென்றார் கீர்த்தியுண்டாம்
ஏதுந் தமிழருமை யெய்தான்றருங் கொடையில்
ஓதுந் தமிழருமை யொன்றறிந்தார் போதுமல்லோ
கடுகடுத்து வேண்பொருள் கையிற் கொடுப்பதிலும்
அடைவாய் மகிழ்ந்தழைத் தேயன்றழிக்குங் கூழதிகம்
வையகத்தில் வேள்வி வெகுவாகவே செய்வதிலும்
பொய்சொல்லா தேயிருந்தாற் போதுமது சரியே.
அவிவேகியுடன் வெகுவா யான்வுற வதிலும்.
விவேகிபகை யிருந்தால் மெத்தவது நன்றாகும்.

24(அ) தன்னுயிர்க்கு வந்தலயந் தப்பிவிக்க வேண்டுதற்கும்
பின்னும் பிறருயிரைப் பேணிவிட வேண்டுதற்கும்.
மையல்கொண்ட மாதருக்கும் வையகத் திலஞ்சாமற்
பொய்யுரைத்தாற் பாவமொரு போதுமில்லை யென்றனரே
பின்னால் வெகுபொ ருளைப்பேறா யழிப்பதிலும்
முன்னாலத் தருணத்திலீயந் தவரைக் காசுநன்றாம்
நாளையென்று பின்னையென்று நாட்கெடுவு சொல்லுவதில்
வேளையிது வல்லபோ வென்றால் மிகவுநன்று
தெளிவான கல்விகற்றாதல் தேசம் வசியமதாம்
பழியாமரி யாதைபா வலர்கள் தன்வலியம்
சித்தமதிற் பத்தியே தெய்வ வசியமதாம்
உற்ற பெருஞ்செல்வ முறவோர்க் கினைவசியம்

24(ஆ) வேண்டும் பொருள்கொடுப்போர் வேசையர்கள் தெய்வமதாஞ்
மாண்டுகட் டிக்காத்திருந் தாலரசர் வசியமுண்டாம்

சாந்த மொழுக்கஞ் சகலசன வசியம்
கூடியே வாழ்ந்தாலும் குழந்தை மிகப்பெற்றாலும்
தேடிப்பிதி ரக்களுக்குந் தெய்வதுக் கிட்டாலும்
தானதர்மஞ் செய்தாலும் தாழ்ந்தேவர்க்கு சொன்னாலும்
மானமுள நல்லோர்க்கு வணங்கி நடந்தாலும்
செய்தபிழை பொறுத்துத் தேசமதில் வாழ்பவர்க்கு
ஐயமில்லை வாழ்வதிக மப்பாலு நற்பதமாம்
தெய்வசபை ராசசபை தேசிகன் புராணசபை
துய்ய வைத்தியர்கள் சோதிடர்கள் தங்களிடம்

25(அ) மருங்கா யெவையு மங்கேவைத்து வணங்கநன்றாம்
வெறுங்கையாற் போனால் விழலாங் கருமமெல்லாம்
பாரிலொரு தாயார் பலபிள்ளை பெற்றாலும்
மழகுந் திறங்குண மும்வெவ் வேறாம்
பயிரிடுவோர் தங்களுக்குப் பாரில் வறுமையில்லை
தையரிய முள்ளவர்க்குத் தானோர் பயமுமில்லை
உற்றசெபஞ் செய்வோர்க்கொரு நாளும் பாவமில்லை
நித்திரை யில்லாருக்கு நேரும் பயமுமில்லை.
தன்னவனா யிருந்தம் பிதங்கள் செய்தாக்கால்
அன்னியனா மென்றெண் ணியன்றே யகற்றநலம்
அன்னியனா யிருந்தன் புள்ளோனா னானக்கால்
தன்னவனா மென்றவனைத் தாபரித்துக் கொள்ளல்நலம்

25(ஆ) நல்லோர்க்கு முன்னானோர் நன்மை செய்தாலதற்கு
பொல்லா வொருநூறு பிழையும் பொறுப்பார்கள்
அற்பர்க் கெழுநூறுதிக நண்மை செய்தாலும்
சொற்பவொரு பிழைதான் செய்தாற் பொறுக்காராம்
செய்த தவத்தளவே செல்வமது வுண்டாகும்
எய்துங் குலத்தளவே யிருக்குமவர்கள் குணம்

கற்றோர் நலஞ்சிறந்த கன்னியர்களன் புடையோர்
நற்றவங் களுற்றவர்க்கும் ராசாக்களா னவர்க்கும்
சாதிவாம பெண்ண ா தனுசரிக்க வேண்டுவதே
நீதிமுறை யென்றுமனு நீதிநூலோ திடுமாம்.

26(அ) இன்பக் கவிமூட ரிடத்திற் படித்தாக்கால்
நன்றில்லைச் சற்றுமதற்கும் பழுது சொல்வார்
கற்றோர் ருமைதனைக் கற்றோரறி வதல்லாற்
சுத்தமலடி பிரசூ திதுயறி வாளோ
பஞ்சரித்து வேண்பரிசு பெறுவ திலுமின்
சொல்லாற் பிச்சை யெடுத்துண்ண நன்றாகும்
வீம்பான சத்திராதி மெய்யென் றிருப்பதிலும்
பாம்போ டுறவுமிகப் பண்ணுவதே நன்றெனலாம்
கண்ணென் றுரைப்பதிரு கண்ணதுவுங் கண்ணுமல்ல
எண்ணென்ப ஏனையெழுத் தென்பது வேகண்

26(ஆ) கைப்பொருளே பொய்ப்பொருளா கங்காலவரை நில்லாது
மெய்பொருளாந்தான் கற்றவித்தை நீங்காப் பொருளாம்
வாழ்வுமிக வந்திடினும் வம்மிசத்தின் மார்க்கம்போல்
தார்ழ்ந்து நடப்பவர்க்குத் தாழ்வுசற்றும் வாராதே
யானைதன் தென்றடாது செய்யப் போகாது
தீனானதை மிகுந்து தின்றாலுங் கேடெய்தும்.
ராசருரியரென்று நடத்தை பொறுமை செய்தால்
ஆசார மேன்மையும் போய்வதியும் வந்தெய்திடுமே.
இல்லாரை யுள்ளவர்களே சியிருமுக் குரைத்தால்
நல்லதல்ல நஷ்டமேயாம் ராட்டினம்போற் சுற்றிவரும்.

27(அ) தேசமதி லேழைபர தேசிமறை வேதியரை
ராசாகாவா விட்டால் நன்றல்ல பாவமுமாம்.
சாகாவரம் பெற்ற வர்க்குப் பயமுமில்லை.

வாகாகப் பேசாத மௌனிக்குச் சண்டையில்லை.
வித்தை கற்றால் தந்தைதாய் மேதினியெல்லாம் புகழும்
கற்றதொரு வித்தையது கற்பகத்துக் கொப்பாகும்
மெத்தவழ(க்) குடையோர் மேற்குலமே யானாலும்
வித்தையொன்று மில்லாட்டால் விரையில்லாப் பூவாகும்.
திருந்துமயிர் நகமுந்தேச மன்னர்பல நான்கும்
இருந்தவிடம் பிரிந்தாலி வைகளுக்கு மேன்மையில்லை.

27(ஆ) மின்னாரில் தாசி வேதியர்நாய் கோழியுடன்
தன்மைசேர் பாண்டிதர்கள் சாதியொத்து வாழார்கள்
ஓங்குபொருட் சேதமுயிர்ச் சேதம் வந்தணுகில்
சாங்கமுடன் சிரித்தாற்ற யிரியமலர்ந் தெய்திடுமாம்.
தர்ம சிந்தையுள்ளோர்க்குந் தயான புருடனுக்கும்
எம்மாத்திர பொருளு மில்லாளு மோர்துரும்பு
வீரமிகு சூரனுக்குமே வலர்சேனை துரும்பு
பாரிற்றுறவி கட்குப்பார்த் திபனுமே துரும்பு
பெரியோருக் கற்பர்கைப் பிரயோச னந்துரும்பு
அரியகலை வாணியருளடைந் தோர்க்குக் கவிதுரும்பு
நூற்றிலொரு சேவகனாம் நூற்றம் பத்தாயிரத்தில்
பார்த்தறிந்தா லொருவன் பாவாண னென்பவனாம்.

28(அ) பாங்கான வார்த்தை சொல்வோன்பதி னாயிரதொருவன்
நீங்காக கொடையாளி லட்சத்திலே யொருவன்
சினமென்ப தென்பதொரு சிக்காமதையறுத்தால்
மனமென்ப தென்ப துற்றவாறே முடித்திடலாம்.
அரிதான மாதவங்கள னேகமாய்ச் செய்தாலும்
பொறுமையென் பதில்லாதேற் போமே விழலாக
எத்தாம மானாலும் எண்ணித் துணிதனன்று
மிக்கத் துணிந்த பின்னர்மேலெண்ணி னாலிழுக்காம்

பட்சிக்கரசு பலம் பாலருக்கழுகை பலம்
மச்சத்துக் கேசலமாம் மன்னர்க்கு வேல்பலமாம்.
வாகனங்கள் தானுடையான் வழிநடை(க்) கஞ்சானாம்
வாகுடனே பாலுடையான் வந்த விருந்துக்கஞ்சான்

28(ஆ) வஸ்திர முள்ளான் சபையில் வரப்போக வஞ்சானாம்
உற்ற பணக்கார னொன்றுக்கு மஞ்சானே
மானிற் கவரிமயிர் தடுத்தா லேகாது
மாண்பானவ் வாறாய் வசையனுவுங் கேளானாம்
மேஷந்தனக்கு மிரண்டு செவியு மறுத்து
மாசுபட தேகமயிர் முழுதையுங் களைந்து
சூடுசுட்டியும் பின்னே துடர்ந்துவரும் வாறதுபோல்
கேடுகெட்ட மானிடர் கீர்த்திகளுக் கஞ்சாரே
மச்சுவீடால் நிழல்மா னூர்தனக் கோடு
நிச்சயமாய் கிணற்று நீராமிவை நான்கும்
கட்டாகச் சீதன காலத்திலு ஷ்ணமதாய்(த்)
திட்ட முடனுஷ்ணத்தில் சீதளமுமாகு மல்லோ.

29(அ) சாதிதொழில் செய்வார் தனக்குக் கெடுதியில்லை
மாதவமாய் காலமறிந்து செபஞ்செய் பவர்கள்
ஏதேது பாவங்களொரு நாளுமில்லை யென்று
நீதிமனு நூலினி கழ்(த்)தினார் முன்னோர்கள்
பொன்னைத் தரிசித்தாற் போகமது சம்பவிக்கும்
வண்ணமலரைச் சேர்ந்தால் வாசமது சம்பவிக்கும்
பெரியோரை சார்ந்தவர்க்கு பெருமை மிகவுண்டாகும்
சிறிதான துர்ச்சனரை சேர்ந்தவர்க்குக் கேடுவரும்
விண்ண தனிலேயிருந்து விழும்மழை(த்) துளிதான்
மண்ணிற் சுடும்யிரும்பில் வந்துவிழு முன்சுவறும்
தாமரையில் வீழ்ந்தால் தாழாது யராது
சேமத்துரை கடலின் சிப்பியிலே வீழ்ந்தாக்கால்

29(ஆ) விலைமதிக்க வொண்ணாத வெண்டரளத் தையீனும்
தரைமீதி லிவ்வாறு சற்பாத்திர மறிந்து
கொடுப்பதே தாமிந்தக் கூற்றறிந்து செய்யாட்டால்
விடுப்பாய்(க்) கொடுப்பதெல்லாம் வீணாகு மென்றனரே
காரிருளிற் புற்றடியிற் கண்ட பழுதைதனை
சீறுமுயர் பாம்பென்று செப்புவாரர் தப்பாமல்
உத்தமர்கள் தாசிவீட் டே ரமாய் போனாலும்
சத்தியமா யுத்தமரைச் சமுசயமாய்(ச்) சொல்வார்கள்
வீணாகப் போகா விடந்தனிலே போகவொண்ணா
தோணாமற் போனாக்காற் றுன்பம்வரும் பின்னிழுக்காம்.

30(அ) தேசிவந்தாற் பசுவைத் தேடாரதி மோகத்
தாசி வந்தாற்றனது தாரமதைத் தேடார்கள்
ஆசையாலேப் பொருளும் அபகரிக்க வேண்டுவர்க்கு
ரோசமில்லைக் கேடுகெட்ட லூத்தாகளிலுத் தர்களாம்
அன்னை பிதா மூத்தோனா சானரசருடன்
பின்னைப் பெரியோர்கள் பிராண சினேகிதர்கள்
ஆகயெழு வர்களும் அழையா திருந்தாலும்
போகலாமே யொழியவலியப் பிழையொன்று மீனமில்லை
மலைகானஞ் செல்ல நன்றல்லாது தானரித்த
கலைகிழித்துக் காவியிட்டுக் கௌபீனங்கட்ட நன்று

30(ஆ) ஓடெடுத்து வாங்கியே யுண்ண நன்றியாவர்களும்
நாடாவனத் தினிற்போய் நாடுவது நன்றாகும்.
ஈயாத லோபியிட மேற்கும் புலவருக்கு
ஞாயமிது வென்று நவின்றாரே முன்னூலோர்
வெள்ளாட்டி யானவளை விரகத்தினா லணைந்தால்
உள்ளகுலமும் போயொழுக்க மெல்லாங் கெட்டுவிடும்
வேசையரைச் சேர்ந்தாக்கால் வேடகமில்லைப் பொன்சேதம்
ஆசையாலே விதவை யானவள்ச் சேர்ந்தாக்கால்

ஆயிசுமே தான்குறையும் கலவாளி லட்சுமியும்
தூயபிறர் தாரத்தைச் சோரத்திற் சேர்ந்தாக்கால்

31(அ) வன்னரகஞ் சேர்வரிவை யாகாது நாலுமென்று
முன்னோர் வடநூலில் முறையா யுரைத்தனரே
செல்லுமிட மானாலுஞ் செல்லா விடத்தினிலும்
பொல்லாத கோபமொரு போதும்வைக் கலாகாதே
இன்னவகை யின்னனாலெய்து மெய்தா தெனவே
தன்னிலறிந்து செய்யா தாராகிஷ்ட்டம் வருமே
கள்ளுண்டா லூற்றகாரண மெல்லாம் வெளியாம்
கொள்ளை விரும்பிற் குலைகள்வந்து நேரிடுமே
சூதாடிலிம் மையிலே துன்பம் வருமல்லாது
சேதாரமாகுந் திரவியங் களுள்ள தெல்லாம்

31(ஆ) ஆகாய வீதிக்கு ஆதித்தன் ரத்தினமாம்
வாகான கல்விகற்றோர் மாசபைக்கு ரத்தினமாம்
சயாந்தனக்கு ரத்தினஞ்சார்ந் தவழகுள்ள பெண்கள்
நயமான வீடதற்கு ரத்தினஞ்சற் புத்திரராம்
ஏமனை வென்று சயமேற்பது வேரேயானாலும்
மேன்மை செறிபெரியோர் வெம்பகை யொன்றாகாது.
ஆர்க்குந் திருமா தனுக்கிறக முள்ளளவும்
பாருக் குள்ளெந்தப் பாகையும் நெருங்காது
கூடாத காலங் குறுகிவருங் காலம்
வீடான திலிருந்தும் வீன்விளையுந் தன்னாலே.

32(அ) தரித்திரர்கள் பசிதாங்குவதே மிக்க கொடை
ஒற்றபணக் காரர்க் கீவதுவே வெட்டியுமாம்
எழியோருடனே தீர்த்தே யெண்ணாமல் வைவதிலும்
விழிகாணாதோ டென்று விரட்டுவ தேநன்றாகும்.
அன்பில்லா தாரிடத் தில்திக வுறவதிலும்

பின்பு மவருடைய பெருத்த பகைநலமாம்
வேண்டாப் பெண்பீரை நிதம்வீணாய் வைத்தேசுவதில்
வேண்டாம் நீயென்று விரட்டிவிட லுத்தமமாம்
சாலவே வாழ்வுடையோர் சாவதற் கஞ்சுவராம்
சால வறுமையுற்றோர் சாவதற் கஞ்சாராம்.

32(ஆ) பாரிலேயீ கையுள்ளோன் பாக்கியமெவ் வாறென்னில்
பூர்வபட் சப்பிறை போலவளர்ந் திடுமாம்
ஈயாதான் செல்வமது எத்தனையுண் டாயிடினுஞ்
சாயுமபரபட்ச சந்திரன் போற்றேய்ந் திடுமாம்.
என்ன வறுமையுறினு மேற்பதொன் றில்லாவிட்டால்
அன்னவனே பாக்கியவா னாகுமென்று சொல்லிடலாம்
பாரித்த செல்வர்கள்தான் பலர்க்குதவி யில்லாட்டால்
தரித்திர ரென்று தப்பாமற் சொல்லிடலாம்
கையானது நமது கண்ணிலே குத்திவிட்டால்
கையைத் தரிக்கின்ற காரணமுண் டோவதுபோல்

33(அ) இளையோர் நமையடைந்தோ ரேதுகுற்றஞ் செய்தாலும்
பிழைபொறுக்க வேண்டுவதே பெரியோர் முறைமையதாம்
அழகிளமை மூப்புமயிஸ் வரிய மின்னான்கும்
வளமுடனே நம்முடைய மரணவரை நில்லாது
நன்னயஞ் சேர்பாலுடனே நல்லதண் ணீருங்கலந்து
அன்னத்தின் முன்வைத்தா லாவின்பால் மட்டுமுண்ணும்
தண்ணீரைத் தள்ளுந் தகைபோலே யுலகம்
விண்ணாண மாயுரைத் தாலின்னூலைப் பாராமல்
எண்ணியே நுண்ணிய நூலென்பதனைக் கற்றக்கால்
மண்ணிற் சுகமும்வரும் மறுமையிலே சொர்கமுறும்
இட்டமுறு மோகஸ்திரியே யிகட்சி செய்தாலும்
திட்டியடித் தாலுஞ்சினம் வரவே மாட்டாது.

33(ஆ) இனம்பொரு ளுமிகவெய் துவதானா லுமதிற்
துன்பம் வருமென்றறிந்தால் சொற்பனத் தினோக்க
வொண்ணா
பயனில்லாவார்த்தை சொல்லிப் பலனாளுங் கோளுரைத்தால்
தயவாயவர் செய்யுந் தாமம் பலியாது
ஊரார் பகைதுன்ப மோயாம் காவறுமை
மாறா தெனவுமுன்னாள் வள்ளுவனார் சொன்னாரே
வாழ்வுள் ளோரானாலும் காஞானி யானாலும்
தாழ்வுள்ளோ ரானாலுந் தமிரிய வானானாலும்
நாடொப்பன் நெகிழ் தலாகா தொருநாளும்
மூடத்தனமாக முன்பின் னாய்ச் செய்பவரும்
அருபியுமான அலகை யோடொக்கு மென்றும்
பிறகவரைச் செத்த பிணத்தோடே சேர்க்கவென்றார்.

34(அ) பொருளில்லாதார்க் கிந்தப் பூமியிலே கீர்த்தியில்லை
அருளில்லா தார்க்கு அவ்வுலகத் தேதுமில்லை
ஊன்தின் பவர்க்கு வொருபோத ருளுமில்லை.
தானதர்மஞ் செய்தாலுஞ் சாம்பரிலேவிட்ட நெய்யாம்
வாக்கிலொன்று பேசி மனதிலொன்று வைப்பதுவும்
யார்க்கு நல்லாரென்று கள்ளவர்சாரஞ் செய்வதுவும்
காமக் குரோதமுற்று கன்னியரை காதலிப்பார்
மேன்மைச்சடை வளர்த்து வெண்ணீற்றை பூசிடுவார்
தாடிவளர்த்துத் தலை மொட்டை செய்திடுவார்
பாடிப்படித்துப் பாதுகையின் மேல் திரிவார்
மகத்திவருமல்ல வல்லவாய்ப் பிழைப்புக் காத்திரியும்
செகச்சாலக் காரரிவர் சித்தியொன்று மில்லையென்பார்.

34(ஆ) ஆவென்ற பாவமொன்று மற்றாற் பிறவியறும்
சீவன்முத்த னாமென்று செப்பினார் முன்னூலோர்

பிறவுயிரைக் காத்தல் பேதமில் லாமனது
விரத பங்கமில்லாமை வெகுளாமை யின்னான்கும்
தவமிது வாமென்றுந் தங்குமெஞ்ஞான மென்றுஞ்
சிவயோகியாவ ரென்றுஞ் செப்பினார் வள்ளுவரும்
மன்னவரே யானாலு மற்றேவலர் களானாலும்
மென்ன விதமாமேயிடர் வருமென்றே யறிந்தால்
கைத்தானய மதனைக் காவாமற் போனாக்கால்
மகத்தான வாழ்வு கெடுமானிலத் துன்பமுண்டாம்
மாறினிலை யும்வல் பீணியுந் தீக்கோளும்
வேறுபகை வர்கள்வர் மேலுமேவற் பகையும்.

35(அ) வாராது தற்கால வகையறிந்து தீர்ப்பவரை
ஆராய்ந் தறிந்து அவரைத்துணைக் கொள்வதாம்
ஈகை யில்லாமாந்தரிருந் தென்னிறந் தென்ன
ஆகையாலே மிருகம் அதனிலே சேர்க்கவென்றார்
தலமீதில் மிக்கான சாத்திரங்கள் கற்றாலு
முலகவியற்கை தனை யொன்றும் விடவாகாது
இல்லாதாராலு மிரந்து முலக வளம்
வல்லமையாய்ச் செய்தவரே மாதவருக் கொப்பாகும்
வலியா ரெளியாரு மானவான மூவரிட
மலிவான கோபங்கள் வைத்தாரே யாமாகில்
நாடாமல் லட்சுமியும் ராசர் பகைநேருங்
கேடாய் முடியுமென்று கிளர்த்தினாளவ் வையுந்தான்

35(ஆ) எப்போதுங் கீர்த்தி சற்றுமில்லான் றனைச்சுமக்கும்
வெப்பிறை பூமிவிளைவு குன்றிப்போய் விடுமாம்
குற்றமில்லாமல் கொடுத்துப் பொருள் தேடாரை
செத்த பிணத்தோடே சேர்க்கவென்றார் வள்ளுவரும்

காலம்

தந்தைதாய் புத்திசொன் னாற்றள்ளி முனியுங்காலம்
நிந்தனையாய்ச் சற்குருவை நிகழ்த்துங் கொடுங்காலம்
பெரியோரைத் தூஷணித்துப் பேய்க்குதவு மிக்காலம்
அரிசிவனை நிந்தனை யாயீகம் பேசுமிக்காலம்
மெய்யே பொய்யாங் காலமேலோர் கீழாங்காலம்
பொய்யே மெய்யாகப் பொருந்து மிதுகாலம்

36(அ) வன்சமலி லோடினவர் வரிசை பெறுங்காலம்
அஞ்சியே யாடைங்கி யரிவையர் மேலாங்காலம்
இன்பமுறு நூல்படித் தாலிகழ்ச்சி காலம்
பண்பில்லா நய்யாண்டிப்பாட் டைபெய்க்குந் துற்காலம்
இனிதான சற்குணர்க் கொன்றீயாக் கலிகாலம்
அனியாயக் காரருக் குமடிக்கு தவுமிக்காலம்
பெண்டாட்டி வைதாலும் புருஷசன் குறியாமற்
கொண்டாடிக் கொண்டிருக்குங் குலாமருக் கேயாங்காலம்
ஆனகலி காலத் தடைவிதுவே யானாலும்
மாண்பா னவனும் வையகத்தி லுண்டெனலாம்
இருப்பார்க் கொருகடனு மெய்தாத காலமுமாம்
ஒருக்காலு மீயாற் குவுதவு வாரிக்காலம்

36(ஆ) ஆசாரந் தாமங்களங்க சுத்தி மூன்றுமில்லார்
வேசை வெள்ளாட்டிகளே மேல்வட்ட மாங்காலம்
தேடீயிடுவார் களுக்குத் தேவியர்கிட் டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்டுகள் வாய்க்குங் காலம்
சுகமாய்க் குடிப்பிறந்த சுதர்காற்கு மேன்மைகொஞ்சம்
விபசாரத்திற் பிறந்தோர் மேல்வாரமிக் காலம்
கொண்ட பெண்ணை விட்டுக்கொடிதான லவவாடி
முண்டைகளைக் கொண்டலையு மூடர் மேலாங்காலம்
சொந்த மணவாளனையுந் தூசணித்துச் சோரத்தில்

அந்திபகலூர் சுற்றும்அவி சாரிக்காங் காலம்

37(அ) மேற்குலமுங் கீழ்குலமும் விபசாரத்தில் மிஞ்சி
வாகுபெறும் வேசையர்கள் வறுமைக் குளாங்காலம்
பிள்ளை வயதில் மிகுத்தாற் பிதாவினது சொற்கேளான்
தெள்ளியதோர் வித்தைகற்றால் சிஷ்யன்குரு வைத்தேடான்
பெண்டான வல்லியவள் பேச்சில் மிகுத்தாக்கால்
கொண்ட கணவனையுங் குறியாக யெண்ணாளாம்
பாரோர் கண்ணோய் தீர்ந்தாற் பண்டிதரைத் தேடார்கள்
சீரான செல்வம் வந்தால் தெய்வமதைப் பேணார்கள்
தன்னுடைய மாதர் தமையன் மனையாட்டி
மன்னர்கள் தன்தேவி மாமியா ரானவரும்

மாதா

37(ஆ) தெய்வ நிகரான தேசிகனார் தேவியிவ
ரைவரையுஞ் தாயென்ற ருளினார் முன்னூலோர்
பெற்ற பெண்போலவுமே பேணி மருமகளை
வைத்தா தரித்து வருமாமியே தாயாம்
தந்தை தனக்கிளைய தாரமிந்த கைகேசி
பிந்தவருஞ் சித்திராங் கிப்பிள்ளைகட்குச் சத்திராதி
பின்தார பிள்ளையென்று பேதகமில் லாதமனக்
குந்திதனக் கொப்பான கோதைமுதல் மாதாவாம்

பிதா

தன்னையே பெற்றவருஞ் (சற்)குருவு மன்னவரும்
மன்னுந் தமையனுடன் மாமன் வளர்த்தவரும்

38(அ) வித்தை வருவித்தோர் வெங்கலியைத் தீர்த்தவரும்
மற்றுமொரு மாபத்துவரும் போது காத்தவரும்
ஓரொன்பது பேருமுற்ற பிதா வென்று

கூறுமனுநீதிக் கொள் கையிதுவே யாகும்.
கல்விவரு வித்துக் கடனொன்று மில்லாமல்
செல்வ முடன்வைதத்திற லோனோர் தந்தையுமாம்

மைந்தர்

அற்பராம் நூறு பிள்ளையானாலும் பெற்று மென்ன
சற்புத்திர னொன்றானால் தலைமுறையெல்லாம் விளங்கும்
தந்தை தாய் வாக்கியந்தமயன் குருவாக்கியம்
சிந்தையினிற் சத்தியமுநீ தெய்வ விசுவாசமுடன்

38(ஆ) இத்தகமையாறுடை யோனினிய தசர தன்றின்
புத்திரனுக் கொப்பான புத்திரனே புத்திரனாம்
எத்தனை தான் செல்வத்தியல் போடிருந்தாலும்
புத்திரனில்லா வாழ்வும் போசனமு நஞ்சாகும்
தந்தைதாய் வாக்கியமது தன்னைப் பரிபாலித்தோர்
நந்தாத சரதனாம் ராசகுமார னென்பார்
பிதாவுடைய வாக்கியம் பிசகாது காத்தவன்றான்
சுதாகரரில் மிக்கசுதன் பரசு ராமனென்பார்
ஆசான்றன் வாக்கிய மனுவுந் தவறாதான்
வாசாலன் சத்தியமுள்ள வாய்மையரிச் சந்திரனும்

39(அ) தமையனுரை தட்டாத சற்புத்திர ரானோர்
தமையுமங்கே சீர்தூக்கிற்ற ருமனுக்கு நேரிழையோர்
தந்தை பேர்தன் பேருந் தாரணியிலே விளங்க
தந்தை தாய்சொல் மறுக்காத தன்மையோன் புத்திரனும்
தந்தைக் கிசைந்த மறுதாரமே தன்றாய்போல்
வந்தனை செய்மைந்தர் மனுகுலத்துமைந் தரொப்பார்
நல்லார் பொல்லா ரென்றிரண்டு வகையுலகஞ்
சொல்லுவதை விந்திலுற்ற சுதராலறிந் திடலாம்

சோசியம்

உற்பவித்த நாளும் பின்னோன்பதுட னொன்பதுவும்
வைப்பேதும் வைக்க வொண்ணாவழி போகலாகாது

39(ஆ) வல்பிணியுந் தீராது மருந்துண்ண லாகாது
கல்யாண மெண்ணை மயிர்களைந் திடவுமாகாது
இல்லம் புகுதலினி துண்ணவும் விதைக்க
நல்லறங்கள் செய்திடவும் நற்பணிகள் நற்றூசு
தானுந் தரிக்கவிது சார்ந்த நாளாகுமென்று
மேனுட கணித விதியாலுரைத் தனரே
திங்கள் முதனாளுமது சென்றகடை நாளுடனே
மங்கையர்கள் பூப்பு நாள்வாசியமா வாசியிலும்
சென்மநாள் மூன்றினிலுஞ் சேயிழையைப் புணர்ந்தால்
தனம் மல்லவாழ் நாளுந்தான் குறையு நோயணுகும்.

40(அ) தலைக் கெண்ணை போசனமுஞ் சவரமுடனித்திரையும்
நலத்தைக் கொடுக்குமந்த நற்கிழக்குத் தெற்கதுவும்
மற்றவிரு திசையு மாகாது மத்தியமாம்
அத்தமழியு மல்லாலாயுள் விருத்தியில்லை யென்றார்.

லட்சுமி இருப்பிடம்

மாயவன்றன் மார்பினிலும் மன்னரிடத் தினிலுந்
தூயமலர் வில்வந் துளசிகடப்ப மலர்
தாமரையின் பூவினிலுஞ் சாகரத்திற் கங்கையிலுஞ்
சேமமுறும் யானை தேசிமுகத் தினிலும்
ஊதுகின்ற சங்கமுனுத் திராட் சஞ்சாயமாத்தில்
கேதனத்திற் றேரினிலே கேட்ட போதுன்னூபால்

40(ஆ) சுத்தமுள்ள வீரரிடஞ் சுத்தமாகிய மனையிற்
சத்தியஞ்சேர் வாக்குடை யோர்தனம் பரிபாலனர்கள்

அழகுஞ் சிகரமும் மாந்த குணப்பெண்ணிடத்தில்
வளமை தரும் பசுக்கள் வாழுமிடந்தனிலும்
மாகனகம் போற்சுத்த மான விடந்தனிலும்
கோகனகமாது குடி யிருப்பா ளென்னாளும்

மூதேவியிருப்பிடம்

சோரஸ்திரி யீடத்திற் சூதகப் பெண்ணிழலில்
பார்க்கிடாவில் பல்விளக்காப் பேரிடத்தில்
சூலைப் புகையில் சுடுகாடெரி புகையில்
காளையாங் காமுகர்பால் கழுதை யிடத்தினிலும்

41(அ) கள்ளி நிழலதிலுங் கைம்பெண் கடன்னிடத்திற்
கொள்ளிக் கரியுமியிற் கொட்டை நூற்பாரிடத்தில்
நீசர் நிழலில் நிட்டை யில்லாதாரிடத்திற்
பேசுங் கடுஞ்சினத்தோர் பேடியிடந் தனிலும்
சுத்தமில்லா மனையிற் சுரர்பானரிட மிரவில்
வெற்றிபெறும் வேல்விளா வினிழல் தனிலும்
என்றுஞ் சுசிகரங் களில்லா விதவைகளை
மொன்றியனை வோர்பாலு தயந்துயில் வோர்பால்
மீதூணருந்துவர் பால்மேன்மை சற்றுமில்லாத
மூதேவியாளு நிதமோடிக்குடி யிருப்பாள்

பகை

41(ஆ) பாங்காகனாளும் பகற்புணர்ச்சி செய்பவருந்
தாங்காதிடக்கை யாற்றாம் பூலந்தின்பவரும்
போசனங்கள் செய்கின்ற போதிற் சிரசினிலே
தூசு புனைந்துண்ட துன்மார்க்க ரானவரும்
காலையிலு மாலையிலுங் கண்துயில்வார் தன்னுடனே
நாலு பேரானவர் பாலட்சுமியும் நில்லாளே
பாரம் பெரியகத்தி பஞ்சுதனக்கே நாளும்

சூரியனு மிந்திரனும் துஷ்டரவினால் மறையும்
சிற்றெறும் பால்யானை திகைக்குமது போல்
அற்பரால் மேலோர்க் கவதிகளும் வந்தெய்தும்

42(அ) தந்தைதாய் சொற்கேளார் தடுப்பார் கொடுப்போரை
அந்தக் கொடியோரு மட்டமத்திலே சனியாம்
சபையிற் பிரசங்கந் தன்னிற் பழுதுரைப்போர்
அபையமிட்டுப் பேச்சில் மிச்சமானதொரு பெண்டிரும்
தாமாய் வீரோதியுட்ன்ருனிவர்கள் மூவருந்தான்
சேற்றிலே வந்த செவ்வாய்க் கிணையெனலாம்
தன்னை மிஞ்சுமடுமை சந்திராஷ்டம் பங்குக்காய்
தன்னைச் சபையேற்றுந் தம்பிசென் மச்சூரியனாம்
சகோதரர்க்கு வஞ்சனைசெய்த மயனாமென் றாவன்பன்
மாகாபாவிமூன்றா மிடத்து வியாழன் தாம்

42(ஆ) பார்த்தவர்கள் மெய்த்தவன்று பழுதுசொல்லிக்
கொடுப்போன்
ஏற்றமிடும் பொல்லாத இராகுவுடன் கேதுவுமாம்
சாலக்கடன் பட்ட தந்தையரு மார்க்குமனு
கூலமாயுட் பட்டுக் கொண்டு திரிதாயாரும்
வித்தையில்லாப் பிள்ளையுடன் வேசையாம் பெண்டாட்டி
சத்துருவாம் நால்வரென்று சாற்றினார் முன்னூலோர்.
வேங்கை பதுங்குவதும் மேஷம் பின்வாங்குவதும்
பாங்காய்ப் பகையுறவும் பாம்பு சாய்ந்தாடுவதும்
நல்லோர் பெரியோர் கண்யந்து வணங்குவதும்
மெல்லவிடச் சிறப்பும் விழிமகிழுமின் னொளியும்

43(அ). மிக்கான வல்வனையும் வேழ முறங்குதலும்
உக்கிரதளஞ்ச மரிலொன் னலார்க் கொதுக்கும்
யித்தகையா மீரைந்து மெளிதாயுரைக்க வொண்ணா

மத்திப முமாமுயிர்க் குவாதை களுமுண்டாக்கும்.
சொற்குற்றம் பாராட்டித்தொடு வழக்கைச் செய்பவர்பால்
பற்காட்டிச் சீவனங்கள் பண்ணித் திரிவதுதான்
வலிதான வாடரவின் வஞ்சப் படத்தினுள்ளே
எலிவாழ்ந்த வாறென்றியம் பினார் முன்னூலோர்
பண்பாய்க் கடுவுறவும் பண்ணவுந் தானாகாது
பின்பவரையும் பிரிந்தாற் பிணக்காம் பகைநேரும்

பகைவெறுப்பு

43(ஆ) அங்கபங்க மானாலும் ஆசியங் களானாலும்
தங்கள் குலத்தேது தாழ்வுற் றிருந்தாலும்
நிந்தனைகள் சொல்லி நெகிழ்ந்துரைக் கலாகாது
எந்தக் குலமுமிழிவில்லா தில்லை யில்லை
துன்பம் பழிபகை யுந்துடரும் பழிபிழைகள்
பின்பவர்க்கும் மெய்தும் பெருமை சற்றுநில்லாது
நேர்ந்தவினை வலியு நோவார்கடன் வலியும்
சேர்ந்ததுணை வலியுஞ் சீர்தூக்கிச் செய்வதுவாம்
கூடாத காலமடைக் கொக்கது போலேயிருப்பாம்
கூடுமந்த காலமடைக்கொக்கது போலவெற்றி கொள்வாம்

44(அ) நுட்பளறும் பெல்லாங்கூடி நோக்கா மலேயேற
ஒப்பில் கருங்கற் குழிந்தவுவமை பகைவெல்லுதலாம்
மெள்ள மெள்ளப்பாய்ந்த நீர்மிக்கக் (ம)லையின்
கல்லைக் கரைக்குங் கதை போற்பகையறுத்தல்
காலமது வறிந்துகாக்கை வெல்லுங் கூகைதனைக்
காலமது தப்பினாற் காக்கைதனைக் கூகை வெல்லும்
சிலநாளா யானை யொரு தேங்காயினோட்டக்கிப்
பலிதமுள்ள வேளை கண்டு பாகனையே வென்றதுவாம்.

44(ஆ) பண்பாக காலமது பார்த்துப் பகை செலுத்தும்
பண்பிதுவா மென்று பகர்ந்தாரே முன்னோர்கள்

உற்றபகைவ ரென்றுள்ளாக் கிக்காரியங்கள்
பெற்ற பிறகுபகை பேதமதைக் காட்டுவதாம்
காலத்தின் சீலங் கண்டறிந்து கொள்ளாதார்
கோலமழிந்து குரங்காவார் தப்பாது

சேரிடம்

சந்தன விருட்சமதைச் சார்ந்த மரமவ்வாசம்
அந்த மகாமோணைந் தவக்காக மன்னிறமாம்

45(அ) பாலிற் கலந்த நீர் படிகமணிக்குள் வடமும்
சாலமாகதக்கற் சாய்கை பட்டதிம் முன்றும்
தன்னிறங்களைக் கொடுக்குந் தன்மைபோல நல்லோரை
நன்னயமாய்ச் சேர்ந்தோர்க்கு நற்குணமே யுண்டாகும்
நல்லாரைக் காண்பனவு நல்லார்சொல் கேட்பனவும்
நல்லார் குணமுரைத்தான் நன்மையுண்டா நன்றாகும்
ஆசாரமன்பு மறிவடக்க முள்ளோரை
தேசத்திற் கண்டுசேர்ந்தாற் பெருமை வரும்
கதிரோனுதிக்கையிலே கண்ட பெருஞ்சாய்கை
மதியமதியமதிலே குறுகும்வாறு சிறியோரிணக்கம்

45(ஆ) மதியந்திரும் பின்பினவாத்திக்குஞ் சாய்கைப்போல்
சதிராய்(ப்) பெரியோரைச் சார்ந்தாலே நன்மைவரும்
கற்றபெரியோ ருறவுகரும் பைநுனியிலிருந்து
துற்றநல்லவோ் வரைக்குமுண்டரு சிபோலாகும்
சிறியோருடனுறவு திளகரும்பைடி யிலிருந்து
கற்ற பெரியோரைருறவு கரும்பு நுனியிலிருந்து
துரியநுனி வரைக்கு முண்டருசி போலாகும்.

செல்லாவிடம்

கடலோடுங்கப் பலது கரையிலே யோடாது
புடவியிலே யோடுந்தேர் புனலிலே யோடாது

தண்ணீரில் முதலையதைத் தந்திவெல்ல மாட்டாது
நண்ணு புலிகாடன்றி நாடுற்றாற் கோட்டையும்

46(அ) செல்லுமிட மிவ்வாறு திறஞ்செலுத்த வேண்டுமன்றி
செல்லாவிடந் தனிலே திறஞ்செலுத்தக் கூடாதே
மன்னர் மெச்சிக் கொடுக்கும் வரிசையதிகாரம்
பன்னுஞ்சாம் பிராச்சியமும் பட்டாபிஷேக மென்பார்
நல்ல குணமான மின்னாள்நாடி வலியவந்து
புல்கிடிலே யோகம் புத்தமிர்த சித்தமுமாம்
மண்ணிற் புதைந்தபொருள் வாதமுறைக் காசையுற்று
நண்ணுவார்க் கெய்தாமல் நண்ணார் கடகெய்துவதும்
மிஞ்சும்பயிர் விதைத்து விளைவு குன்றிப்போவதுவும்
கொஞ்சம் பயிரிடுவோர் கூடிவந்து வாழ்வதுவும்

46(ஆ) கப்பல் வியாபாரங் கனங்குறைந்து போவதுவும்
சொற்பமாய் வாணிபஞ் செய்தோர்களுக்குக் கூடுவதும்
காணாமற் காணாமற் காவலர்கள் கேள்வியினாற்
தோணுதலாய் வலியத்தோனில் கொடுத்து வாழ்வதுவும்
மேனாளிற்றந்தை தாய்விட்ட குறைா யாகுமென்றும்
தானுமுன்னாள் செய்திருந்த தானதர்ம மாவதென்றும்
அந்நாளிற் பூவெடுத்து அர்ச்சனைகள் செய்ததென்றும்
இந்நாட்டுப் பெரியோர்கீயந்து வரம்பெற்ற றென்றும்
லட்சுமி கடாட்ச மிந்தநான் வகையோர்க்கு
உச்சித மாய் முன்னோருரைத்த தாருலகோர்க்கு

47(அ) திருமடந்தை சேரில் சிறப்புங்கன முமுண்டு
பொருளுந்துரும் பாகும் பொல்லாரு நல்லோராம்
சொல்லாத வார்த்தைச் செல்லுஞ்செய்யு மரியாதை யுண்டாம்
எல்லோருமே புகழ்வாரே எதிரியும் உறவாம்
கீழோரு மேலோராய்க் கிளையுமிக விருத்தியுண்டாம்

தானாப் பெருங்காற்றுத் தண்ணீர்போற் கூடிவரும்
வீரப் புலியுயிரை விட்டாலே தோல்கொடுக்கும்
சூரனுயிர் போமளவுந் தோர்வையென்றும் பின்வாங்கான்
உத்தமி யென்னாளு முயிர்க் குலயமில்லால்
சற்றாகிலும் பிறர்க்குத் தன்னியத் தைத்தான் கொடுத்தாள்

47(ஆ) ஏற்தைபோல் சாலவுந் தானென்ன துன்பமுற்றாலும்
ஊக்கமது கைவிட்டாலு யிர்க்குலயம் வந்தெய்தும்
உள்ளஞ் சிதறாமலொன்றி னையேகைப் பிடித்தால்
தெள்ளுமருள் பெருளுஞ் சித்திமுத்திரண்டு மெய்தும்
பலவாய் நினைக்க வொருபலனதுவு மெய்தாது
அலைவாய் துரும்பது போலலைந்து கெடுஞ்சித்தியில்லை
ஐம்புலனையுஞ் சீறியோரடக்குவது வேயுருமை
செம்பொன் னெல்லாந் தேடித்தினங் கொடுப்பதேயருமை
தெண்டிக்க வல்லன்சினம் பொறுப்பதே யருமை
கொண்ட கணவற் கிசைந்த கொம்பனையுமேயருமை

48(அ) நேசமொன்றில் வேசை மனநிற்பதுவுமேயருமை
தேசத்திவ்வை வரையுந் தெய்வப் பிறப்பெனலாம்

அளவிடாமை

பொங்கு கடலாழம் புருடயோகஞ் சூது
மங்கையர் கடன்மனமும் வஸ்துவின்ற நிறனயமும்
வானளவும் மாற்றுமணலு மழைத் துளியும்
வானிலுறு கணமு மண்ணாண்ட ராசரையும்
உற்றபெரி யோர்களுள்ள கருத்தளவுங்
கற்றோர் கருத்துங் காமன் கணைமயலும்
மானிடர்கள் சென்மமனுத் தோகையு மாமனையும்
மானப்பருவதங் களனைத்து மதி நிறையும்

48(ஆ) பார்க்குள் ளேயிந்தப் பதினாறு வல்லபத்தை
யார்க்கு மளவிடவு மாகாது கண்டீரே!
இறந்தார் பிறந்தார்களிவ்வளவா மென்றாலும்
துறந்தார் பெருமைதனைத் தோகையறிந்து சொல்ல
வொண்ணா

ஆயுள் நிதானங் களாறிரண்டிலே கிரகம்
தூய நிதானநிலை சொல்ல யெவராலுமில்லை
சூரியன் முன்னிற் கலாஞ் சுடுமணலினிற்கவொண்ணா
ஆறணியு மீசர் முன்னே யஞ்சாமற் பேசிடிலும்
தேசமதில் முக்கியச் சிவனடியார் முன்பு நின்று
பேசவரிதென்று பெரியோருரைத்திடுவார்

49(அ) வாரியினீ ராழம் வானளவுமா மலையும்
ஆறின் கரைமணலு மாகாசத் தேயுடுவும்
அன்பாமிவை யைந்தினளவு கண்டு சொன்னாலுங்
கொம்பனை யார்நெஞ்சுக் குறிப்பறிய வொண்ணாதே
வெள்ளம் பறவைகளும் விலங்குடனே வேசையர்கள்
உள்ளமிவை நான்கு மொருவழியாய் நில்லாதே

உதவி

வாவியினிரம் பலத்தில் வைத்த மரநிழலும்
தாவுமண லூற்றுந் தண்ணீரின் பந்தலுடன்
பாங்கான சந்தியிலே பழுத்தமரமானதுவுந்
தாங்கும் விபசாரி தனமுநிலவி னொழி

49(ஆ) பார்க்குள் விவேகியர்கள் பாக்கியமிவ் வொன்பதுவும்
ஆர்க்குமுப காரமல்லாது வீணலவே
நல்லோர் தேடும் பொருள்கள் நாவலர்க்கும் வேதியர்க்கும்
வல்லகுருவான வாக்குமாதா பிதா வினர்க்கும்
புத்திரர் கடன்கிளைக்கும் போற்று குலதேவதைக்கும்

உற்ற சகோதரர்க்கு முண்டென்று நம்பினர்க்கும்
தர்மமே செய்பவர்க்குஞ் சார்ந்த வறிருக்கும்
இம்மாத்திரம் போக்குமெய்து மிவர் பொருளே
இல்லந்தனக்குத் தன்னேந் திளையாளே துணையாம்
நல்லதேகந் தனக்கு நற்றுணை வரேதுணையாம்.

50(அ) தேசாந்திரனுக்குச் சீர்துணையாங்கற்ற கல்வி
மாசற்றிக பரதத்தில் வருந்துணைதான் செய்ததர்மம்
வர்த்தகர் பால்வைத்த பொருள் மன்னவர் கடன்பழக்கம்
உற்ற விவேவிகட் குபகாரஞ் செய்ததுவும்
பருவத்திற் பெற்றபிள்ளை பக்குவத்திற் கற்றவித்தை
தருணத்தி லீரைந்துந் தானுதவுந் தப்பாதே
என்னபகை யானலு மிடர்க்குதவி செய்தல்நலம்
பின்னக்கவி சொலினு மேன்மை செய்வரேபெரியோர்.

உதவாமை

நாய்பால் சொரிந்து மென்ன நாணல் மிகப் பூத்து மென்ன
பேய்பொன்னைக் காத்து மென்ன பேடிகையிலாயுத மேன்

50(ஆ) எட்டிபழுத்து மென்னாண்டு தழைத்து மென்ன
பட்டுபணி சித்திரத்திரத்திற் பண்ணியிருந்து மென்ன
சற்குணமில்லாத பெண்தங்க நிறமாகி யென்ன
மிக்கசபைக் கோழைமிகு கல்விகற்று மென்ன,
ஆட்டின் கழுத்தில் அதரமது நீண்டென்ன
காட்டினனில் வெறித்தென் கானலீனீர் கண்டுமென்ன
வேசைக்குப் பொன்கொடுத்தென் வீணருக்குநன்றி
செய்வதேன்

மாசுடையவற் பருக்கு வந்தென் னதிகாரம்
காட்டுக் கரடிமயிர் கருத்த நிறமாகி

நீட்டியிருந்தாலு மென்ன நெடுக்க குறையிலென்ன

51(அ) இத்தகையாய்ச் சொன்ன விஃதெண்ணிரண்டு மீயாத
லுத்தர்கள்தம் வாழ்வுக்கு வொத்திருக் குந்தப்பாதே
தேகியென்போர்கீயாத சிதடர் தமக்குப் பொருள்
ஆகிவந்தாலு மென்ன அழிந்து போனாலுமென்ன
பேடியழகு கண்டு பெண்கள் மகிழுவதும்
நீடுவஞ்சர் சொல்லை நீசமென்றி ருப்பதுவும்
கானல் கண்டேயோடுங்கலை மானுஞ் சாலவுயிர்ப்
பாயிலவு காத்திருந்த பச்சைக் கிளியேதுவும்
தேனருந்தத் தாளைமலர் சென்ற சுரும்பினமும்
தானுயர்ந்ததேன் கண்டு சப்பாணி மேய்ப்பதுவும்

51(ஆ) புல்லர்களின் வாழ்வுகண்டு புகழ்பாடிப் போம்புலவர்
வல்லமைக் கொப்பென்று மனுனூலு ரைத்திடுமாம்
கல்லாம லேட்டினிலே கண்டெழுதி வைத்தவித்தை
உல்லாச வேசையர் களுறவு சதமென்றிருந்ததுவும்
மறுதேசம் போனபிள்ளை, வஞ்சருடனே நேசம்
வருமென்றே யன்னியர்பால் வைத்த பொருள்பலதும்
தன்னைப் பெறாததொரு தந்தை தாயானவரும்
பின்னுமுடன் பிறவாப் பின்னவர்கள் முன்னவர்கள்
பேறாகத்தன் வயிற்றிற் பெற்று வளர்க்காத பிள்ளை
ஊராருடைய செல்வமுள் ளன்பிலாத பெண்டீர்

52(அ) சத்தியமா யீராறுந் தருணா தருணமது
உற்ற சமயத்துக்குத வாது கண்டீரே
ஆற்றிற் கரைத்த புளியனலிலே போட்டவெண்ணை
காற்றிற் பறந்தபஞ்சு காட்டிலெரித்த நிலா
விரிந்த கமரினிலே வீழ்ந்ததொரு வெண்பாலும்
பரிந்துகடற் சுழியிற் பாய்ந்தடைந் தகப்பலுந்தான்

சுட்ட மண்ணானதிலே தெளித்திட்ட பன்னீரும்
இட்டமுடனே விழலுக் கிறைத்ததொரு நன்னீரும்
வீணருக்குச் செய்தநன்றி வேசைக்களித்த பொருள்
காணுமிவை பத்துங்கை கூடாக் காரியமாம்

52(ஆ) சற்பாத்திரமறிந்து தானஞ் செய்யான் தருமம்
உப்புக் கடதிலுமுவர் நிலத்திற் பெய்தமழை
பாம்பின்வாய் தேரை பரதைக்களித்த பொருள்
மேம்பாடு பெற்ற புவிவேந்தரிடஞ் சேர்ந்தபொருள்
தானமாயா வருக்குந்தாரை வார்த்துக் கொடுத்து(ப்)
போனபொருள் நமன்கைப் புகுந்ததொரு மன்னுயிரும்
ஆனைவாயின் கரும்புமணை கடந்துபோன வெள்ளம்
மானிலத்திற் கொள்ளையி படுவாதையிலும் போனமுதல்
வையகத் திவ்வொன்பதுவும் வாராது வந்தாலும்
அய்யோவுலுத் தன்ரைக் காசு மீயானாம்.

53(அ) கவரிமானின் மயிருங் கற்புடையாள் ஸ்தனமும்
அமையாத வேங்கையின்றோலதிசூரன்கை வேலும்
ஆனாலும் லோபிபொருளைந்தும் வரவுயிர்கள்
போனாலேயன்றி யொருபோ அதிலூமே கிட்டாதே
கண்ணுக்கழ கெட்டிக் கனிவழையின் கனியும்
வன்னமுருக்கின் மலரிவை யாலேது பயம்
தாழை மடலேபெரிது சன்னமலர் மகிழாம்
தாழைமலர் வெய்யோன் சாய்கை பட்டால் வாசம்போம்
சன்னமகிழ் மலர் சருகாகக் காய்ந்தாலும்
வின்னமில்லாத் தன்மணமும் விட்டகன்று போகாது

53(ஆ) ஆழியினீர் திகமளனி யுண்ண லாகாது
ஆழியறா கூற்று வருமன்னீரு நன்னீராம்
இங்கி வற்றையொப் பாகயீகை சற்றுமில்லாதார்

அங்கம் பெரிதாயழகா யிருந்து மென்ன
தேசது வில்லாவிடினுஞ் சிறியவுரு வானாலும்
பாசமுறு சற்குணமும் பலர்க்குதவியே பெரிதாம்
வேசையர்கள் நட்பும் விளக்கினது வொளிவும்
மோசமில்லை யிவ்விரண்டு மொன்றாகு மென்றனரே
கைப்பொரு ளற்றால் வேசிடுகளவு நட்புமில்லை
மெய்ப்பாக யெண்ணையற்றால் விளக்கொளிவு சற்றமில்லை

நற்பிறப்புத்தமர்

54(அ) பாவபுண்ணிய மறிவார் பலபொருளு மிச்சியார்
பூவை பலனோக்கார் புராண நெறியுணர்வார்
மாதவங்கள் செய்வாரவன் கெரில கண்டஞ்சுவார்
சூதாடா ராயது துன்பத்துக் குள்ளாகார்.
உய்யவே யிவ்வாறு டையவர்கள் சற்குணராம்
தெய்வதின் தத்துவமாய் செப்பினார் முன்னோர்கள்
மாதாபிதா குருவான வரைத் தெய்வத்தை
மீதாய்(ப்) பணியும் விசுவாச முள்ளவர்கள்
தன்தாரமன்றி மருதார்ந்தனை நோக்கார்
புந்தி மகிழ்ந்த திதிபூசை புரிவோரும்

54(ஆ) சத்திய மொழிபூர்வ தர்ம பரிபாலனர்கள்
சுத்த முறுந்தவவனச் சோலைய துவைத்தவரும்
யார்க்குஞ்ச காயம்தாய்ப் பாட்டைதனைச் சீர்திருத்தி
மார்க்கந் தண்ணீர்பந்தல் மண்டபங்கள் கூவம்வாவி
செய்யும் மகாபுண்ணிய தேகார் முத்தமர்க்கு
எய்யாமலை போலேயாது துன்பம் வந்தாலும்
வெய்யில் தனைக் கண்டுவிலகும் பனியென்போம்
கையிலாச நற்பத மெக்காலு மிவர்க்குண்டாகும்
தாமரையின் மாமலருஞ் சவ்வாது புனுகுடனே

பூமருவு தேனும் புணரியுறு சிப்பிமுத்தும்

55(அ) பொன்னுங், கவரிமயிர், புகழ் கோரோசனையும்,
நன்னயஞ் சேராவின்பால், நற்றூசு பட்டதுவும்,
(நறு) பத்தான்வை களெங்கே பிறந்தாலு
மேதை பெற்றாற்போல் நல்லோரெக்குலத்
தோராயிலென்ன
உப்புங் கற்பூரமது மொன்று போலயிருந்தும்
உப்புக்குங் கற்பூர முயர்ந்த விலையாகுமென்றோ
எல்லோருக்கு மரும மொன்றா யிருந்தாலும்
நல்லோர் தமக்கு நிகராவரோ பாலிகன்தான்
பங்கமுற்ற மூடர்பட படத்துப் பேசுவது
வெங்கலத் தினோ சைவிதமாகுங் கண்டீரே

55(ஆ) நல்ல தங்கக் கலத்தினாதம் போற்சீராக
மெல்ல மிருதுச்சொல் விளம்பு வாருத்தமர்கள்
பன்றியைக் கண்டால் யானைபாதை விலகுதல்போல்
நன்றியற்ற பேதையர் களானோர் வரவுகண்டால்
அந்தவழி விலகியப்பாலே போகுவது
சிந்தை தெளிமேலோர்கள் செய்கையென்று சொல்லதுவாம்
நன்னயஞ் சேர்பொன்னும் நற்பாலுஞ், சந்தனமுங்,
கன்னலதனையு, மென்ன கண்டனைகள் செய்தாலும்
முற்குணமே காட்டுமுறை போற்பெரி யோர்க்குத்
தக்கயிடர் வந்தாலுஞ் சற்குணமும் போகாதே

56(அ) சிவயோகியானவர்க்குச் சென்ம மொருகாலுமில்லை
தவஞ் சோரச வாதிதனக்கனுவும் பஞ்சமில்லை
காலைதுயிலொளிதல் காணாமலே புணர்ச்சி
மாலை முழுகிமனை தனிலே செல்லுவதும்
உற்றாரோ டுண்ணலு ஓம்பலிவ் வாறும்

இத்தலத்தில் வாழ்வோர்க் கியல்யென் றுரைத்தனரே
உற்ற பசுவானதுவு மோர்கன்றையே யீனும்
பத்தான குட்டிகளைப் பயிலும்பெரும் புலிதான்
கோரமது செய்வதற்கு கொம்பிருந்துமே பசுதான்
வீரமில்லாச் சற்குணத்தால் மேன்மை மிகவுண்டாகி

56(ஆ) வங்கிஷமும் விரத்தியாம் கோரத்தால்
பங்கமுறு குட்டியது பத்தீன்றும் விரத்தியில்லை
நன்மை துன்மைரண்டு மிந்தநாட்டினுக்கத் தாட்சியதாம்
உண்மையிது வென்றுரைத் தார்மனு நூலோர்
தெய்வ தரிசனங்கள் தெய்வ விசுவாசம்
பொய்யாத் தானதவம் புத்திரர்கினை யோடுணவு
பெரியோர்கள் சேர்வைகுலப் பெண்ணாளனு போகம்
குறையாத செல்வமுநோய் கொள்ளாத தேகவிருத்தி
தன்மையுட னீன்றதாய் தந்தை செய்தவமு
முன்னோர்செய்த புண்ணியத்தின் முக்கியமென்றே
யுரைத்தார்

57(அ) வித்துவான் களானவரு, மெஞ்ஞானமுற்ற வரும்,
வெற்றிப்புலி நகமு, மேன்மையுள்ள பூனைமதம்,
காரானை தந்தங், கவரிமான்றன் மயிருஞ்
சீரான வாறுமெங்கே சென்றாலு மேன்மையுண்டாம்
நாயானது சினந்து நமைக்கடித்தால் நம்முடைய
வாயாலதைக் கடிப்பவரு முண்டோ வையகத்தில்
அறிவில் லாமுடர னேகமாய் வைதாலும்
பெரியோர்கள் வாய்திறந்து பேசாரொ ருக்காலும்
நற்குணத் தினாலேதர்ம மதுவந் தெய்தும்
துக்கம் வராதவர்கள் துடங்கினதுங் கைவசமாம்

57(ஆ) தாரித்திரமு மில்லை தக்கோர் பயமுமில்லை
பாரிற்புகழ் விளங்கும் பரகதியு முண்டாகும்

துற்பிறவித்துற்சனர்

எண்ணாமல் யாதொன்று மீயாற்கு மிடர்செய்வார்
எண்ணார் கொலைகளவு யிறைச்சி முதலானதுண்பார்
பொய்யுரைக்க வஞ்சார் போசனமுஞ் சாலவுண்பார்
மெய்யிற் சுசியில்லாரி ராட்சஸ கணமாகும்.
அஞ்சார் தனிவழிக்கு யாவரையுமே மருட்டி
வஞ்சனையில் வெல்வார் வலியாரை யானாலும்
ராப்பகலு மாறாமல் நாரியர் தமைப்புணர்வார்
சாப்பாட் டொழுக்கமுடன் தம்முடம்பு சுத்தியில்லர்

58(அ) மாதலத்தி லிந்தவன் னெஞ்சுடை யவர்தான்
பூதகணம் பேய்க்கும் புறம்பாகு மென்றனரே
கொம்புளதுக் கைந்துமுழங் குதிரைக்குப் பத்துமுழம்,
அன்பான யானைக் கோராயிர முழத்தின்ப்பால்
வண்டி கண்டாலைந்து முழமப்பாலாந் துற்சனரைக்
கண்டவுடன் காதவழிக்கப் பாலேயோட(ல்) நலம்,
பாம்பு முதலானதற்குப் பல்லதனிலே விஷமாம்,
வீம்பான தேளதற்கு விஷமதுவும் வாலினிலே,
துற்சனரான வர்க்குத் தேகமெல்லாம் விஷங்கள்
(மிக்கு)மென்று சொல்லி விதித்தார்மனு நூலோர்

58(ஆ) வேம்பிற் கசப்பும் மேலாம ருக்கொழுந்திற்
சேர்ந்துள மணமிரண்டுந் தோன்றும்போ துண்டாண்
வாறுபோற் துற்குணமும் வாய்ந்தபுகழ் சற்குணமும்
மீளாப் பிறப்பிலன்றியிடையி லொன்றும் வாராது!
நாய்க்கு நல்லபோசனமு நற்பணியுந்தான் பூட்டி
ஏற்கவே தண்டிகையி லேற்றிவைத்துப் போனாலும்
கண்ணில் மறுநாயைக் கண்டவுடனே குலைக்கும்!
வண்ணம்போல் துற்சனர்க்கு வாராது நற்குணந்தான்

எல்லோருந் தூஷணிக்க யென்னாளுங் கோளுரைப்போன்
பொல்லாத காற்றிற் பிடித்தெரியு மக்கினியாம்!

59(அ) பொல்லாரைக் காண்பதுவும் பொல்லார் சொற்கேட்பதுவும்
பொல்லார் குணமுரைத்த போதிலே தீதாகும்
தர்மந்தனை நினையார் தக்க பழிக்கஞ்சாத
கர்மியவர் வாழ்வு வெகுகால நிற்கமாட்டாது
தலங்கள்தனைத் துதியார் தர்மகதை கேளார்
துலங்குந் தியாடார் சுவடி வாசித்தறியார்
வாசமிகு கீர்த்தியுள்ள மானிட சென்மங்களிலே
நீசப்பிறப் பிவரைநேத் திரத்திற்பார்க்க வெண்ணா

நிறை

தங்கமுருக் கிடினுந் தன்னொளிவு மங்காது!
சங்கந்தனைச் சுட்டாலுந் தன்னிறமும் போகாது!

59(ஆ) சந்தனத்தை யுரைத்து சலத்திற் கரைத்திடினும்,
விந்தையுறு மணமும், விட்டகன்று போகாது!
சாணையிலே மாணிக்கந் (தகர்)ந்து மிகத் தேய்ந்தாலும்,
காணுமொளிவு, மொருக் காலுமது மங்காது!
பால்முறியக் காய்ந்தாலும், பண்பு சுவைமங்காது!
ஞாலமிசை யிவ்வாறு நல்லோர் பெரியோர்க்கும்
ஆதாரமின்றி யென்ன வாபத்து வந்தாலும்,
நீதிவழு வார்கள்! நிறையுந் தவறாரே!
ஊரார் பொருள்மே லொருபோது மாசைவையார்
பூராய் மான புருஷோத்த மனிகராம்

60(அ) தன்னுடைய செய்கையைப்போல் தானெவரையும் பார்ப்பார்
சின்னமொன்றுஞ் சொல்லாதார் தெய்வ புருஷரென்பார்

ஈகை

சார்ந்தவரைக் காப்பவர்கள் தான் புருஷமேருவாம்
எய்ந்த மனமறிந்து யீவோர் புருஷர்தனம்
வாராவறுமை மிகவந் தாலும்மற் பர்களைப்
பாராரே சோரர் பண்பாம் புருஷசிங்கம்
தாய் தந்தையானாலுஞ் சமன்செய்த கோலதுபோல்
ஞாயமுரைப்போர் புருஷநாயக மென்றே யுரைப்பார்
ஆறுவற்றி லூற்றூறும் அண்டம் விளக்கிவருஞ்
சூரியனைராகு வந்து சூழ்ந் திடினும் வெய்யிலுண்டாம்

60(ஆ) நல்லமதி தேய்ந்தாலும் நல்வெளிச் சங்கொஞ்ச முண்டு
கொல்லை பாழானாலுங் குருவிக்கிரையு முண்டு
இவ்வகைபோலி வோருக்கே திடர்கள் வந்தாலும்
எவ்வளவுமீவ தல்லாலில் லையென்று சொல்லாராம்
எடுக்கெடுக்க வூறுமிசைந்த மணற் கேணியைப்போல்
கொடுக்க கொடுக்க வல்லோகூடும் பெருஞ்செல்வம்
வந்தவிருந்துக் களித்துவரும் விருந்து பார்த்திருக்கும்
சிந்தையுடை யோர்கள் தேவரிலு மேயதிகம்
தாரித் தாற்றய வில்லார் தம்மிடத்தில்
கூறினா லேதுங்கொடுக் காரிகழ்ச்சி செய்வார்

61(அ) நீயுமுதரானைத் தானெப் பேதும் வேணுமென்று
வாய்திறக்க வேண்டாமன தறிந்தே யீவானாம்

ஈகைக்கிடையூறு

தேனிடத்திலீயு முண்டு சலத்தில் முதலையுண்டு
மானிலத்தின் வீடுகளிலண்ட விடா நாய்களுண்டு
சந்தன விருட் சத்தினடியிலே சர்ப்பமுண்டு
கெந்தமுள் தாழம் பூகிள்ளவென்றால் முள்ளுமுண்டு

கொடுக்குந் தியாகிகள்பால் கொடாமலிடையூறு சொல்லி
தடுக்குங் குலாமரங்கே தானு முண்டு கண்டீரே.
குற்றமுரைத்துக் கொடுப்போர் தமைக் கெடுப்போர்
சுற்றமழிந்து விடுஞ் சோறு நஞ்சாகிவிடும்

சிநேகம்

61(ஆ) மதியிலுறு முயலும் மதிவளர்ந்தால் வளரும்
சதிராகத் தேயுநாள் தானுமது தேய்ந்திடுமாம்
வாவிதனிற் கொட்டிகளு மன்னீர் போற்றாழ்ந்துயறாம்
மாவிதஞ் சேர்புற்பூடும் வளருமதிலே மடியும்
சேரும் பெரியோர் சினேக மிவ்வாறாகு மென்று
கூறுமனு நீதிக்கொள் கையிதுவே யாகும்

சரீர சுகம்

ஏற்றபுதன் சனியிலெண் ணையிட்டே முழுகி,
காற்றுப் பனிவெய்யில் காயார்கள், மெய்வருத்தார்,
ஓயாவழி நடக்கா, ருண்டுபலகால் விரும்பார்,
காயாவது கிழங்குகனியு மிகுந்துண் ணார்கள்,

62(அ) தன்வயதின் மேலான தையலுடனே சேரார்,
உண்மைப் பசியின்றியுணவு சற்று முண்ணார்கள்,
மலநீரடக்கார்கள், மடப்பனியிலே யிருக்கார்,
நலமாய்(ப்) பழங்கறியை நாடார் பலநாளும்
காய்ச்சுப் பால்நெய் மோரேக்கால முந்தான் சேர்ப்பார்கள்,
ஒச்சில்லா வழுக்கை யீளநீர் மிகுந்துண்பார்,
ஆறு திங்கட்கொரு விசைதானான விரோசனமும்,
நாரியரை மாதமொன்றிற் திரண்டு விசைபுலகுவதும்,
உண்ட பின்புலாவி,யுதக மருந்துவதும்,
ரெண்டு பத்துரெண்டு மிந்தநெறியுள்ளார் தமக்கு

62(ஆ) ஏற்குமுடல் தனிலே யெப்பிணியும் வாராது
தீர்க்காயு சுண்டாகும் க்ஷேமமென்று செப்பினரே
மாறுபா டில்லாது வயிரறிந் துண்பவர்க்கு
நூறுவரை யுடலினோ யணுக மாட்டாதே

நோயணுகல்

கல்லால் மயிராலுங் கடுக நடையாலும்
நெல்லாலு மீயாலு நித்திரையில்லாதாலும்
ஒழியா விசாரத்தாலுண்ட பின்பு மூழ்கையினால்
கழியுமல சலங்கள் கக்கிஷமாய் வீழ்கையினால்
பின்னும டக்குவதால் பெருத்த சுமைசுமத்தல்
மின்னாருடன் புணர்ச்சி மிகவும் விரும்புதலால்

63(அ) மெய்யயரும் வேலையினால் வேர்வை பனிக்காற்றினால்
வெய்யவிள வெய்யில் விரும் பலகனியுண(ர்)வு
ஏர்க்குங் கிழங்கு சருகிலை விரும்பியுண்ணுவதால்
பார்க்குள் வியாதிவரும் பாதையிது வென்றுரைப்பார்
காலையிள வெய்யிற் காய்வோர் பிணமதனின்
மேலேவரும் புகைதன் மேலே படுபவர்கள்
தன்வயதுக்கே மூத்ததைய் யலதனைப் புணர்வோம்
தன்மை யுடனிரவில் தயிர்வார்த்தே யுண்பவர்கள்
நால்வரிடந் தனிலே லட்சமியு நில்லாளாம்
மேலுமவ ராயுள விழலாகப் போகுமென்றார்

இறந்தும் இறவாதவர்

63(ஆ) பார்க்குள் விளங்கப் பலதர்மஞ் செய்தவர்கள்
மார்க்கமிகு கற்புடைய மாதைமணஞ் செய்தவர்கள்
தேவாலய முதலாய் திருமடங்கள் கட்டினவர்
பூவானது விளங்கப் புனலாறுண்டாக்கினவர்

மறையோரிருக்க மனை கட்டி வைத்தவர்கள்
தரையாண்ட நீதிமன்னர் சற்புத்திரரை பயின்றோர்
காவியஞ் செய்கவிஞர் கவிமாலை சூட்டினவர்
பூவுலகிலோயாமலப் பொருள் கொடுத்த மாந்தர்களும்
சீரான கோபுரங்கள் செய்து முடித்தவர்கள்
சூராதி சூரர் துலங்குபதின் மூவர்களும்.

இறந்துமிறந்தவர்

64(அ) வாகாயிறந் தாலும்வைய கத்திலூழி மட்டுஞ்
சாகாதபேர் சொர்கத்தில் மீதுறை பவராம்
நெடுநாள் மருகள் மனைநீங்கா திருந்தவரும்
அடைவாய் மருமகன்றானம் மான் மனைதனிலே
சதமாயிருப்ப வந்த மிழறியர் மூடருமே
இதமாய்(க்) கவிபாடி யிரக்கப்போம் வாணர்களும்
பொய்பேசிக் கடன்வாங்கிப் பிழைத்துத் திரிபவரும்
செய்ய பகைஞரிடஞ் சேவகஞ் செய்பவரும்
மாறாவறுமை யுற்றோர் வல்லமருந்து செய்துந்
தீராப் பிணியாளர் சிவிகை சுமந்தே பிழைப்போர்

64(ஆ) மனைவிதனை வழங்கி வயிறு வளர்ப்பவரும்
நினைவு தடுமாறி சற்றும்நீங்காக் கவலை யுற்றோர்
சொற்சோர்வு பட்டோருஞ் சொந்தமில்லா பொருட்கு
மிச்சமாய்(ப்) பொய்பேசிவீண் வழக்குச் செய்பவரும்
மனைவிதனக் கஞ்சிவந்த விருந் தொளிப்போர்
முனையான ராசசபை மூடராய்ப் போனவரும்
ஈரேழு பேரு மெண்சாணுடல் படைத்தும்
சீர்கெட்டு யிரோடே செத்த பிணமாமிவர்கள்
சம்பத்துடன் பணியில்தான் மெலிந்து வாழ்வதிலும்
துன்ப மற்றேயைய மெடுத்துண்ணல் மிகவுநன்றாம்.

65(அ) ஆனதிரு மாலகன்று வறுமை வந்தால்
ஞானபோங் கல்வியும் போம்நாடும் பழித்திடுமாம்
தாய்பழுது சொல்வாள் சபையேற வெட்கமுமாம்
தூயமனை யாளுந் துரும்பாய் மதித்திடுவாள்
மெய்சொன்னாற் பொய்யாகும் விசாரமுறும் வீரம்போம்
உய்ய விருந்து வரிலுயிரோடே செத்த பிணம்
மேன்மையறிவு குலம் வித்தை நலமற்றுளதும்
போமேயிதற் கிறந்து போவதுவே மெத்தநலம்
சேனைமருந்து செய்துந் தீராத வியாதியுற்றால்
மானிலத் திற்றானாக மாளுவதே யுத்தமமாம்.

பொருளின் பலன்

65(ஆ) பொருள் தேடத்துக்க மதைப்போற்றி வைக்கத்துக்கமதே
பொருளை செலவழிக் கப்போம்போதுந் துக்கமுமாம்
காகத்தின் கூட்டில் கருங்கூயில்கள் முட்டையிட
மோகமுடன் காகமுந்தன் முட்டையென்றே யெண்ணுதல் போல்
ஈக்கள் தேன்கூட்டி யெடுப்பாருடன் கொடுத்து
போயலைகின்ற தொரு புத்தியீனம் போலும்
சோரத்திற் பெற்றபிள்ளை சொந்த மென்று முத்தாடி
பேரிட்டளைகின்ற பேடிதனைப் போலும்
மயலாகத் தேடியே மண்ணிற் புதைத்தபொருள்
அயலார் பொருளுமல்லவ்வன் பொருளுமல்ல வென்பார்

66(அ) உற்ற பொருள் தேடமன முற்றாலுலகமுமே
நற்றாத ஞானிக்கி நாடெல்லாந் தன்னடிமை
பொன்னறியா மூடரிடம் பொருளதுவுஞ் சேர்ந்தாக்கால்
மன்னு குரங்குகைப் பூமாலை போலக் கொண்டலைவார்
தேடுகின்ற வல்லவர்க்குச் செம்பொனோறாம் சகம்

கூடும்பொருள் பவர்க்குக் கொடுத்தாலு மோர்மசகம்
பொன்னாசை யுள்ளவர்க்கு போசனத்தி லிச்சையில்லை
அன்னை சுற்றந்தாம் மானதிலு மிச்சையில்லை
வெட்கமில்லைப் போகலாம் வேளையின்ன தொன்றுமில்லை
இக்குண முள்ளோர் பேய்கிணையாகு மென்றனரே.

பொருள் வகை

66(ஆ) மெத்தவுந் தானேகுவித்து வீட்டில்வைத்த நெல்லதனை
நித்தமெடுக் கிலந்தநெல் லுமற்றுப் போவதுபோல்
ஏல நமக்கு மெழுத்திளை வர்க்கும்
ஞாலமிசை யிரவி நாளிகைபோல் நாளாகி
மாச வருடமென்று மாதத்து கையாகி
மோசமாய்க் கொல்லு முறைமை யறியாமல்
இன்ன நெடுநாளிருப் போமிதுவே சதமென்று
பொன்னை மிகத்தேடிப் புதைத்துவைக்கு மாந்தர்களை
சீதேவி பூதேவி சிரிப்பரிவன் றேனீயாம்
மூதேவி சென்மமென்று மொழிந்தார் மனுநூலோர்

67(அ) மிக்கதர்மம் பொருளா மின்பமென்ற மூன்றினிலே
நற்குணத்தார் தேடுபொருள் நல்லறமு மின்பமுறும்
வஞ்சனையாய் தேடுபொருள் வர்த்தனை யுமாகாது
மிஞ்ச பழிபகையா மென்பதனை யுண்டாக்கும்
கூத்துப் பார்க்கவந்து கூடுஞ்சனம் போலும்
ஆற்றுக்கால் நீர்போலை ஸ்வரியங் கூடிவரும்
கூற்று முகிந்தவுடன் கூடுஞ் சனங்கிலைந்த
மாற்றம் போல்போய் விடுமாமைஸ்வரிய முள்ளதெல்லாம்
புண்ணிய மெந்நாளும் புகழாக நிற்குமல்லால்
மண்ணினி லேன்றைக்கும் வாழ்வு நிற்கமாட்டாது

நல்லறிவுகயவர்

67(ஆ) தன்னைப் புகழ்வோருந், தாய்தந்தை யைப்பேணார்,
அன்னை சுற்றம் விலக்கியலார்க் குதவுபவர்,
மேலோர் சொற்கேளாதோர், வேசைசத மென்றிருப்போர்,
பூலோகத் தொப்பனையைப் பொய்யென் றுரைப்பவரும்,
கண்டா லுறவாடிக் காணாவிடஞ் சலிப்போர்
கொண்ட பெண்டாள் செய்யுங்குறையை வெளி
சொல்பவரும்
பொய்சாட்சி சொல்வோர், போற்றிவைத்துப் பிச்சை
கொள்வோர்
தையல்சொல் கேட்பவரும், சபையிற் பயனில்லர்
வார்த்தை யுரைப்பவரு மற்றுமிந்தப் பன்னிருவர்
பார்த்ததால் மனுஷப் பதராம் பசாசிவிரே!

68(அ) அக்கினியைக் கட்டலாம கலாநோய் தீர்த்திடலாம்
மிக்கதொரு துஷ்ட மிருக மிணக்கிடலாம்.
வல்லவிஷந் தீர்க்கலா மாண்டோர்க் குயிர்தரலாம்
வெல்லரிய பேய்களையும் விரட்டியே யோட்டிடலாம்.
பறவைமிருகம் பேசப்படிக்கவுமே செய்திடலாம்
வரப்போகவுஞ் செய்வர் மறலியிட தூதரையும்
மணலைக் கயிருக்கி வைக்கலாங் கயவர்களின்
குணமதனைத் திருப்பக் கூடாது கண்டீரே

புல்லறிவு கயவர்

வெல்லமிகக் குவித்து வேம்பின்விதை யைப்பதித்து
நல்லதொரு பாலூற்றி நாளும் வளர்த்தாலும்

68(ஆ) சாதிகுணங் காட்டுந் தகமைபோற் புல்லருக்கு
ஏதுரைத்துஞ் சற்குணங்க ளெள்ளவும் வாரதே
செல்வமது வந்தவுடன் தெய்வந்தனை நினையார்

சொல்வரம் புசற்றுமில்லை சுற்றந்தனை நோக்கார்
தாமந்தனை நினையார் தக்கபழிக்கஞ் சார்கள்
காமியிவர் வாழ்வு வெகுகால நிற்கமாட்டாதே
உண்டென்று நாளு மூலக முரைப்பதனை
திண்டுமிண்டா யில்லையென்று செப்புமிவர் பேயெனலாம்
தோலெலும்பு தின்னு நாய்சோறு நெய்யுமுண்டாக்கால்
சீலமுடன் வயிற்றிற் செரியாத வாறதுபோல்

69(அ) சண்டாள ரானவர்க்குத் தரும நூலதனை
விண்டவர் செவியில் வீழாதொரு நாளும்
புலிக் கஞ்சிவோர் வேடன்போய் மரத்தில்யேற
வலுக்குரங்கு கண்டு வந்தவனை யாதரிக்க
அன்றுபுலி போனவுடன் குரங்கை யவ்வேடன்
கொன்று தின்ற வாருங் குலாமருக்குச் செய்த நன்றி
துர்ச்சனர்க்குச் செல்வம் வந்தால் துன்பம் பழிபாவம்
அச்சமற்றுச் சற்றேயணுவும் நினையாராம்
குரங்கினது வாலில்தேள் கொட்ட வொரு கொள்ளிதனைக்
கரங்கொடுக்க பூரனித்த கதையாகு மென்றனேரே

69(ஆ) வெந்தழலில் தேளெடுத்து விட்டவனைக் கொட்டுதல்போல்
நந்தாதுற் சனர்க்கு நன்மைசெய்தாற் றீமைசெய்வார்
நாய்தனக்குப் பொற்கலத்தில் நற்பாலின் சோறிடினும்
நாய்பிறர் களெச்சில தனைநக்கா திருக்காதாம்
புல்லறிவா ளருக்குப் புத்திமிகச் சொன்னாலும்
சல்லிய வருடையசாதி குணத்தை விடார்
காலின் செருப்பதனை கனகமதாற் செய்தாலும்
காலுக் கேயன்றியது கழுத்திற்கு மாகாது
கீழ்மக்களே மிகவுங் கோபித் திருந்தாலும்
மேன்மக்க ளாகார்கள் விள்ளுவதிலே தெரியும்

70(அ) நாடிவெகுவாய் படித்தும் நல்லறிவில்லா விட்டால்
மூடரிலு மூடரென்று முன்னோ ருரைத்தனராம்
ஏதுமறியா தாரின் பவறி வுள்ளானால்
ஓதும் பெரியோருக் கொப்பென் றுரைத்தனரே
கல்வியறி யார்களா் நிலத்துக் கொப்பவர்க்கு
செல்வமது வந்தால் தீங்குசெய்வார் யாவருக்கும்
தேர்கோ புரத்தினிலே செய்த பதுமையவர்
பாரில வர்தமையும் பட்டமர மாகுமென்பார்
யார்க்கு முபகாரங் களியாதுமிகச் செய்துபின்னே
ஏற்கபதிற் செய்யவில்லை யென்று நினைத்தாக்கால்

வரம்பிலாமை

70(ஆ) வட்டிக்கடன் கொடுத்து வாங்கும் வகையெனலாம்
கட்டாகச் செய்தவுபகார மெல்லாம் வீணாகும்
வேசைக் குறவில்லை வேந்தர்க் குற்றாருமில்லை
ஆசைக்கு வெட்கமிலை யன்பில்லை மூர்க்கருக்கு
பணமதுவு மில்லார்க்குப் பரத்தையர்மே லாசையில்லை
குணமில்லா தார்க்கின்பங் கொஞ்சமது மில்லையில்லை
ஞானிக்குசுக முமில்லை நாட்டிலோர் சாதியில்லை
ஈனமிலேச் சர்களுக் கெப்போது நிரையுமில்லை
காமிக் கொருவரம்பு கருது முறையுமில்லை
மாமிக்க யோகிக்கு வஞ்ச வினையரில்லை.

புல்லறிவு

71(அ) சித்தசுத்த பூசைக்கித்தானு மங்க சுத்தியில்லை
வித்தை புகழ்வாணருக்கு வேற்றுமைக ளாருமில்லை
கள்ளருக் குற்றாருமில்லை கபடருக்கு ஞானமில்லை
எள்ளளவு பயங்களேது சுத்த வீரனுக்கு
பொய்யருக்குச் சாட்சியில்லைப் புலையருக் கிரக்கமில்லை

ஐயோ விரோதிக்கி யானதொரு நேயரில்லை
தான்பிடித்ததே பிடியாய் சாதிப்பவன் குரங்கு
ஆனசபையிற் குறிப்புயறியர் தான் பட்டமாம்.
எளியோ ருடனெதிர்ப் போனேற்ற கடினாயாம்
பழிபாவத்துக்கு கஞ்சான் பசாசாகு மென்றிடலாம்

71(ஆ) வந்தோர் முகம்பாரான் வனத்தி லுறுங்கரடி
பந்தமுறு சபையில்ப் படுப்போன் கிடாமாடு
அடுத்தோர்க் கிடர்விளைக்கு மவனே கொடுந்தேனாம்
பிடித்தபிடியை விடாப் புல்லன் வீனுசாரை
சற்றேனுங் கல்விகற்றுச் சபையிற் படித்தறியான்
புத்தரம் விழுந்துபட்டுப் போன தொருகாட்டுமரம்
தன்புத்தியன்றி பிறர் சாற்று புத்திகேளாதான்
வன்புற்ற வானரமாம் வாய்பேசாவூமை யென்பார்
அம்புவியை யாளுமரசர் பகையைப் பெற்றோர்
கொம்பிழந்த மந்திக் கையுற வானபட்சி

பண்டிதன் பரீட்சை

72(அ) கொட்டுத்தேன் போலத்தீரர்க் கோபமுடை யவன்றான்
குட்டியிட்ட நாய்கரடி கொடியவன் மிருகம்
மருங்காய்ப் பெரியோரை வந்தனைகள் செய்யாதான்
கருங்கல்லி லேயடித்துக் கைகால் குனித்தசிலை
முக்கியஞ் செய்நூலின் முறையு நிறையறிந்து
பக்குவமில்லா நாடிப் பரீட்சை தனையறிந்து
தேடியழைத்த பின்போய் தேகங் குணங்காலாம்
பாடுகின்ற நாடியெட்டுப் பரீட்சைகளுந் தானறிந்து
சிந்தாத வாதபித்தச் சிலேற்பனத்தின் கூரறிந்து
வந்தபிணியும் வலுவுமிகத் தெரிந்து.

72(ஆ) கற்கங்கியாளங்கள் கன குளிகை பற்பமுடன்
தக்கதொரு செந்தூரந்தயிலமுடன் சூரணமும்

இவ்வகையாய் லேகியமுமித மறிந்துதான் கொடுத்து
அவ்வகையில் பத்திய மெத்தாகவே வையாமல்
எளிதான பத்தியத்திலே பிணியு நீக்கிவித்து
தெளிவான ஆரோக்கியஸ் நானமிகச் செய்வித்து
தந்தகே போதுமென்று தான்மகிழும் பண்டிதனை(ச்)
சந்ததம் சேர்தேவர் பதிதன் மந்திரியெனலாம்
மிக்க பிணிவந்தால் வேண்பொருள் தாரேனென்று
மிக்குல தெய்வம்போல் மென்மை மிகச்செய்வார்கள்

73(அ) உற்றபிணி தீருமென்று வுறுதிசொன்னாலே குருவாம்
சற்றே மருந்து செய்யில் தந்தையென்று சொல்வார்கள்
பாதிலகு வானாற் பண்பிலத்த மையனாம்
பாதியுந் தீர்த்து விட்டால் பரிகாசமைத் துன்னாம்
ஓது பொருளானாலு மீவதுமுன் னோயனாம்
காதலுடன் மற்றானாள் கடனாளி யாவானே
அப்பால் பகையாளி யாவார்கள் பண்டிதர்கள்
இப்படிச் செயலோ பரிருப் பாருலகினிலே
தீராத நோயருமை செப்பாத பொய்யரிடம்
வேரான பண்டிதரை மேல்மருந்து கேட்பவர்பால்

73(ஆ) மூர்க்காடத்தினிலு மொய்குழலாள் பிரியா
நோக்கு மவரிடத்தில் லோபியர்கள் தம்மிடத்தில்
கத்தது ரோகியர்கள் கண்டதெல்ல புண்போர்கள்
பத்தியத்தைத் தாழ்வுசெய்யும் பண்பிலா மாந்தருந்தான்
மட்டிலாப் பொன்னையள்ளி மாரியென யீந்தாலும்
எட்டியடிவைப் பதியல் பில்லை பண்டிதருககே
வெண்ணீருடன் துளசி வில்வம் மருச்சுகந்தம்
பண்ணும் புதுப்பாண்டம் பழுவர்க்கங் காயிலைகள்
செந்நெல் தவசமுடன் செம்பிரும்பு வெண்களங்கள்
பொன்னுடன் வெள்ளி முதல்பூணும் நவமணிகள்

74(அ) கோதில்லா வெண்பட்டு கோடிதுகில் பலவும்
பாதரட்சையாவதுடன் பத்தொன்ப திவ்வகைகள்
கீழோர் பாலுற்றிடினுங் கீழோர் பாலீந்தாலும்
தாழ்வில்லா மானிடர்கள் தானிதனை யேற்றிடலாம்
ஆசைமிஞ்சு மின்னார் தரபானத் திற்கும்,
பேசறியா பாலகர்கள் பேய்ந்தசிறு நீரதற்கும்,
வேட்டையிலே நாய்கடித்து விட்டிட்ட மாமிசமும்,
தேட்டமுடன் பட்சிகள் தான்றின்ற பழங்களுக்கும்,
இந்தவகை நாலுக்கு மெச்சிலில்லை யென்றுசொல்லி
முந்தமனு நூலின் முறையிலு ரைத்தனரே.

ஆகாமை

74(ஆ) எத்தொழிலும் யெக்குலமும் யிழிவுண் டேயல்லாது
சுத்தமது வென்றெவருஞ் சொல்லுதற்கு நாவுளதோ?
மன்னர் பகையு, மாதவத்தோர் தன்பகையும்,
வின்னக் கொலைஞர், விகடப்பிர சங்கிபகை,
ஊரார் பகையு, முற்றாருடன் பகையும்,
வீறான மந்திரிபகை, மிகுத்த பணக்காரர் பகை,
வல்லகணக்கர், கவிவாணர், குருபகையும்,
வல்லமைசேர் பண்டிதர்கள், மந்திரி வார்பகை,
பெற்றபிள்ளை பெண்சாதி, பின்னவர்கள், முன்னவர்கள்,
உற்ற பதினேழிலொரு பகையு மாகாதே!

75(அ) ஆறடுத்த வூரதுவு மரசரிடஞ் சேவகமும்,
நீரில் விளையாட்டும், நீர்மிகுத்த பேராறும்,
தாசியுறவு, பிறர் தாரமின்னார் நேசமதும்,
நேசமில்லாத் தாயாதி நேச மாகாதுற் சனர்கள்,
தன்னோ டிணங்குவதுஞ், சத்திராதி நட்பதுவும்,
பன்னகத்தை யாட்டுவதும், பகடுநடத்வதும்,

மெய்விளங்கும் போதினிலே மின்னாருடன் புணர்ச்சி,
மையிருனிலே தனித்து வழிபோகும் வல்லமையும்,
நஞ்சுடனே தீமருந்தில் நாளும் பழகுவதும்,
அஞ்சாம லெப்போது மலகைகளை யோட்டுவதும்,

75(ஆ) ஆர்க்குங் கடலோட மதிலே தான்சஞ்சரித்தல்,
பார்க்குள் மதுவுண்ணல், பலநாள் களவு செய்தல்,
இத்தகையாய்(ச்) சொன்ன திருபதையுமே மனதில்
லுற்றாரிடரு முயிர்க் குலயமாமதுவே!
ஈருர் பயிரிடுவோரில்லா ளிரண்டுடை யோர்
ஊரூர்போம் பாதைமந் தையோர்ம் பயிரிடுவோர்
பிணைபட்டுப் பொய் சாட்சிபேசுமிவர் நால்வர்களும்
சுணைகெட்ட பேரிவர்கள் துன்பத்துக் குள்ளாவார்
சிற்றூர் குடியிருப்போர் சீர்கெட்ட பெண்டுடையோர்
பெற்ற பிள்ளையிற்றிரளாய்ப் பெண்ணாகப் பெற்றவரும்

76(அ) அற்பனைச் சேவிப்பவரு மலக்கழிந்து போவதல்லால்
சொற்பச்சில நாளில் தொந்தரைக் குள்ளாவார்கள்
அத்திக்காய் கோவைக்காயை விரவிதேற்றான் காய்
சுத்தவெள்ளைத் கத்திரிக்காய் சோற்றுக் காந்தலிவைகள்
தின்பார்க் கொருனாளாந் தேவபத்தியில்லை யென்று
முன்பாக நூலோர் மொழிந்தார் மனுநூலில்
துறந்தேரிடங் காதார் துன்னுபிணை யோர்களையும்
புறம்பேசும் வஞ்சகர்கள் பின்னவர்கள் பெண்டுகளும்
கல்லாதவன் னெஞ்சில்காணு மிவரெண் மரையும்
நல்லசபையி லொருநாளும் வைத்துப்பேச வொண்ணா

76(ஆ) ஆசனங்கள்தான் போட்டு வாயுசதுவிர்த் தியில்லை
போசன முந்தான் சமைத்தால் போமெயைஸ்வரியம்
தனக்கெண் ணைய்தான தேயத்தாற சந்ததிகட்காகாது

அனர்த்தமிது மூன்றென்ற ருளினார் முன்னோர்கள்
யோகியொரு போதே யுண்பா னிருபோது
போகியுண்பான் மூன்று போதுண்பான் வியாதியால்தன்
உடனோரு நான்கு போதுண்ணும வன்றனக்கு
இடையூறுண் டாகுமென் றியம்பினார் முன்னோர்கள்
வீரத்தி லொப்பிலா விக்கிரமனே யானாலும்
வீரியமும் வல்லமையும் விளம்பிடவு மாகாது

77(அ) வேந்தர், குரு, பொய்யர், மேன்மையுள்ளோர் கோபிகட்கும்
வாய்ந்த கடன்கொடுத்து வாங்குவது நீதியல்ல
நாட்டுக் காகாதவரை, நமக்கடங்காப் பெண்டீரை,
மீட்டு மந்தராசனுக்கு மேலான மந்திரியை,
துற்சனர்சினேதமதைத், தொட்டாலசையும் பல்லை,
இச்சணமே ஐந்துமெடுத்து விடவேணு மென்பார்
கடன்பட்டுத் தீர்ந்த தோர்கைச் சீட்டிலேசேஷசம்,
விடந்தீண்டி மீண்டதிலேயெவ்வளவு மேவேஷம்,
அக்கினியில் வெந்த அகந்தனிலே சேஷம்,
மிக்கான சத்துருவை வெல்லுவதிலே சேஷம்,

பலனில்லாமை

77(ஆ) தெய்வ பிரார்த்தனைகள் செய்தும்திற் சேஷம்,
உய்யபிணி மருந்துண்ட திலேபின் சேஷம்
காணிப்போய் மீண்டதிலே கடுகளவு சேஷமுடன்
ஆணியாம் பத்து மணுவும் வைக்கலாகாதே!
சந்திரனில்லா வானஞ், சற்சனரில் லாதவூர்,
மந்திரியல்லா வாசல், மதகரியில்லா வெம்போர்,
மக்களில்லாச் செல்வ, மதுரமில்லாத கவி,
தக்க தளபதிகள் தானில்லா வெஞ்சேனை,
பெண்ணாரில் லாதமனை, பிறவியில் லாதவுடல்,

விண்ணானப் பாடல், வினையமில்லா வேசி,

78(அ) கோப்பில்லாக் கூத்துடனே கொங்கையில்லா பெண்ணழகும்
தாப்பில்லாச் சீவனங்கள், தந்திகளில்லா வீனை,
பத்தியில்லாப் பூசைப், பார்த்திபரில்லாத புரம்,
சத்தியமில்லாத வாய், தானறியா வாணிபங்கள்,
சந்தமில்லான் பாடலு தாரணஞ் சொல்லாதகவி,
நந்தாப்புனல் சேர்ந்தவள் மில்லர் நாடு,
தேசிகரில்லாத வித்தை, தியானமதில்லா தீட்சை,
பேசரிய நல்லறிஞர் பெரியோரில்லாத சபை,
குடிநலமில்லா நாடு, குணமில்லாப் பெண்ணாசை,
வடிவுற்று வாசமில்லா வானமிகு மலரும்,

78(ஆ) சேகரமில்லாக் கந்தை, தீபமில்லாத மனை,
சூகாம் போலுண்ணுகின்ற சுகியில்லாப் போசனமும்,
கல்வியில்லாத் தேகங், கற்பனையில்லாத கவி,
வல்லவிவ் வெண்ணானங்கில் வரும்பயன்க ளொன்றுமில்லை.
தந்ததேபோது மென்றுதான் வாங்கா வேதியனும்,
வந்ததே போதுமென்று வாங்குகின்ற ராசாவும்,
வெட்கத்துக் கஞ்சுகின்ற வேசையரும், வெட்கமில்லா
மிக்குலப் பெண்டீர்க்கு மேன்மையில்லா நஷ்டம்வரும்!
அன்னை யிறந்தாலுணவான தெல்லா நஷ்டமாம்
பின்னை பிதாவிறந்தால், பேரானவித்தை நஷ்டம்!

79(அ) உற்றதுணை யிறந்தால், உடலிலே பாதிநஷ்டம்!
மற்றமனை யாளிறந்தாலன்று தலைபோன தென்பார்!
பருவம் போயப்பியாசம் பண்ணிவைக்கும் வித்தைகளும்,
பெரிய கிழவனுக்குப் பெண்டிளமைப் பெண்ணாளும்,
அத்த தரித்திரர்க்கு அழகுடைய பெண்டீரும்,
இத்தகமை மூன்றினிலு மெய்தும் பயனிலையே!

வாரியிலே பேய்ந்தமழை, வயிறு பசியில்லாத
பேர்களுக்குப் போடுஞ்சோறு, பிசாசுக்கிடும் பூசை,
பொன்னுள் ளோர்க்கீயந்த பொருள்போத விந்நான்கினிலும்
என்ன பலனுமில்லை யென்றனரே முன்னூலோர்!

79(ஆ) அந்தணர்க்கு மாவுக்கும் ஆபத்திலே யுதவார்
இந்த வுலகிலிருந் தென்னிறந்து மென்ன?
யார்க்கு முதவாத வித்தையனேகி விதமாகப்
பார்க்குள்ப் படித்தென்ன படியாதிருந்து மென்ன?
என்ன கறிசுவை களினிதா யிருந்தாலும்
பின்னுமதில் நெய்யில்லாப் போசன முந்திருப்தியில்லை
தன்னால் நிருவகிக்கத் தகாதவிரத முற்றால்
என்ன பலனுமில்லை யிடரு வருமுத்தியில்லை.!
தருணமறிந்து தவாத்தன்மை சேர்நடபாளர்
அருமையாய்ப் பின்னா லுதவியுத வாமலென்ன?

80(அ) வாயிபத்தி லெய்தாத வடிவுடைய பெண்ணாளும்
சாலவிருத்தாப் பியத்தில் சார்ந்தென்ன நீங்கிலென்ன?
புருஷனல்லா விதவை பொன்னாடை யாபரணம்
வரிசையுட னணிந்தால் வையத்தோ ரேசுவாரே
பெற்று தாயில்லாத பிள்ளை தனையெவ்வாறு
வைத்து வளர்த்தாலும் வளங்கொடுக்க மாட்டாதே.
பல்லில்லா தோருமற்ப பசியுள்ளோ ரானவரும்
நல்ருசிகா ணாரென்று நவின்றார் மனுநூலோர்
தெய்வங் குருமுறையுந் திருஞான சாஸ்த்திரமும்
வையகத்திலே மருந்து மந்திரமோடிவ் வைந்தும்.

80(ஆ) மெய்யென்று ரைப்பவர்க்கு மெய்யாய் விளங்கிநிற்கும்
பொய்யென்று ரைக்காதாற் பொய்யாகிப் போய்விடுமே!
பாடுபடாமல் பலன்கொடுக்கு நற்பனை போல்

நாடிக் கொடுப்பதுவே நன்றாகு முத்தமமாம்
சிலது நாள்பாடுபட்டால் தென்னமரம் பின்பு
பலந்தருதல் போலக் கொடுக்கும் பண்பதுவே மத்திமமாம்
வருடமெல்லாம் பாடுபட்டால் வாழையொரு விசைதான்
தரும்பலன் போற்கொடுக்குந் தர்மமுமே யதர்மமுமாம்
தெண்டனை யில்லா வேலைசேயரில் லாதமனை,
தொண்டவர்க் குள்ளடங்காக் கொம்பனையாதில் வாழ்க்கை

81(அ) வண்ட னிணக்கம், வறுமைதனிற் சேர்க்கும்!
மண்டலத்தில் வைத்தும் வளந்தரவு மாட்டாதே!
மாரிகாணாத பயிர், மக்களில்லாதயில் வாழ்க்கை,
ஏரிகுள மில்லா வூரிரவிகாணாத வனசம்,
அன்னை காணாதபிள்ளை, யாவினைக் காணாதகன்று
பொன்னில்லாப் பூஷணங்கள், போசன மில்லாதவுடல்,
காவு காணாதவண்டு, கலைகள்காணாக் குமரன்,
மேவு கொழுனனில்லா மெல்லியர் களானவரும்,
தோழர் காணாநேசர், சோடுகோணாப் பேடு,
மீளுமதி காணாத வெண்குமுத மானதுவும்,

81(ஆ) பெரியோ ரில்லாத சபை, பெண்கள்தனில் மூத்தாள்,
உரிய தியாகியில்லாவூர், பதினேழா மிவைகள்
தாழ்வு தருமல்லாது சாந்தவள மாகாது!
வாழ்வு காணாவிளமை வீணாம் மென்றிடுவார்
நல்லோர்க்குச் செய்நன்றி நாட்டிவைத்த கல்லெழுத்தாம்
பொல்லார்க்கு செய்தநன்றி பொய்கையுறும் நீரெழுத்தாம்
சுற்றமுண்ணாயில் வாழ்வுஞ் சுதியில்லான் பாடுவதும்,
கற்றறியான் பாடுகவி கைம்பெண்ணிலே யழகும்,
துற்குணப் பெண்சாதி சொற்கேளாத வடிமை,
மிக்க விவையாறும் வீணாகும் நிலையே!

82(அ) ஊமை செவிடருக்கு வுரைத்த வுபதேசம்,
சேமமென்று பாவிக்குச் செய்த வுபகாரம்,
மேலுமுவர் நிலத்தில் விதைத்ததொரு நல்விதையும்,
சாலவிவை மூன்றாற்றுத் தண்ணீரிற் கரைத்தபுளி!
குதிரைக் கிராவுத்தன், கூறுகவிக்குப் புலவன்,
சதிரான வாயுதங்கள் தனக்கு சிலம்பியுமாம்,
வேசைக்கு நட்டுவனும், விளங்கு பலராகமதற்
தாசையாய்ப்பாடு வறுமை வருந்தானில் லாட்டால்
ஏத்த முடன் மதிலெழுதி வைத்த பெண்ணழகைப்
பார்த்து மகிழ்ந்துபோம் பண்பாம் பயனிலையே!

82(ஆ) தேவாலயஞ் சுத்தித் திரும்பாததாள் தானோ?
தேவதரிசனங்கள் செய்யாத கண்கள் கண்ணோ?
பகவான் தியானமதைப் பண்ணாத சிந்தையென்ன?
செகமீது பகவானைச் சேவியாச் செங்கையென்ன?
சிவன்மாலையுந் துதிகள் செய்யாத வாயென்ன?
சிவன்மாலையும் வணங்காச் சென்னியுமே சென்னியதோ?
தினமும் புராணகதை செவிகேளா தென்னசெவி?
முனையான புண்ணிய நதிமூழ்காத தென்னவுடல்
மேவுமிவை யெட்டுமில்லா தோன்பாழ் செனனம்!
பாவியவனிருந்தும் பலனில்லை, வீண் பிறப்பாம்!

லோபத்தனம்

83(அ) ஞானமறிதல் கொடையாளி தன் வானாய்
ஆனதொரு பூவலஞ் செய்வானாய் விவேகியுமாய்
மிக்கதொரு வித்துவான விளங்குகின்ற கீர்த்திவான்
உக்கிரான வீரனுப காரியா வருக்கும்
இவ்வகை யிலோர் பேரெடுக்காத சென்மமவன்
இவ்வுலகிலே மனிதனென்றச் சொல்ல வொண்ணா

சீர்படைத்தவோர் மனுஷச் சென்மமொரு யோசனைக்குள்
பேரெடுக்காப் பேரமனுஷப் பிறப்பிற் கழுதையுமாம்
தேன்றுளியொன் றாற்கடலைத் தித்திக்கச் செய்தாலும்
மேன்மையுடன் மலையை மெழுகாகச் செய்தாலும்

83(ஆ) பூவினால் வச்சிரத்தைப் பேர்த்துத் துளைத்தாலும்
மேவுங்க படருக்கு மெஞ்ஞானம் வந்தாலும்
ஊமை படித்திடினு முக்கமில்லாப் பேடிக்கு
தாமே வீரிய தைரிய முண்டாயிடினும்
நித்தங் கயவருக்கு நீதிமுறை வந்தாலும்
இத்தலத்தி லோபர்களுக் கீகைசற்றும் வாராதே
தின்னாம லுண்ணாமல் தேடிமிகச் சேர்த்து
புண்ணியமுஞ் செய்யாமல் புதைத்து வைக்கும்லுத்தர்
பொருள்
தெண்டம் பெரும் பிடிக்குந்தீய்க் குந்திருடருக்கும்
வண்டமனவேசை கட்கும் வலுவந்தக் காரருக்கும்.

84(ஆ) இதமில்லாப் பேடிகட்கும் எல்லாச் பிசாசுக்கும்
உதவுமேயீயா வுலுத்தர் பொருளது தான்
ஆகாப்பத ரெனினுமதிக வீபூதியை விளைவிக்கும்
வாகாய்ப் பழஞ்சுவரும் மாடுறைஞ்சு முன்மறைவாம்
மாடுகடாவதுவும் வையகத்தி லேயுளவாம்
கூடும்பொதி சுமக்குங் கூடிவரு மேயதனால்
செத்தபிண மானாலுஞ் சிறிதுவுப காரமுண்டு
புற்றதுவு மண்ணாகும் பொங்கரவுக்கே மனையாம்
கல்லாலே யாலயங்கள் கனத்த பணதியுண்டு.
அல்லற் கழுதையென் றாலமுக்குப் பொதிசுமக்கும்

84(ஆ) வாருகோவா னாலும்மாளி கையெல்லாம் விளக்கும்
பேறாய் குரங்கு பிடித்தார்க் குதவிசெய்யம்

ஈயாத லோபிகளா லெவர்க்கு முபகாரம்
வாயாதவர் கொடுக்க மாட்டா ரொருக்காலும்
நெல்லிற் பதரென்ன நீரினிலே பாசியென்ன?
நல்லமரத்தில் மொக்கு நன்றாயிருந்து மென்ன?
சீதேவி யாருடனே சீர்கேடி யானதொரு
மூதேவிதான் பிறந்து முக்கிய முண்டோவதனால்
தயவாய் ஒருவயிற்றிற் சார்ந்த விவேகியுடன்
கயவர் பிறந்துமென்ன காரிய மெல்லாஞ் சிதையும்

85(அ) உச்சித மாயார்க் குமுதவியில்லா தார்வாழ்க்கை
நச்சுமரம் பழுத்து நடுவூரில் நிற்பதொக்கும்
செத்த பிணமதனைச் சிங்காரித் தாவதென்ன?
கைத்தலத்தி னாலிழுத்துக் காட்டிலே போட்டுமென்ன?
நாயானது கொழுத்தால் நாட்டிலதை யார்புசிப்பார்?
ஈயாத லோபியர்க்கு எல்லாமிருந்து மென்ன?

இகழ்ச்சியீனம்

ஈகையில்லா மாந்தரிருந் தென்னிறந் தென்ன?
ஆகையாலே மிருகமதனிலே சேர்க்க வென்றார்?
கற்பனை யில்லாக் கவிதனையே கேட்பதுவும்
விருபமில் லாரிடத்தில் வேண்டுங் கொடைபலவும்

85(ஆ) ஆதரவில்லாத பெண்டீரரு மையில்லாச் சேவகமும்
பேதமின்றிப் பேர்விளங்காப் பிள்ளைதனைப் பெற்றதுவும்
ஊழிவினை யுமுதிர் கொடுமை யில்லாமல்
வாழவல்ல வீரைந்தும் வசையாகுங் கண்டீரே!
நீர்நுழை யாவிடத்தில் நெய்நுழையும் நெய்நுழையாச்
சார்பிலே பால்நுழை யுந்தானது போகாவிடத்தில்
மீறிப்புகை நுழையும், வெம்புகை போகாவிடத்தில்
தாரித் திரனுமது தன்னில் நுழைவானாம்

தக்கதரா தரங்கள் தானறியாப் பேரிடத்தில்
ஒக்கவிருந் துண்பதிலும் மோடெடுத்திரத் தல்நன்று

86(அ) தூயவறி வில்லாச் சுதரைப் பெறுவதிலும்
பேய்தனைப் பிள்ளையாய் பெற்று வளர்த்தல்நன்று
உள்ளன் பில்லார் கருடனட்பு கொள்வதிலும்
கள்ளுண்ணும் வம்பர் கழுதைகனை மேய்த்தல்நன்று

வெளிவிடக்கூடாதவை

ஆசானு பதேசமரி வையர்கள் புணர்ச்சி
மாசான சோரம், மனதடக்க முற்றபொருள்
மானம் பிறர்மானம் மறந்துடனே தான்கொடுத்தல்
தானுமதத் திருக்குந் தனத்தினள வினையும்
இல்லறத்தின் கேவலங்கள் யாவரிடமீது பத்துஞ்
சொல்லவொண் ணாதீனமென்று சொன்னார் மனுநூலோர்.

86(ஆ) தன்னகத் தாளன்றி மறுதாரமேலா சையுற்றால்
பின்னொருவர்தானமது பெண்டிர்தமைச் சேராரோ
பறையன் பறையனில்ல பகர்ந்தமொழி தப்பிதமாய்
பறைவோன் பறையனென்று பகர்ந்தாரே முன்னூலோர்
ஞானமுஞ் சற்குணமு நாளுமில்லான் கற்றகவி
ஈனப்பறையர் வீட்டிலிருக் குங்கங்கா சலமாம்
தண்ணீ ரின்மை தரையுவற்றி னாலழியும்
பெண்ணார்கள் நன்மை பிறர்மனத் தாலழியும்
கோதில்லா மாதவசு கோபத்தி னாலழியும்.
வேதகுல நன்மை விபசாரத் தாலழியும்

87(அ) மன்னவர்கள் நன்மை மனுநீதி யாலழியும்
இன்னிலத் திலுத்தமர்கள் யாவர்களுஞ் செய்தநன்மை
பொல்லார் தன்னகத்துப் பெண்ணாலழியு மென்று

வல்லோர்கள் முன்னால் மநுனூலு ரைத்தனரே
பருவதமும் பார்க்கடலும் பார்வதியும் லட்சிமியும்
அரிதாய்ப் பிறந்திடத்தி லரியரனும் வாழ்வதுபோல்
பூமியிலே தங்கள்மனைப் பெண்ணாள் பிறந்தவிட
மாமியார் வீடேவள மென்று ரைப்பார்கள்

கேடு

காவலர்கள் மேன்மை கடப்பதுவுமே யடங்கா
நாவுமிகு கோபமுடன் மதுரை கேளாவடுமை

87(ஆ) ஆதாய மின்றி யதிகச் செலவுகளும்
சாதாற் கேளாச்சொல் கவியில்மிச்சங் கண்டெழுத்தும்
சாட்சிமிஞ்சும் வழக்குந், தயிரிய மிஞ்சுங்கவலை,
பேச்சில் சரச மிஞ்சிப்பேசு பரிகாசமதும்,
மத்ததுவுஞ் சொற்கடங் காப்பாவைதனைப் பெண்டாக
வைத்தான் படுந்துக்கம தனைவிடத் துன்பமுமாம்
ஓர்விவகார மாயுயர்ந் தோர்க்குச் சொன்னவர்கள்
ஊரழியுமே சுமக்க வுலகமது நடுங்கும்.
உப்பிட்ட பாண்ட மிலையுதிர்ந்த மரம்போலாம்
ஒப்பில்லா வாழ்வும் பேரமுற்றார் பெற்றார் பாழாம்.

88(அ) மாதேவி யானமலர் மாத கன்றிடுவாள்
மூதேவி சேர்வள் முடிவில் நரகமெய்தும்
என்னேரஞ் சண்டையு, மட்டில்லாச் சிரிப்பதுவுஞ்
சின்ன சிறியாரிணக் கந்தீராக் கொடுங்கோபம்,
வேசையுறவும் விவேகமில்லாரிடத்தில்
ஆசாரியச் சேவகங்களாறு மிவை கொடெய்தும்
தேடா பொருளழித்தல் தீராத கோபமாண்டும்
கோடய் முடியுமல்லால், கீர்த்திசற்றும் வாராதே!
ஞானந் தனங் கல்விநாடி வருங்கால்
மானார் மேலாசைதரும் வாழ்வும் போந்துக்கமுமாம்

88(ஆ) என்னன்றியை மறந்தார்க் கெவ்வாறு முய்வுண்டாம்
மனமறிந்து செய்து நன்றிமறந்தார்க கீடேற்றமில்லை
இமிமைப் பட்டாற்றா தேழையமுத கண்ணீர்
வமிசத்தைத் தேய்க்குமா முங்கூர் வாளெனலாம்
தீங்கான வாங்காரஞ் செல்லுமிடமான தன்றி
தாங்காவிடஞ் செலுத்தில் தப்பாமற் கேடுவரும்
தாழ்ந்தா ருயர்ந்தார் சரியாமென வறிவால்
ஆய்ந்து மரியாதை செய்யாதாளாகிற் கேடுவரும்
சரியான பேரையன்றித் தன்னிலதிக பலப்
பெரியோருடனே தீர்த்தாற் பிராணபய முண்டாகும்

89(அ) இத்தலையா ரொருவர்க் கெந்நாளு முற்பாதம்
புத்திப் பிரதானமாய் பொல்லாங்கு செய்பவர்கள்
புத்திரர்க ளில்லாமல் போவது மல்லாமல்
அர்த்த தரித்திரராயற் பாயிசா வார்கள்
ஏற்கையுட னிதமுமே தேது காரியமுந்
தீர்க்க விசாரணைகள் செய்யாரே யாமாகில்
பின்னாலே துன்பம் பிணக்கு மிகவுண்டாகும்
அந்நாளோர் கீரியினாலைந்து குடிகட்ட தொக்கும்
சத்திராதி செல்லைத் தனதாய் நினைப்பவரும்,
உற்றமனை யாட்டிக் குண்மை யுரைப்பவரும்,

89(ஆ) கொடுத்த கடன்கேடடற் கோபங்களுற்ற வரும்,
எடுப்பாய்ப் பெரியோரை யெண்ணுமற் பேசினவர்,
பெரியதனம் வந்தவுடன் பின்னுமுன்னும் பாராமல்
இருவிழியார் சற்று மேரிட்டுப் பாராதார்,
இன்னிய பரிதானத் திலிச்சை வைத்தயொருவர்க்
தனியாயஞ் செய்து பொல்லாவவதிவரச் செய்தவர்கள்,
பாரிதனை விட்டுப்பரத்தை மேலாசை வைத்த,
இபரெழவருங் கெடுவர் பேயனாய்ப் பிறப்பாகும்.

கூடிப் பிரிவதினாற் கொடிய சூதாடுகையற்
கேடுவரு மிதற்குக் கெணிதல்லை யென்றனரே.

90(அ) கண்ணினாற் காண்பதுவுங் காதினாற் கேட்பதுவுந்
திண்ணமுடன் முன்பின்னாய்ச் செப்பினாற் கேடுவரும்
வித்தை மதமைஸ்வரிய மேலுங்கிளை கூட்ட
மற்றும் பயவிழியினாலு மகிழ்ச்சியினால்
ஏற்கு மெளியோர்கள் முதலாயாவரையுந் தூஷணித்தால்
திர்க்கமிடி கேடுவருந் திண்ணமென்றார் வள்ளுவனார்
நெஞ்சிற் பயமது தானேரிடவே யாவரையும்
அஞ்சவஞ்சச் செய்தாலவர்கட்கு கேடுவரும்.
தினையளவு நன்றிமுன்னஞ் செய்தாரே யாமாகில்
அணுப்போதிலு மறக்கலா காதுதான் மறந்தாலும்

90(ஆ) அந்தணர்க்குங் கோவுகட்குமடாத பொல்லாங்கு செய்த
நிந்தனையும் வந்தவர்க்கு நேரிடுமென்று ரைத்தார்
ஆவலுடன் தன்பிழைப் புக்காக வொருவருக்குத்
தீவினைக ளெவ்வளவுஞ் செய்வாரே யாமாகில்
நீண்டதொரு தன்னிழல் தானின்றடி யிலாவதுபோல்
ஆண்டு நூறானாலும் வரைவிட்டுப் போகாது
செய்ததொரு தீவினைதான் செய்தவர்க் கெப்போது
மெய்துமென்று சொல்லி விளம்பினார் வள்ளுவரும்

அரிது

அரிதரிது மானிடர் களாகப் பிறப்பதுதான்
உரிய தொருகண் குருடுஊமை செவிடும்பேடும்

91(அ) நீக்கிப் பிறக்கரிது நேராய் பிறந்தாலும்
தீர்க்கமுற்ற ஞானஞ்சிறந்த கல்விந்த குணங்கள்

வராதரித்து வந்தாலுந்தான் தர்மம்
நேராய்த் தரிக்கரிது நெஞ்சிற்றரிந் தக்கால்
நீணிலத்திற் குன்றாமல் நெடுநாளும் வாழ்வுபெற்று
வானவர் கோன்றன் பதமும்வருமென்று ரைத்தனரே!

இனிது

இனிதினிது வேதாந்த மனிதினிதா மன்பருள்ளம்
இனிதினிது காணாக கண்ணேதுங் கேளாச்செவியே

கொடிது

கொடிதுகொடி தென்பதுதான் குவலயத்திலே வறுமை
இடருமதிற் கொடிது இளமைதனிலே வறுமை
அதிற்கொடி யதர்மருந் தில்கலாத வெவ்வியநோய்
அதற்பெருங் கொடிது அன்பில்லாத தம்பியுமாம்.

91(ஆ) அதனில்மகா கொடிது அடங்காத பெண்சாதி
அதனிற்கொடி துண்ட வனோடு றங்குவதே

பெரிது

பெரிதுபெரி திந்துப் பேருகலக நான்முகன்றான்
வரியப் பிறப்பாகும் வனமால் வயிற்றுதித்தோன்
மாலோகடல் துயின்றோ னவாரிகுறு முனிவன்
பாலொடுக்க மாமுனிவன் பண்டொருக்கங் கும்பழதில்
கும்பமோ பூமியதற் குள்ளாம் பொடிமண்ணாம்
தம்பமொரு பூமியோர் தலைப்பரஞ் சேடனுக்கு
சேடனு மையாள் சிறுவிரலி னாளியாம்
ஈடில்லாத வுமையாளி றைவர்க்குளே யொடுக்கம்.

92(அ) தொண்டரி தையத் தொடுக்க மிறைவன்றான்
தொண்டர் பெருமைதனைச் சொல்ல முடியாததுவாம்!

முக்கியமுள்ளது

தலத்திற் சிதம்பரமாந் தாருவினிற் சந்தானம்
பிலத்திலே மாருதமாம் பிரணவமா மந்திரத்தில்
வேதத்திற் சாமம் விரத மேகாதசியாம்
மாதத்தில் மார்கழியா மலைதனி லேமாமேரு
நிலத்திலே காஸ்மீரம் ரிஷிகளிலே வசிஷ்டர்
குலத்தில் மறையோராங் குதிரையிலுச் சிரவனமாம்
வாரத்திலா திவார மந்நாள் மீனில்
பேருற்றவாதிரையாம் பெருமுனியில் நாரதனார்
தானத்திற்கு பேரன்ன தானமே தானமுமாம்
மனுக்களி லேராசாக்கள் வாரியிலே பாற்கடலாம்

92(ஆ) மேகத்திற் புஷ்கரமாம் விலங்குகளிற் சிங்முமாம்
யாகந்தனிற் சிரேஷ்டமசுவமேத மென்பார்
மாமணியில் மாணிக்க மலரிலே பத்மமலர்
காமதேனு பசுவில் கங்கை நதியாநதியில்
தமிழிலகத் தியராந் தந்தியிலையிரா் வதமாம்
தமனியமாம் லோகத்தில் தானியத்திற் செந்நெல்லாம்
பட்சிகளிலே யுவணம் பாம்பிலே வாசுகியாம்
மச்சத்திலே மகரம் வடிவுதனிலே ரதியாம்
கற்பிலருந்ததியாம் கபிலராஞ் சித்தர்களில்
செப்புகின்ற வாக்கில் ஸ்ரீராமச் சந்திரனும்
அசுரர் குலத்திற் பிரகலாதனேயுத்தமனாம்
வசியமுறு படையில் வச்சிராயு தமாகும்.

93(அ) சங்கினத்திற் பாஞ்சசன்யஞ் சந்திரனாங் கிரகத்தில்
தங்கும் பதவியிலே சாயுச்சி யமாகும்
போகத்தி லிந்திரனாம் புஷ்பகமாம் வாகனத்தில்
வாதொத்த வில்லறத்தின் வாழ்விலே மைந்தர்களாம்

உடையிலே பட்டாடை யுத்திலே யூகிமந்திரி
கொடையிலே தான்கர்ணன் குணமூன்றில் சாத்மீகம்
மன்னும் புராணத்தில் மாபார தமாகும்
துன்னுஞ்சுட ரொளியில் சூரியனே மேலொளியாம்
ஆடுமீனி ராறில திகதுலா மாகும்
வாடாத நுண்ணியநூல் வள்ளுவனார் சொற்குறளாம்.

93(ஆ) சுவையாறிலேல் வணந்துணை வரிலிற் குமணன்
சிவமணியில்க் குவடந்தேசத்திற் சோழ தேசம்
பொறுமையிலே பூதேவி போரிலே ராவணனும்
திருமாலர் மார்க்கவனுஞ் செய்த போரேயதிகம்
ஓசையிலி யேறுஊரில் யோத்திய தர்ம
ராசரி லோராஜாதி ராஜனும் விக்கிரமன்
அன்பாக சொன்ன விந்தவறுபத்து நான்குமே
முன்பாக முதன்மையென்று முன்னோர் மொழிந்தனரே!

கொடுமையாலழிந்தவர்

தக்கனி ரணியனுஞ் சக்கிரவர்த்தியாம் நிமியும்
மிக்கானவர் குலங்கள் மேனாளிலே நகுலன்

94(அ) பந்தமுறு கின்றசிசு பாலனறு வர்களும்
நிந்தனை யினாலே நிர்மூலமா னார்கள்
கஞ்சன், துரியோதன்னுங், காளமுனிவன், சகுனி,
வஞ்சகஞ் செய்வர்தாவி, மாரீசனுங், கவந்தன்
பூதகிய சோமுகியும், பொல்லாத சூர்ப்பனகி,
வாதுபுரி யுந்தந்த வக்கிரனா மென்பவனும்,
சகடனுடன் வில்லவனுஞ் சலேந்திரன், மகாசூரன்,
விகடன், பிரலம்பன்,மேனாள் தரசூரன்,
மிஞ்சுகொடி யோரா மிவர்கள் பதினெழுவர்
வஞ்சகத் தினாலவர்கள் வம்மிசத்தோ டேயழிந்தார்!

94(ஆ) சூரனுடன், தாருகனுந் துற்பானு கோபனுடன்,
வீரமிகு சிங்கமுகன், மின்னாள் சோமுகியும்,
தீயரா மந்தத் திரிபுரா ளானவரும்
மாயமது, கைடவர்கள், மாயா பிதுந்துபியும்,
மாலி, சுமாலியுடன், மகிடாசூரன், சம்பரன்,
காலகேயா, நிவாதக வசருடன், தாடகையும்,
இடும்பன், பகாசூரனி ரணியாச்ச னென்போன்
கடுங்கோபச் சகார காலத்தி யாலழிந்தார்

தாசியங்கம்

புருவ நெரியாமல் விழிபுரளாமலே மெய்யில்
தெரியாமலே யங்கச் சேட்டைகளுஞ் செய்யாமல்

95(அ) அணுவளவுந் தலையை யசைக்கா மலேமிடறு
தனில் பொருமாமல் சுருதிதந் திலயக்கியானம்
நீதியாய் தொனி வீணை நேராயதிற்றந்தி
நாதமிட்டுப் பூசை ரண்டு ஐசரிபாகம்
அமுர்த ரசதழியா யமிர்த சங்கீதம்
சமரசமாய்ப் பாடுமவள் தாசிமகள் தாசியென்பார்
காயமேல் விழியுமுயர்கண் மேவிமனமும் வைத்து
காயமேல் பின்னே முங்காட்டமவளே பாத்திரம்
பாதாளச் சுருதியங்கம் பாங்காகவே செய்து
வாதாளஞ் செய்பவனை மத்துரியா மென்றிடலாம்

95(ஆ) பலராக்கீ தங்கள் பாங்கான தானங்கள்
நலமாகப் பாடுவன் நல்லரிதொரு பாடகனாம்
தாளத்திலே நினைவு தரித்து நடனமிடும்
வாளுற்ற சம்பரத மறுவான நட்டுவனாம்.
தாளலய மார்க்கந்தப் பாமலிங் கிதமாய்
வீணாம் பதச்சேவை விழைவோன் பரிசன்னாம்

வேசையர்கள் வரலாறு

வேசையர் தமில்லம்விட்டு மேல்விடமுஞ் சென்றாக்கால்
காசுபணமற் பழமாய் கனிசங் குலைந்துவிடும்
மிக்கவிலை மாதர்வீடு சந்தைக் கடையாம்
பக்கல் பொதுவம்பலமாம் படுக்கை வீடென்பதுதான்

96(அ) சந்தியிற்பாய் மெத்தையதாந் தண்ணீர் பந்தல்தாம்
பந்தமுறு தேகம் படித்துறைய தென்றிடலாம்
சூதாடு சோலை துகில் துடைகள் தண்ணீர் பந்தல்
மீதிலே கட்டிவைத்த மிக்க தலிமரம்
மையாடுங் கண்ணியவள் வரரணிந்த கொங்கைரண்டும்
கையாடும் பந்துகடை யெலும்பிச்சம் பழமாம்
பாகமுறு செவ்வாய் படிகமதிற் கொப்பாகும்
ஒகும்வள மோகமது யெட்டிக் கனியெனலாம்
பாசமுட னிவ்வாறு பாங்குடையார் தீங்குபுரி
வேசையர் மேலாசைகொள்ளல் மேலவர்க்கு மேன்மையல்ல

பெண்களால் பங்கம் அடைந்தவர்

96(ஆ) சந்திரனு மிந்திரனுந் தன்னுடலில் பங்கமுன்னார்
சந்ததஞ் சேர்வாலிசடா சூரன், கீசகனும்,
எண்ணரிய வாழ்வுடைய யிராணவ னென்பவனும்,
பெண்ணாலே பங்கமுற்றுப் பிராணலய மானார்கள்!
சுந்தோபசுந் தரெனுஞ் சூரரி ருவர்களும்
அந்தமிகு மோகினி மேலாசை கொண்டு மாண்டார்கள்!
வையகத்தி லொப்பில்லா மாபிலவானு மெழில்சேர்
தையலரைக் கண்டால் 'சவுரியமு' நில்லாது
மானார் குணங்குறியிவ்வாறே தெரியாமல்
தானவர்மேல் மோகித்தால் தப்பாமல் துன்பம் வரும்!

புருஷன்வாக்கில் பரிபாலனஞ் செய்தவர்.

97(அ) ஆதியருந் ததிமின் னாளுங் கவுசிகையுஞ்
சாது குணச்சாலைச் சந்திரவதி யென்பவளும்
உத்தமியில் மிக்காக வோது நளாகினியும்
பத்தாவின் வாக்கிய பரிபாலனமே செய்தவராம்!

மூன்று யுகத்திலும்

கிருதா யுகத்திற் கெடுகாளி ரேணுகையும்
திரேதாயு கத்தினிலே சீதையெனும் பெண்ணாகும்
துன்னு துவாபரத் திற்றுரோ பதையே கூற்றுவனாம்
இன்னாள் கலியுகத்திலில்ல மெல்லாங் கூற்றுப்பெண்

97(ஆ) பெண்களுக்குச் சுவாதீன மில்லை யெனில்
பெற்றோர்கள் பேதையிலுபின் பருவத்திற் புருஷன்
மற்றவரு மூப்பினிலே மைந்தர்களே காப்பவராம்
முக்காலும் பெண்ணுக்கு முயற்சியொன்று மில்லாதால்
மிக்கானபெண் சென்மம்வீண் சென்மமாகு மென்றார்
புருடதெய்வ மென்று போற்றுகின்ற கற்புடையர்
அரிதான வாண்சன் மத்திகமென்று சொல்லினரே.
பத்தாவே தெய்வமென்று பணிந்தேத்துங் கற்புடையர்
ளுற்ற மழைபெய்யென் றுரைத்தாலு மாரிபெய்யும்

பெண்கள் வரலாறு

மெத்த வழகுடனே மேன்மையுள்ள மின்னாளோர்
புத்திரம் பெற்றவன்றே போமழகு மேன்மைகளும்
மேலான கன்னியர்கள் விரகத்திலே யழுந்தி
கோலமெல்லாஞ் சீரழிந்து குரங்காகப் பேருமில்லை

98 (அ) சதிராய் தன்னில்லமே விட்டுத்தனி வழிபோ மின்னார்க்கு
பதிவிரதா பாவமில்லைப் பங்கம்வந்து நேரிடுமாம்.

அன்பில்லாப் பெண்ணின் மேலாசை கொண்டு சேர்வதிலும்
முன்பாகச் சற்குணப் பெண்முலை கண்டாற் போதாதோ
பேரிளம் பெண்கள் பலபேரைப் புணர்வதிலும்
காரிகையாம் வாலையொரு கன்னிதனைச் சேர்தல்நன்று
துற்சந்தம் வீசுமுடல் தோகையரைச் சேர்வதிலும்
நற்சந்தம் வீசுமுடல் நாரியர் கைக்குட்டு நன்றாகும்.

98(ஆ) பெண்ணொருத்தி பேசினாற் பேருலகமும் நடுங்கும்!
பெண்ணிருவர் பேசினாற் பெருவானின் மீனுதிரும்!
அலைவாரியுஞ் சுவறுமா யிழையார் மூவருக்கும்!
பலபேர்தான் கூடிலென்ன பாடுபடுமோ பூமி?
ஆசைகொண்டாள் போலே அபிநயத்து மேல்விழுந்து
பேசுகின்ற வஞ்சப்பிரிய மறியாமல்
அன்பில்லா வேசை நமக்கன்புள்ளா ளென்றெண்ணி
நம்பினவ ரெல்லாரும் நாயினிலுங் கீழாவார்.

கர்ம காண்டம்

பூதலத் தோர்க்காகப் பொதியைமுனி நாயனுமுன்
காதலுற்றுச் சொன்னகர்ம காண்டத்தியல்பு சொல்வாம்

99(அ) தர்மமில்லா தார்க்குச் சர்மா மகாநோயும்
கர்மவியாதி வந்த காரணத்தைச் சொல்லுகிறேன்.
தெய்வ வுருவழித்தல் சிவசிந்தை வதைத்தல்,
வைதுதந்தை தாயை மனநோகவே பேசல்,
நந்தவன மழித்தல், நாதர்களைப் பழித்தல்,
நந்தவனத்தில் மலராத வரும்பு கொய்தல்,
திட்ட முடனிப்பாவஞ் செய்த கொடியோருக்கு
குட்டநோய் வந்து கொடுமை செய்யுமென்றனரே!
நாகமுடனூர் வனங்கள், நல்லபறவை, பட்சி,
சாகவே கொன்ற சண்டாளரா னவர்கள்,

99(ஆ) குதிரைவலி கரத்தைவலி, குமரகண் டன்முசலி
சதிராகவே வந்து சாருமென வுரைத்தார்!
உத்தமரைப் பழித்து உதாசீனங்கள் பேசுவதும்
பக்தா சித்தர் பாவம்பற்றித் துடர்ந்ததினால்
ஆதிசிவ தலங்களான தனைப் பழித்துக்
கோது பட்சசினந்து கொடுங்கோபஞ் செய்வதினால்
கற்புடைய மின்னார்மேல் காதலது கொண்டதினால்
தப்பியதமாயப் பித்தந் தலைக்கேறியே பிதற்றி
பண்பாய லகிரிபதி (னெட்டு). மெய்துமென்று
முன்பாக தட்சணா மூர்த்தி மொழிந்தரே!

100(அ) பச்சை மரங்கள் தனைப்பட்டை வெட்டியே யுரித்தும்
மிச்சந்தளிர் கொழுந்து வேர்முதலாய் வெட்டுவதும்
குளிர்ந்த மாதத்தில் காய்கொம்புகளை முறித்தல்
அழுந்தமலராப் பூவையன் வரதங் கிள்ளினதால்
மண்டைக் கரப்பான் வாய்வு வொருத்தலை நோய்
மண்டையிலே குத்து, மகத்தான பீனசங்கள்,
மாறாயக்க பாலத்தின் வாயுவான நோய்தானும்,
வீறாய் வந்தெய்து மென்று, விளம்பினார் மாமுனியும்!
வித்தான தையழித்து மேலும் தைத்தின்றதினால்,
பத்தியுடன் கன்றுக்குப்பால் விடாத தோசமதால்

100(ஆ)பாலகரை யழித்துப் பச்சைமரப் பிஞ்சுகளை
சாலயிளம் பயிர்கள் தனையழித் ததினால்,
மானார்க்குக் கொப்ப நோய்வரும், வாக்கு மைந்தரில்லை.
ஆனாலும் பாவிகள்தானந் தரங்கஞ்ச் சொல்ல வொண்ணா
சூரியனைத் தோத்தரியாத தோஷம் தனாலும்
நீரிலுயிரைப் பிடித்து நெருப்பிலிட்டு(ச்) சுட்டதினால்,

மடிப்பாய்ப் பிராணிகளை மாயவே செய்வதினால்,
துடிக்கவுயிரோட தனைச் சுடுமணலைப் போடுவதால்
நல்லநிழல் மரத்தை நாருரித்து கொண்டதினால்,
வல்லமையாய்ப் பச்சை மரங்களதனை வெட்டினதால்

101(அ)பசித் தோரிருக்கவவரை பார(ா)மலுண்டதினால்,
நிசமாய(ச்) சுரதோஷம், நேருமென்றே யுரைத்தார்!
மாதா பிதாவை மனநோகச் செய்ததினால்
வேதாந்த சற்குருவை மெய்நோக வைத்ததினால்
வீம்பான பேச்சுகளும் விசுவாச பாதகமும்
நாம் பெரியோரென்று பலரான வரையும் பழித்தல்
தெய்வநிலை யழித்தோர் தினந்தினமும் பொய்
(யுனரத்தோர்)
வையகத்திற் பாண்டுநோய் வந்தே மெலிந்திடுவர்
ஊனானதைத் தின்றுஉயிர் வதைகள் செய்வதினால்
மானார் கற்பழித்துப் பூமரங்கள் தனைவெட்டினதால்

101(ஆ)புண்ணியந்தான் செய்யாமல் புண்ணியங்களைக் கெடுத்து
தண்ணீர்(க்) குளமேரி தன்னையுடைத்து விட்டும்,
நிற்பதளப்பதுவும் நிறைகள் குறைய விற்றும்,
மறுபட்டா நீரில்பல மூத்திரங்கள், விட்டும்,
துராக மாயிவ்வாறுதுன் பங்கள் செய்தவர்கள்
கிராணிக் கழிச்சல்வந்து கெடுவாரென யுரைத்தார்.
பொல்லாக் கடுங்கோபர்ப் பொய்யே மிகுத்தவர்க்குஞ்
சொல்லு வதைப்பின் மறுத்துத் துஷணித்து(ப்) பேசுபவர்.
உண்டுமிகப் பேச்சுகளால் ஊராரை வைதவர்க்கும்.
திண்டுமிண்டாய்ச் சீவசெந்தை நஞ்சாற் கொன்றவர்க்கும்?

102(அ)கன்னத்திற் புத்துகண்டே சிலவிப்புருதி
கன்னத்திற் சூலைகடிதான் பல்லறணை

தந்தரோகங்கள் சகிக்கரிய வாய்ப்புத்து.
தந்தரோகஞ் சூலை தப்பாமல் வந்திடுமாம்.
சற்குருவைத் தூஷணித்தோர் தன்மையில்லாக் கோபத்தால்
முக்கியஞ்சேர் பாதையிலே முள்ளதனைப் போட்டவர்க்கும்
பச்சை மரமதனைப் பங்கமுற வெட்டினார்க்கும்,
உச்சிதமாய்(ப்) பூவிலை காயுதிர வடித்தவர்க்கும்,
வண்டு கடி கரப்ப(ா)ன் மகத்தான குட்டநோய்
யென்று மிவர்கட்கு யெய்துமென்றார் மாமுனியும்!

102(ஆ)பத்தா சிவசித்தா மரம் சிவயோகிகளைச்
சித்தங்கலங்கவே செய்த கொடும் பாவிகட்கும்,
வில்லாலு மம்பாலும், வெடிமருந்துக் குண்டாலும்,
கல்லாலும், பொல்லாக்க படத்தாற் சீவசெந்தை
கொன்றகொடும் பாவிகட்குங் கொடிதானமார் பாணி
கண்டமாலை, பிளவை, கழல்வாதம், வந்திடுமாம்!
'காங்கிசையாப் பெண்கள் தமைகவனித்து பார்த்தவர்க்கும்
ஏங்கியவர் போகத் திலின்பமுற்ற பாவிகட்கும்,
மின்னாரைக் கண்டு விலகாமற் போனவர்க்கும்,
பின்னவரைத் தூஷணமாய்ப் பேசிப் பழித்தவர்க்கும்,

103(அ)தப்பிதமாகப் போய் சத்தியங்கள் செய்தவர்க்கும்,
மெய்ப்பான தெய்வத்தை மேவிநிந்தை செய்தவர்க்கும்,
பலதரமுமுயிர்வதைகள் பண்ணுவதைக் கண்டிருந்தும்
விலகாமற் பார்த்திருந்தயேடை நாயானவர்க்கும்,
கண்ணில்வியாதி வருங்ககண் ணொளிவுதான் மறையும்
தொண்ணூற்றியாறு நோய்துடரு மென்றார் மாமுனியும்!
பேறானதேது முயிர்பிராணி களை(த்)தான் பிடித்து
கூறாகத் தூக்கி வைத்துக் கொண்ட கொடும்பாவிகட்கும்
கோவதனைக் கொன்றவர்க்கும் கொடிதான கண்வலி

வைத்து
சீவசெந்தை நீர்த்துறையிற் சேதமே செய்தவர்க்கும்

103(ஆ) அலறும் பிராணிகளை யமுக்கிய தனுடைய
தலையறுத்து மிக்க குடல்தன்னை யெடுத்தவர்க்கும்,
ஈனமிரக்கமற்ற யிராட்ச தரையொத் தவர்க்கும்,
ஆனந்தவாய்வு வந்தளிக்கு மெனவுரைத்தார்
திருந்தவே முற்பிறப்பிற் சேயிழைமார் தங்களுக்கு
மருந்தீடு செய்து மயக்கிக் கற்பழித்தவர்மேல்
மயலான பெண்போலோ மறுசென்மத் தினில்லவளும்
சயரோகமாக வந்து சார்வாளென வுரைத்தார்!
மார்க்கமதில் நிற்குமரங் களதனை வெட்டினவர்
பூக்கமமுங் நல்மரத்தின் புறத்தொலியைத் தானுரித்தோர்.

104(அ) வீணிலே பூடுகளை விருஷ் சங்களை முறித்தோர்.
ஊணுகின்ற கால்முறித்தே யோடாமற் செய்தவர்கள்
தம்பமாயச் சிவசெந்தின் தந்தங்களை யுடைத்தும்
கொம்புகளை முறித்துக் கொடும்பாவஞ் செய்தவர்க்கு
வாதங்கள் வந்துவிளங் காமல் கால்கைகள்
கூதலுடணிருங் குளிரும் வருமென்றனரே!
பலபேர் வயிறெரியப் பண்ணிவைத்த பாவிகட்கும்,
நலஞ்சேர் பெரியோரை நடுநெடுங்க பேசினர்க்கும்,
மாறாமனக் கசடு வைத்து வெகுபேரைச்
சீரழிவு செய்தவர்க்குஞ் சிலர்பசிக் கவுண்டவர்க்கும்,

104(ஆ)சண்டாள(த்) தத்துவங்கள் சதாகாலஞ் செய்தவர்க்கும்,
மிண்டான குன்ம வியாதிவந்து சூழுமென்றார்!
பட்சி மிருகங்கள் பாம்பு முதலானதனை
மெச்சிப்பிடித் தடைத்தால் விலங்கவர்க்கே யெய்துமென்றார்
சாலப் பலவுயிரைத் தண்ணீரினண் டுகளைக்

காலை முறித்தவர்க்குக் கால்கை முடங்குமென்றார்!

ஒப்பனையானவை

வெடுக்கென்ற சொல்லாளை மேலோரகத்தில் வைத்தல்,
மடத்தையுங் கட்டியதில் வனக்குரங்கை வைத்த தொப்பாம்!
எண்ணாமல் வஞ்சகப் பெண்ணின் சொல்லை நிச்சயித்தல்,
மண்குதிரைதனை நம்பியாற்றினிற் சென்ற தொக்கும்!

105(அ)அகாமிய முன்னாரெனிலு மறிவானரைச் சேர்ந்தால்,
மகாமேருவைச் சேர்ந்த மானதனை நிகர்ப்பர்!
தன்னவரே யானாலுஞ்சார் பறிந்து சேர்தல் நன்று.
துன்னுசுடர் விளக்கெணிலுந் தூண்டுகோல் வேணுமதாம்
கடவுள் விதியை வெல்லக்கட வரெவராருமில்லை
மடலிலே யிட்டாக்கால் குடலிலே தங்காதே
நிலையாம் நிமலனடி நேர்ந்தாற் குறையுளதோ?
மலைமேலிருப்பவரை வந்து பன்றி பாய்ந்திடுமோ?
பெரியோர் திருவுளந்தான் பேதித்தால் யார்தீர்ப்பார்?
கரியமலை சாய்ந்தால் மண்கட்டியது தாங்கிடுமோ?

105(ஆ)கடந்ததேவருஞ் செல்லாத காலம்வெல்லப் போகாது
உடைந்த சங்கிற் சற்றுமொருவேசை பரியாதே
மட்டிகட்கு நல்லபுத்தி வானித்துச் சொன்னாலும்
இட்டமுற்ற தன்குணம் போயெய்தாது நற்குணந்தான்!
கடையரால் மேலோர்க்குக் கருமங்களும் விழலாம்
முட்புல்லுத் தண்ணீரில் முக்கலத்தையே யழிக்கும்
வலியோசைச் சார்ந்தவர்கள் மற்றெவர்க்குஞ் சுவரோ?
மலையேதான் லெக்கானால் மறைகுருட னெய்யானோ?
தலையானோரைச் சேர்ந்தால் தாழ்வில்லைத் தாழ்வுவந்தால்
புலிக்கடிமைப் பட்டுங்கறிக் கசைப்பட்ட தொக்கும்

106(அ)மெலிவாகிலு மேலோர், மேற்செயலே செய்வார்கள்
புலிபசித்தாலெப் போதும் புல்லருந்த மாட்டாதே!
விற்பனமே லோர்கள் மெலிவாகிப போகிலென்ன,
குப்பையிலே போட்டாலுங், குன்றிமணி மங்காதே,
நேசருடன் பிறந்தோரி ரெண்டுபேர், வேறுபட்டால்,
ஊசியிலே கப்பாகி நூல் நுழையாவாறாகும்.
ஏற்காதவை செய்தாலி கட்சியென்றும் போகாது.
ஊர்வாயை மூடவுலை மூடிதானு முண்டோ?
எட்டாக் கனியதனுக்கோ ராசைப்பட்டு மென்ன?
தொட்டுக்காட்டாத வித்தைசொட்டுப் போட்டால் வருமோ?

106(ஆ)நாட்டுச் சுரைக்காய்க் கறிக்கு நாட்டினாய்துமது
ஏட்டுச்சுரைக் காய்க்கறிச் செய்தாதொரு நாளும்.
மாறுபாட்டுக் காரண வர்க்குநிச மென்றிருந்தால்
ஏறவிட்டே ஏணிதனை யெடுத்து விட்டவாறாகும்
வாழ்வுடையோர் முன்னே வறுமையுற்றோர் சொல்நிலையாம்
ஏழை சொலம் பலமுமேறாது கண்டீரே!
கொடையாளியே வறுமைக் குள்ளா கினுமிவன்
கடுகு சிறுத்தாலுங் காரமது போகாதே!
வீற்பனக் குருமூடன் மேலாம் பரமானால்,
குப்பையு யர்ந்துகோபுர முந்தாழ்ந்த தொக்கும்.

107(அ) இட்டமுற வாழ்ந்தோர்க் கியல்பு தப்புங்கால்,
கெட்டவர்க் குற்றார் கிளைதனிலும் மில்லையில்லை!
இணக்கமுடன் நல்லபுத்தி யெல்லளவுங் கேளார்க் குரைத்தல்
பணத்துக் கோரம்பு கொண்டு பாழிலெய்த வாறாகும்
காலிப்பயிர் தின்னாமற் காப்பதுவே வேலியுமாம்
வேலிபயிர் தின்றால் விளைவதொரு போதுமில்லை
நிலையான காரியமு நில்லாது மந்திரத்தால்

கலைப்பார் கலைத்தாக்கால் முலைப்பால் மருந்தல்வோ?

பாரப்பழியில் கூடா ஒழுக்க மாண்பு
பார்ப்பளவில் திரும்பிப்பாரா ளுரைத்தமொழி
கேளான்மருவிசன மேதுவுமே சொல்லாளாம்.

107(ஆ)கள்ளன்போல்மற் கட்டிக்கவிழ்ந்தாலும ல் புரிவாள்,
உன்னன்புக் காரருடன் போயுஞ் சண்டை செய்வாள்
ஆடையுடனா பரணமடைக் காயுடன் கொடுத்தால்,
நாடாள் புறங்கையி னாலதனைத் தட்டுவவளாம்,
அங்கையல் தொட்டா லா:டரவம் போற்சீறி
சங்கை கெடப்பேசிச் சத்துருவைப் போலப் பார்ப்பாள்
அயலாருடனே விளையாடியே கூடுவளாம்
மயலாய்க் கணவன் பிடித்தும் மருவச் சரசஞ்செய்தால்,
மெய்யதிலே நோய்கள் மிகவெனவுந் தர்க்கமிட்டு(ப்)
பொய்யாணை யிட்டுப் புறங்காட்டியே படுப்பாள்

108(அ)முந்தியுறங்கில் பெருமூச்சு விட்டுயெத் தனையோ
சந்தோஷஞ் சொன்னாலுஞ் சற்றேறுமே யிரங்காள்
ஆறிடத்திற் போடாவென்றவன் கொடுப்பதை யெறிந்து
சீறிச் சினந்து தெய்வமே யென்றழுவாள்!
நாடானதிற் பெண்கள் நான்குவகை சாதியிலும்
கூடாவொழுக்க குறையிது வாமென்றனரே
ஆடவர் ளெந் நாளுமாசை கொண்டபெண் குறிப்புங்
கூடாவொழுக்கக் குறிப்பதனைச் சொல்லுகிறோம்.

அன்புற்ற மகளிர்
பலநாளு மாடவனைப் பார்த்த கண்ணா யிருப்பாள்
தலைவனவனைப் பார்க்கில் தலைகவிழ்ந்துமே சிரிப்பாள்

108(ஆ)உள்ளன்பு காட்டாள் ஓங்கி(ப்) பெருமுச்சு விட்டாள்
தள்ளாக் குழந்தை தனைத் தடவிமுத்தமிடாள்

பாங்கியரைத் தழுவாள் பாங்கனைப் பார்த்து நகைத்து
பாங்காய்(த்) தலையசைத்துப் பல்லைக் கடித்துறுக்கி
பிறரெவனரயு நிறுத்திப்பே பசுவதுபோல் பேசி
பிறதால் போய் மூக்கைப் பிசைந்து தும்மல் தும்மி
தலைவனன் புவைத் தாலுந்தன்னுடன் பொய்யன்பென்று
தலைவன் மொழிகேட்டு மவன்தன் தொழிலையுமகிழ்ந்து
ஆடவன் வீட்டுக்கடிக் கடிதான் போதலவால்
ஆடவனைக் கண்டலறக் கணிசி நானுதலும்
கொம்பனையார்க் குள்ளன்பு குறி(ப்) பறிதலாகுமென்று
முன்பாக நூலுகளில் முன்னோரு ரைத்தனரே.

பெண்களுடைய தத்துவம் பத்துக்கும் விபரம்

109(அ) மிக்கயின் னூலில் மேன்மை குறிப்பரிய
தக்கதொரு பெண்கள் பத்து தத்துவத்தைச் சொல்லுகிறோம்
பொன்னிறமு மல்லிகையின் பூமணமும் தாமரையின்
வண்ண மலர்முகமுமா, சற்றஅமிர்த மொழி,
தனதானிய வாழ்வுஞ் சார்ந்த சனசேகரமும்,
இனமோடும், வாழ்பவளின் தெய்வத் துவமாம்
இரக்கம், வணக்க மின்பமுறு தேகம்,
சிறக்கவே தானதர்மஞ் தெய்வ விசுவாசம்,

109(ஆ) வன்கொலை கண்டஞ் சுமவள்மானிடர்கள் தத்துவமாய்
முன்சொல்லு நூலதனில் முறையிலு ரைத்தனரே!
நித்திரை மிகுத்தல் நெருமுச்சுச் சோம்பல்களும்,
மெத்தவே கொட்டாவி, வீடெல்லாம் போய்(த்) திரிதல்,
சுத்தமில்லாத தேகஞ்சு,சியில்லாப் போசனமும்,
நத்துகின்ற மின்னாள், நரகத்தத் துவமாகும்!
ஆற்றிற் குளத்தில்லை கடலிலே மலையில்

லேற்றமிகு பெண்களு டனென்றும் விளையாடனம்
நாணமில்லாமை, யெண்ணாளுங் கொடுங் கோபம்,
வாணுதலா னேயிக்கமா தென்று சொல்லுவதாம்

110(அ) பரிமள சுகந்தா கரிர்தனவர் பாணம்
சரச சங்கீதவித்தை தன்னில் வெகுவிருப்பம்,
சார்ந்த தினமுந்தர்ம சிந்தை, கற்புடையாள்,
காந்தருவ தத்துவத்தின் கன்னிகையென்று சொல்லி
வெட்க மில்லாமை, மிகுந்தபல போசனமுந்
துற்கந்த வாசந் துடியான வார்த்தைகளும்,
ஊட்டின சரீரமடை யழுக்கு மாமிசமு
முட்டமது வுண்ணல், முறையில்லாதுர் நடத்தை,
நித்திரையில்லாமை, யிவைநேர்ந்த பெண்ணுமே பேயின்
தத்துவமா மென்று சாற்றினார் முன்னோர்கள்!

110(ஆ) அக்கினிக் கண்ணு, மழகு சற்றுமில்லாமை,
வக்கனை யாயாட, வரைவலியப் பிடித்திழுத்தல்,
மாறுபாடான மனமல்லுக் கட்டிப்புணரு
நாரியவள் தானே ராட்சதரின தத்துவமாம்!
ஆரிடத்தில னாலுமன்பு சற்று மில்லாமை,
மாறிமாறிப் பார்த்தால் மயிர்துவுந் தூணுதில
வேகமுறும் பசியு மிகுந்த பயமுடையாள்,
காகத்தின் தத்துவத்தின் கன்னியவளாகு மென்றார்!
கூடுகின்ற வாடவரைக் கூர்நகத்தாற் பல்லதனால்
நாடிக் கடிப்பதுவு நாணஞ் சற்றில்லாமை,

111(அ) நிறமதுவும் பங்கமதாய் நேத்திரத்தால் மருட்டல்,
குரங்கினுட தத்துவத்தின் கொம்பனையா ளாகுமென்றார்
தீண்டுமிண் டானசொல், தேகசுத்த மில்லாமை,
வண்டிவெடித்த குரல், மல்லுக்கட்டிப் புணர்தல்
மழுமாறி கண்டவரை வலியப் பிடித்திழுப்பள்,
கழுதையின் தததுவத்தின் கன்னியவளா குமென்றார்!

வையகத் திலேமேலர் மணவாளன் சொன்னபடி
மொய் குழலார் சாதிமூன்றின் குறியுரைப்போம்
மான்நிகர்த்த விழி,வாச மலர் முகமுந்,
தேனை நிகர்த்தமொழி, தேமற் படர்ந்தவுடல்,

111(ஆ) சுருண்டுநெரிந்த குழல் தும்பிப்பிடி நடையுந்,
திண்டகொவ் வைக்கனிவாய் செண்பகப் பூத்தேகமுமாம்!
மின்னிடையுந், தென்னமிளம் பாளை வாசமுமாய்,
அன்ன நடையும் மழகிலாதி யெனவும்,
வட்டமாய்(த்) தங்க நிறமான விளமார்பும்,
இட்டமுறு கல்லிக் கிசைந்திட்ட சற்குணமும்,
தற்கமிடு முன்கோபி சாப்பாடு மற்பமதாம்
இக்குறியின் மாதவளு மின்பமுள மானசாதி!

பெட்டைக் குதிரைச் சாதி

உயர்ந்து குளிர்ந்தவுச்சியுட் குழிந்தசான்ற கணங்கள்
உயர்ந்து பருத்த கொங்கையுதடு பருத்திருக்கும்,

112(அ)சாலப் பருத்தமயிர், தந்தமோ நீண்டிருக்கும்,
தாலவிடை பருத்துத் தாழிபோலே வயிறும்,
அடக்கமொன்று மில்லாமையல் குல்பணைத் திருக்கும்
மடக்கொடியாள் பேசுகின்ற வாய்மை குழறுதலாம்,
போசனத்திலே பிரியம், புணர்ந்தவர் மேலும் பிரியம்,
வீசும் புலால்நாற்ற மிரவுபகல் நித்திரையும்,
தீரா வெறுப்புஞ் சிவந்த பருவுடலுங்,
கூறானமாது, பெட்டைக் குதிரையென்று சொல்லினரே!

பிடியானைச் சாதி

சாலப்பருத்த நெற்றி, தாடை செவிநாசி
காலுடனேகை தோளுங் கழுத்தும் மிகப்பருத்து,

112(ஆ)சுருண்டு சிவந்த மயிர்தொங்கும் தரமுமா

முரண்டுநிதஞ் சண்டை, மொழியுமிடி போலாய்,
அல்லும் பகல்கல் வியானதிலே சிந்தையுமாய்,
பல்லுமிடை யுளதாய்(ப்) பாவத்துக் கஞ்சாமை,
ஆர்க்குமனு கூலியானை மத நாரி,
பார்க்கும் பனிரெண்டு அங்குலமா மல்குலது,
விடியளவுஞ் சண்டைவிடாள் வெட்கத்துக் கஞ்சாளாம்
பிடியானைச் சாதியென்று பேசினார் முன்னூலோர்!
இன்னம் சிலநிதி யெடுத்துமே கூறவென்றால்
வன்னமா யின்னூல் வளருமென முடித்தேன்.

வாழி

மகுடப் பாடல்

113(அ)ஐங்கரனும் வாழி ஆறுமுகன் வாழி
மங்கைபாகன் வாழி மாயன்பிரமன் வாழி
தூயமுனிவோர் வாழி சுத்தசைவர் வாழி
தேயசெங்கோல் செலுத்தும் நிருபர்மிக வாழி
கற்புடைய மாதர் கவிவாணர் தாம் வாழி
விற்பனமா யிதைப்படிக்கும் வித்தகரும் வாழி
கற்றவரும் மற்வரும் களிப்புடனே வாழி
திருமகள் விலாசயச்சியந்தி சாலையும் வாழியவே.

மனுநீதிக் காதல் நூலின் அடிக்குறிப்பு

நடேசர் பாதமே துணை.
மிதுலப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராசர்
குமாரன் குழந்தை வரைதல்

மனுநீதி காதல் முற்றுப் பெற்றது.

பின்னிணைப்பு

மனுநீதிக் காதல்

பாடல் உட்தலைப்பு அட்டவணை

தலைப்பு	ப . எண்
காப்புகள்	1
அவையடக்கம்	1
நூற்பயன்	2
வேதியரொழுக்கம்	3
அரசர் ஒழுக்கம்	4
வர்த்தரொழுக்கம்	4
வேளாளரொழுக்கம்	5
தரும நீதி	5
மாரிச் சிறப்பு	9
இல்லறம்	10
செல்வம் நிலையாமை	10
தெய்வச் செயல்	11
சுக போசனம்	13
நற்சகோதரர் துற்சகோதரர்	13
அரசிற் புகழ் பெற்றோர்	13
நல்லறிவு	14
கொல்லமை	17
கொடுநரகடைவோர்	18
துஷ்ட்ட நிக்கரகம்	19
காலம்	32
மாதா	33

பிதா	33
மைந்தர்	34
சோசியம்	35
லட்சுமி இருப்பிடம்	35
மூதேவியிருப்பிடம்	36
பகை	36
பகைவெறுப்பு	38
சேரிடம்	39
செல்லாவிடம்	39
அளவிடாமை	41
உதவி	42
உதவாமை	43
நற்பிறப்புத்தமர்	46
துற்பிறவித்துற்சனர்	49
நிறை	50
ஈகை	51
ஈகைக்கிடையூறு	51
சிநேகம்	52
சரீர சுகம்	52
நோயணுகல்	53
இறந்தும் இறவாதவர்	53
இறந்துமிறந்தவர்	54
பொருளின் பலன்	55
பொருள் வகை	56
நல்லறிவு கயவர்	57
புல்லறிவு கயவர்	57

வரம்பிலாமை	59
புல்லறிவு	59
பண்டிதன் பரீட்சை	60
ஆகாமை	62
பலனில்லாமை	64
லோபத்தனம்	68
இகழ்ச்சியீனம்	70
வெளிவிடக் கூடாதவை	71
கேடு	72
அரிது	74
இனிது	75
கொடிது	75
பெரிது	75
முக்கியமுள்ளது	76
கொடுமையாலழிந்தவர்	77
தாசியங்கம்	78
வேசையர்கள் வரலாறு	79
பெண்களால் பங்கம் அடைந்தவர்	79
புலுஷன்வாக்கில் பரிபாலனஞ் செய்தவர்	80
மூன்று யுகத்திலும்	80
பெண்கள் வரலாறு	80
கர்ம காண்டம்	81
ஒப்பனையானவை	82
பாரப்பழியில் கூடா ஒழுக்க மாண்பு	83
அன்புற்ற மகளிர்	83
பெண்களுடைய தத்துவம் பத்துக்கும் விபரம்	84
பெட்டைக் குதிரைச் சாதி	85
பிடயானைச் சாதி	85
வாழி	92

துணை நூற்பட்டியல்

1. **சம்பந்தம். மா.சு** அச்சும் பதிப்பும், மணிவாசகர் பதிப்பகம் 8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை–108, இ.ப. 1997.

2. **சம்பந்தம். மா.சு எழுத்தும் அச்சும்**, தமிழர் பதிப்பகம் 243,லிங்கிச் செட்டித் தெரு, சென்னை–1, மு.ப. 1981.

3. **திருலோக சீத்தாராம். மனுதர்ம சாஸ்திரம்**, அலைகள் வெளியீட்டகம், 25,தெற்குச் சிவன் கோயில் தெரு,கோடம்பாக்கம், சென்னை–24, மு.ப.1999.

4. **S. Kuppu Swami Sastri** - An Alphabetical Index of Tamil Manuscripts in the Government Oriental Manauscripts Library, Madras, 1932.

5. **R.Baskaran** - An Alphabetial Index of Tamil Manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras. 1980.